
# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

Issue No: 3 of 2002
ISBN 1173-7255

இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக்கூடாது.

ஆசிரியர்: ஆர். பாலா

**Editor**: R. Bala
**Publisher**: Sovereign Grace Publications
**Address**: P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone**: 64 9 272 8061
**Fax**: 64 9 272 8032
**email**: bala@ihug.co.nz
**Web site**: www.biblelamp.org

"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத்தடங்கல் என்றுதான் கூறவேண்டும்."

சி. எச். ஸ்பர்ஜன்
1834-1892

*நூலின் புதிய அமைப்பு வாசகர்களுக்கு வசதியாக இருக்கின்றதென்று வருகின்ற கடிதங்கள் மூலம் அறிந்து கொள்கிறோம். பல வேலைகளுக்கு நடுவில் இன்னுமொரு இதழை தேவனுடைய கிருபையின் துணையால் முடித்து அனுப்ப முடிந்திருக்கிறது. இந்த இதழில் வழமையான ஆக்கங்களுடன் கடைசிக் கால நிகழ்ச்சிகள் பற்றிய ஆக்கங்களையும் தந்துள்ளோம். வெளிப்படுத்தின விசேஷம் நமக்குப் புரியாத புதிர்போல் இருக்க வேண்டும் என்பதற்காக கர்த்தர் அதைத் தரவில்லை. வெளிப்படுத்தின விசேஷத்திற்கு அருமையான விளக்கத்தைத் தந்துள்ளவர்களில் என்னைப் பொறுத்தவரையில் வில்லியம் ஹென்றிக்சனே சிறந்தவர். அவரது நூலின் சாராம்சத்தை இவ்விதழில் தந்திருக்கிறோம். வாசகர்கள் அந்நூலை எந்தக் கோணத்தில் படிக்க வேண்டும் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். வெளிப்படுத்தல் விசேஷத்திற்கு விளக்கவுரை தந்து தமிழில் வந்துள்ள ஒரு நூலையும், ஆயிரம் வருட அரசாட்சி பற்றி எழுதப்பட்டுள்ள ஒரு நூலையும் விமர்சனம் செய்திருக்கிறோம். தமிழில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ நூல்கள் இருந்தபோதும் முத்தாகக் கருதிப் படிக்கக்கூடியவை மிகச்சிலவே. முடிந்தவரை நல்ல நூல்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவது எமது நோக்கம்.*

*இவ்விதழோடு 1 கொரிந்தியர் 12–14 வரையுள்ள வேதப்பகுதிகளுக்கு நாம் தந்த விளக்கங்கள் முடிவுக்கு வருகின்றன. அவை நல்ல பயன் தருகின்றன என்று அநேகர் எழுதியிருக்கிறார்கள். 1689 விசுவாச அறிக்கை இப்போது தமிழில் வெளிவந்துவிட்டது. அதைப் பெற்று வாசிப்பவர்களுக்கு துணைசெய்யும் வகையில் அதன் வரலாற்று, இறையியல் பின்னணியையும், அதன் விசேடதன்மைகளையும் விளக்கும் ஒரு ஆக்கத்தைத் தந்திருக்கிறோம். இது வாசகர்கள் 1689 விசுவாச அறிக்கையின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள துணை செய்யும் என்று நம்புகிறோம்.*

*நாளுக்கொன்றாக புதிது புதிதாக எதையாவது செய்து கொண்டிருக்கும் கெரிஸ்மெட்டிக் கூட்டம் பரலோகம் போன ஒருவன் திரும்பிவந்துவிட்டதாக சொல்லி இப்போது கூத்தாடிக் கொண்டிருக்கிறது. அதுபற்றியும் இவ்விதழில் வாசியுங்கள். கர்த்தர் நல்லவர். அவருடைய வருகைக்காக காத்திருக்கும் நாம் போலித்தனத்திலிருந்து நம்மைத் தொடர்ந்து காத்துக் கொண்டு பரிசுத்தமான வாழ்க்கையை வாழ முயல்வோம்.*

*- ஆசிரியர்*

# ஆயிரம் வருட அரசாட்சி

இதை நான் எழுதிக்கொண்டிருக்கும்வேளையில் இஸ்ரவேலும் பாலஸ்தீனியர்களும் தீவிரமாக சண்டையில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒவ்வொருமுறையும் இஸ்ரவேல் சண்டையில் ஈடுபடும்போதோ அல்லது தாக்கப்படும்போதோ அதில் அதிக அக்கறை எடுத்து எதிர்காலத்தைப்பற்றி தீர்க்கதரிசனம் சொல்ல கிறிஸ்தவர்களில் ஒருபகுதியினர் எப்போதுமே முயல்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரையில் இது இவர்களுடைய கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படை அம்சம். இதற்குக் காரணம் என்னவென்றால் கிறிஸ்துவின் ஆயிரம் வருட ஆட்சிபற்றி இவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையே. அது என்னவென்று இனிப் பார்ப்போம்.

வெளிப்படுத்தல் விசேஷத்தில் காணப்படும் ஆயிரம் வருட ஆட்சி, கிறிஸ்துவின் தலைமையில், இஸ்ரவேலைத் தலைநகராகக்கொண்டும், யூதர்களை மையமாகக் கொண்டும் இவ்வுலகில் கிறிஸ்துவின் இரகசிய இரண்டாம் வருகைக்குப் பின்பு, ஏற்படும் என்று இவர்கள் உறுதியாக நம்புகிறார்கள். இந்த ஆயிரம் வருட கால அரசு நடக்கும்போது உலகில் சமாதானமும், பொருளாதார விருத்தியும் காணப்படும் என்றும், இது ஒரு பொற்காலமாக இருக்கும் என்பதும் இவர்களுடைய நம்பிக்கை. கர்த்தரின் திட்டங்கள் அனைத்தும் இந்த ஆயிரம் வருட அரசாட்சியை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன என்றும், கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்து சிலுவையில் மரித்ததெல்லாம் யூதர்கள் கர்த்தருடைய திட்டத்தை ஏற்றுக்கொள்ளாததனால் ஏற்பட்ட விளைவே என்றும் இவர்கள் கூறுகிறார்கள். இஸ்ரவேலை மையமாகக்கொண்டு அமையவிருந்த ஆயிரம் வருட ஆரசாட்சிக்கு தடை ஏற்பட்டதனாலேயே இந்த உலகில் திருச்சபையை ஏற்படுத்த கர்த்தர் தீர்மானித்தார் என்றும் அது எப்போதுமே அவருடைய ஆரம்பத்திட்டமாக இருக்கவில்லை என்றும் இவர்கள் சொல்கிறார்கள். இந்தவிதத்தில் விளக்கம் கொடுப்பவர்களை பிரி-டிரிபியூலேசன் டிஸ்பென்சேஷனலிஸ்ட் (Pre-Tribulation Dispensationalist) என்று அழைப்பார்கள். இந்தவிதத்தில் ஆயிரம் வருட அரசாட்சி பற்றி நம்பிவரும் இந்தக் கிறிஸ்தவர்கள் மத்தியில் இதுபற்றி வேறுபாடான பல்வேறு விளக்கங்களும் நிலவுகின்றன. இவர்களைப் பொறுத்தவரையில் இந்தப்போதனை அடிப்படைப் போதனை. இதை விசுவாசிக்காமல் இவர்கள் நடத்தும் இறையியல் கல்லூரிகளில் இருந்து ஒருவரும் பட்டம் வாங்கிவிட முடியாது. அந்தளவுக்கு இந்த விஷயத்தில் இவர்கள் கொள்கைப்பற்று உடையவர்களாயிருக்கிறார்கள்.

### இதைப்பற்றி நாம் அலட்டிக் கொள்ள வேண்டுமா?

இவர்களுடைய நம்பிக்கை சரியானதா? என்றும், வேதம் போதிப்பதைத்தான் இவர்கள் நம்பிவருகிறார்களா? என்றும் நாம் ஆராய வேண்டியது அவசியம். ஏனென்றால் தமிழ் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் இந்தக் கோட்பாடு இன்று வேரூன்றி நிற்கிறது. அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, ஜே. என், டார்பியின் நூல்கள், சீ. ஐ. ஸ்கோபீல்ட் வேதக்குறிப்புகள் போன்றவற்றாலும், நூற்றுக்கணக்கான அமெரிக்க கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்கள் மூலமாகவும் இது தமிழ்க்கிறிஸ்தவர்கள் மத்தியில் பரவி வேரூன்றி நிற்கிறது. பாலைவன மணலில் தலையைப் புதைத்துக் கொண்டு என்னை யாரும்

பார்க்கவில்லை என்று நினைக்கும் தீக்கோழிபோல் நடந்து, இது ஒரு பெரிய காரியமில்லை, இதைப்பற்றியெல்லாம் நாம் அலட்டிக் கொள்ளக்கூடாது என்று இப்போதனையை நாம் அசட்டை செய்துவிட முடியாது. கிறிஸ்தவ விசுவாசத்தையும்., கிறிஸ்தவ இறையியலையும் இப்போதனை இன்று பெரிதும் பாதித்து வருகிறது. எனவே வேதம் ஆயிரம் வருட அரசாட்சி பற்றி என்ன சொல்கிறது என்று நாம் கவனிக்கத்தான் வேண்டும்.

## வேதத்தை விளக்கும் விதி முறைகள்

ஆயிரம் வருட ஆட்சியை வேதத்தில் ஒரே ஒரு பகுதியில் மட்டுமே நாம் வாசிக்கிறோம். வெளிப்படுத்தல் விசேஷத்தில் **20** அதிகாரத்தில் மட்டுமே அதுபற்றிய குறிப்பு காணப்படுகின்றது **(20:2, 4, 6).** வேதத்தில் வேறு எங்கேயும் அதைப் பார்க்க முடியாது. இதிலிருந்து நாம் ஆரம்பத்திலேயே வேதவிளக்க விதிமுறைகள் பற்றிய ஒரு முக்கியமான உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். வேதத்தின் ஒரு வசனத்தை வைத்துக் கொண்டு நாம் ஒருபோதும் ஒரு சத்தியத்தை உருவாக்கக்கூடாது. அது ஆபத்தானது. அதுவும் அந்த ஒரு வசனத்தில் சொல்லப்படுவதை நாம் வெளிப்படையாயும், தெளிவாயும் புரிந்து கொள்ளமுடியாவிட்டால் அதிலிருந்து ஒரு போதனையை நாம் ஒருக்காலுமே உருவாக்கக்கூடாது. ஒரு வசனத்தில் இருக்கும் போதனை எப்போதும் பல வேதப்பகுதிகளால் நிரூபிக்கப்படுவது மிக அவசியம். இந்த அடிப்படையில் பார்த்தால் வெளிப்படுத்தல் விசேஷத்தின் **20** ம் அதிகாரத்தின் ஆயிரம் வருட ஆட்சி பற்றிய குறிப்பை வைத்து உடனடியாக ஒரு முடிவுக்கு வந்து ஒரு போதனையை உருவாக்குவது தவறு. ஏனெனில் வெளிப்படையாக, தெளிவாக அந்த ஆயிரம் வருட ஆட்சி என்ன? என்று அந்த வசனத்தில் சொல்லப்படவில்லை. வேதத்தின் ஏனைய பகுதிகளை வைத்தே அது என்ன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த **20** ம் அதிகாரத்தின் **2ம், 3ம், 4ம், 5ம், 6ம், 7ம்** வசனங்களில் காணப்படும் ஆயிரம் வருட அரசாட்சி பற்றி இந்த அதிகாரம் தானே முன்வந்து விளக்காதவரை இது இதைத்தான் குறிக்கிறது என்று நாம் தீர்மானமாக சொல்ல முடியாது. உண்மையில் இந்த அதிகாரம் அது என்ன என்பதை நேரடியாக விளக்கவில்லை என்பதை வேதத்தை முதல் தடவை வாசிப்பவர்கள்கூட புரிந்து கொள்வார்கள். இதற்கு பதிலளிக்கும் டிஸ்பென்சேஷனலிஸ்டுகள், இதில் புரிந்து கொள்வதற்கு என்ன இருக்கிறது? அதுதான் தெளிவாக ஆயிரம் வருடங்கள் என்று கொட்டை எழுத்துக்களில் மூன்று முறை சொல்லப்பட்டிருக்கிறதே, அதைவிட வேறு என்ன விளக்கம் வேண்டும்? ஆயிரம் வருடங்கள் என்றால் எழுத்து பூர்வமான ஆயிரம் வருடங்கள்தான். அதுகூட புரியவில்லையா? வேதத்தை எப்போதும் எழுத்து பூர்வமாக விளக்க வேண்டும் என்பது வேதவிளக்கவிதி முறைகளில் முக்கியமானது என்பது தெரியாதா? என்று முகத்தில் அடிப்பதுபோல் சொல்வார்கள்.

இவர்கள் கூறுவதில் ஒரளவுக்கு உண்மை இருக்கின்றது. வேதவசனங்களுக்கு நாம் எப்போதும் எழுத்து பூர்வமாக விளக்கம் (Literal interpretation) கொடுக்க வேண்டும் என்பது வேதவிளக்க விதி. ஆனால், எழுத்து பூர்வமாக விளக்கம் கொடுப்பது என்பது என்ன? என்பதைத்தான் இவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இவர்கள் வேதத்தின் ஒவ்வொரு வசனத்திற்கும், சொல்லுக்கும் எழுத்து பூர்வமாக அல்லாமல் வேறு எந்தவிதத்திலும் விளக்கம் கொடுக்கக்கூடாது என்கிறார்கள். இது நடைமுறைக்குக்கூட பொருந்தாத

ஒருவாதம். உதாரணத்திற்கு, நான் ஒரு உண்மையைக் கதை மூலமாக சொல்லப்போகிறேன் என்று சொன்னால் அந்தக்கதை மூலம் நான் சொல்லப் போகும் உண்மையைத்தான் புரிந்து கொள்ள வேண்டுமே தவிர நான் சொல்கிற கதையின் ஒவ்வொரு பகுதிக்கும் பொருள் தேடி அலையக்கூடாது. கதை விளக்கும் உண்மைதான் அவசியமே தவிர கதையின் ஒவ்வொரு பகுதியும் அல்ல. கதையின் ஒவ்வொரு பகுதிக்கும் சொல்லுக்கு சொல் விளக்கம் தேடி அலைந்தால் அது விளக்கும் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது. எனவே எழுத்துபூர்வமாக சொல்லுக்கு சொல் விளக்கம் கொடுப்பது என்பது ஒரு கதையை கதை என்று உணர்ந்து விளக்கம் கொடுப்பதாகும். கதையைக் கதையாகவும், வரலாற்றை வரலாறாகவும், சங்கீதங்களை சங்கீதங்களாகவும், உவமைகளை உவமைகளாகவும், அடையாளங்களை அடையாளங்களாகவும் பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். அதேநேரம் தெளிவாகவும், நேரடியாக-வும் விளக்கம் தரும் பகுதிகளை வேறுவிதத்தில் பார்க்கவும் (உருவகப்படுத்தக் - Allagorizing) கூடாது. இந்த முறையில் உள்ளதை உள்ளபடியாக படித்து விளக்கம் கொடுப்பதைத்தான் எழுத்து பூர்வமாக விளக்கம் கொடுப்பது என்று வேத வல்லுனர்கள் சொல்லுகிறார்கள். அது புரியாமல் ஒரு உவமையை உவமை என்று தெரியாமல் அதன் எல்லாப் பகுதிகளுக்கும் விளக்கம் கொடுப்பது அறிவீனத்தைத் தவிர வேறில்லை.

வெளிப்படுத்தல் விசேஷம் அடையாள மொழிகளால் நிரம்பி வழிகிறது. வேதத்தின் இந்த நூல் மட்டுமே இந்தளவுக்கு அடையாள மொழிகளைக் கொண்டிருக்கிறது. உதாரணமாக **20** ம் அதிகாரத்தின் ஆரம்பத்தில் **(20:1, 2)** ஒரு தூதன் சாத்தானைப் பிடித்து ஒரு பெரிய சங்கிலியால் கட்டி வைக்கிறான் என்று வாசிக்கிறோம். இதற்கு நாம் எப்படி சொல்லுக்கு சொல் விளக்கம் கொடுக்க முடியும்? எழுத்து பூர்வமாக விளக்கம் கொடுத்தால் சாத்தான் இன்று பெரிய சங்கிலியால் கட்டப்பட்டு எங்கோ ஒரு சிறையில் அல்லவா இருக்க வேண்டும். இதை வாசிக்கும்போதே நமக்கு இது அடையாள மொழி என்பது புரிகிறது. ஆகவே, இங்கே அடையாள மொழியில் போதிக்கப்படும் சத்தியம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

டின்பென்சேஷனலிஸ்டுகள் விடும் பெருங்குறை அவர்களுடைய வேதவிளக்க விதிமுறையே (Interpretive principle). வேதம் நேரடியாக விளங்கிக் கொள்ளக்கூடிய பகுதிகளை (பவுலின் நிருபங்கள் போன்றவை) மட்டும் கொண்டிராமல் வரலாற்றையும், உவமைகளையும், சங்கீதங்களையும், உருவகங்-களையும், அடையாளங்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றதென்ற உண்மை இவர்களுக்கு புரிந்திருந்தபோதும் அவை எல்லாவற்றிற்கும் இவர்கள் எழுத்து பூர்வமாக, சொல்லுக்கு சொல் விளக்கம் கொடுக்கிறார்கள். இது பெரும் தவறு. இவர்களுடைய வேதவிளக்க முறையே இவர்களுடைய தவறான போதனைகளுக்கெல்லாம் காரணாக அமைந்துவிடுகிறது.

### வெளிப்படுத்தல் விசேஷத்தின் 20ம் அதிகாரம்

இனி ஆயிரம் வருட அரசாட்சி பற்றி பேசும் வெளிப்படுத்தல் விசேஷத்தின் **20**ம் அதிகாரத்தைக் கவனிப்போம். இந்த அதிகாரத்திலிருந்து நாம் சுருக்கமாக ஆயிரம் வருட ஆட்சிக்கான விளக்கத்தை மட்டுமே கொடுக்க முடியும். ஏனைய பகுதிகளை விளக்க இந்த ஆக்கத்தில் இடமில்லை. ஆகவே, வாசகர்கள் நாம் கொடுக்கப்போகும் விளக்கத்தையும், வசனங்களையும் வைத்து மேலும் ஆராய்ந்து ஏனைய பகுதிகளையும் படிப்பது பயன் தரும்.

இப்பகுதியில் காணப்படும் ஒழுங்கை (Order) முதலில் கவனிப்போம். **2**ம் வசனம் ஆயிரம் வருட ஆட்சியைப் பற்றி அறிவிக்கிறது. ஆயிரம் வருடங்கள் முடியும் தருவாயில் வலுச்சர்ப்பம் சிறையில் இருந்து விடுவிக்கப்படும் (**7**ம் வசனத்தைப் பாருங்கள்). இந்த விடுதலை கொஞ்சக்காலத்துக்குத்தான் என்று **3**ம் வசனம் சொல்கிறது. இதுவே சாத்தானின் கொஞ்சக்காலம் (Satan's little season) என்று அழைக்கப்படுகிறது. வலுச்சர்ப்பத்தின் இந்தக் கொஞ்சக்கால விடுதலைக்குப்பின் இயேசுவின் இரண்டாம் வருகை நிகழும் என்றும், அப்போது அவர் வெள்ளைச் சிங்காசனத்தில் அமர்ந்திருப்பாரென்றும், அவ்வேளையில் மரித்தோராகிய சிறியோரும், பெரியோரும் உயிர்த்தெழுவார்களென்றும் **11**ம், **12**ம் வசனங்களில் வாசிக்கிறோம். வேதத்தின் ஏனைய பகுதிகளில் சொல்லப்பட்டிருப்பது போலவே இப்பகுதியும் இரண்டாம் வருகைக்குப்பிறகு இறுதி நியாயத்தீர்ப்பு நிகழும் என்று சொல்கிறது (**13**ம் வசனம்). எனவே பின்வரும் படிமுறை விபரத்தை இவ்வதிகாரம் அளிக்கிறது:

(1) ஆயிரம் வருட அரசாட்சி
(2) அடுத்து, சாத்தானின் கொஞ்சக்காலம் (Satan's little season)
(3) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும், மரித்தோரின் உயிர்த்தெழுதலும்
(4) நியாயத் தீர்ப்பு

இதுவே இப்பகுதியில் உள்ள ஒழுங்குமுறை. இதை நாம் மாற்றப் பார்க்கக்கூடாது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப்பிறகு யூதர்களைக் கொண்ட ஆயிரம் வருட ஆட்சி ஏற்படும் என்று சொல்பவர்கள் நல்ல நோக்கத்தைக் கொண்டிருந்தாலும் அப்போதனைக்கு இந்தப்பகுதியில் இடமில்லை. அவர்கள் இங்கே தெளிவாகக் காணப்படும் ஒழுங்குமுறையை தங்கள் வசதிக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்கிறார்கள். வெளிப்படுத்தல் விசேஷத்தின் **20** ம் அதிகாரம் போதிப்பதை அதில் காணப்படும் விளக்கத்தின்படியே புரிந்து கொள்ள வேண்டும்.

### 1–3 வசனங்களில் யோவான் கண்ட காட்சி

இந்தக்காட்சி அடையாள மொழியில் இருக்கிறது. இதற்கு உடனடியாக பொருள் தேடமுயலாமல் முதலில் அதை எழுத்து பூர்வமாக விளங்கிக் கொள்வோம். ஒருதூதன் பரலோகத்தில் இருந்து வருவதை யோவன் பார்க்கிறான். அவன் கையில் ஒரு திறவுகோள் இருக்கிறது. அந்தத் திறவுகோளால் அவன் பாதாளத்தை மூடி அதில் முத்திரை வைக்கப் போகிறான். பாதாளம் ஆழமானது அதன் மேல் ஒரு மூடி இருக்கிறது. அந்த மூடியைத் திறக்கலாம். அதை மூடித் திறக்கமுடியாதபடிமுத்திரை போட்டும் வைக்கலாம். தூதனின் கைகளில் இரண்டு பக்கங்களிலும் தொங்கிக் கொண்டிருக்கும் பெரிய இரும்புச் சங்கிலி இருக்கிறது. இந்தக் காட்சியின்படி தூதன் ஒருவனை சங்கிலியால் கட்டி பாதாளத்தில் தள்ளி அதைத் திறக்க முடியாதபடி மூடிமுத்திரையிடப் போகிறான். யோவான் அப்போது திடீரென வலுச்சர்ப்பமொன்றைக் காண்கிறான். அதுவே, சாத்தான் என்று அழைக்கப்படும் பிசாசு. தூதன் சாத்தானைப் பிடித்து சங்கிலியால் அசைய முடியாதபடி இருக்கமாகக் கட்டி பாதாளத்தில் தள்ளி அதன்மூடிக்கு முத்திரை இடுகிறான். சாத்தான் ஆயிரம் வருடங்களுக்கு இப்படியாக கட்டி வைக்கப்படுகிறான். இதுவே யோவான் கண்ட காட்சி.

### காட்சிக்கான விளக்கம்

இதில் நாம் பார்க்கும் வலுச்சர்ப்பம் பிசாசாகிய சாத்தான். அவன் தூதனால்

கட்டிவைக்கப்படுவதற்கும், உலக நாடுகளுக்கும் பெருந்தொடர்பு இருக்கின்றது மத்தேயு **12:29**; லூக்கா **10:17, 18** & யோவான் **12:20-32** ஆகிய பகுதிகள் இது என்ன என்று விளக்குகின்றன. மத்தேயு 12:29ல் அது காணப்படும் பகுதியின் போதனையின்படி இயேசு தன்னுடைய முதலாம் வருகையின்போது பலவா-னாகிய பெயல்சேபூவைக் கட்டிவைக்கிறார். லூக்கா **10:17, 18** லும் யோவான் **12:20-32** லும் பெயெல்சேபூ எந்தவிதத்தில் கட்டிவைக்கப்படுகிறான் என்பதை, அதாவது இப்பகுதிகான விளக்கம் என்ன என்பதைத் தெரிவிக்கின்றன. இப்பகுதிகள், உலக நாடுகளெல்லாம் நற்செய்தி பரவுவதை சாத்தான் தடை-செய்யமுடியாதபடி இயேசு அவனுடைய ஆதிக்கத்தைப் பெருமளவுக்கு அடக்குகிறார் என்று விளக்குகின்றன. நற்செய்திப் பிரசங்கம் செய்யும்படித் தான் அனுப்பிய எழுபதுபேரும் சந்தோஷத்தோடு திரும்பி வந்தபோது இயேசு அவர்களைப்பார்த்து, “சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிற-தைக் கண்டேன்” என்றார். யோவான் **12** ன்படி, சில கிரேக்கர்கள் இயேசுவைப் பார்க்க விரும்பியபோது, இயேசு அவர்களைப்பார்த்து, “இப்பொழுதே இந்த உலகத்தின் அதிபதி (சாத்தான்) புறம்பாகத் தள்ளப்படுவான். நான் பூமியில் இருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்-கொள்வேன்” என்றார். இயேசு இங்கே யூதர்களை மட்டும் இழுத்துக் கொள்-வேன் என்று சொல்லாமல் “எல்லாரையும்” இழுத்துக் கொள்வேன் என்று சொல்லியிருப்பதைக் கவனியுங்கள். அதாவது யூதர்கள், கிரேக்கர்கள் அனை-வரையும் அவர் இழுத்துக் கொள்ளப் போகிறார்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இரட்சிப்பு பெருமளவில் யூதர்கள் மத்தியில் நிகழ்ந்தது. அது இப்போது முற்றாக மாறுகின்றது. திருச்சபை உலகம் முழுவதும் ஏற்படுத்தப்படுகின்றது. நற்செய்தி எல்லா இடங்களிலும் பிரசங்கிக்கப்பட்டு உலகத்தில் உள்ள, தெரிந்து கொள்ளப்பட்டவர்களெல்லாம், திருச்சபைக்குள் கொண்டுவரப்படுகின்றனர். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை அறிவிக்-கின்ற ஆரம்ப அடையாளமாக இந்த நற்செய்தியின் காலம் இருக்கின்றது.

எனவே, சாத்தான் ஆயிரம் வருடங்களுக்கு கட்டிவைக்கப்படுவது என்பது, கிறிஸ்துவின் முதலாம் வருகையில் ஆரம்பித்து அவருடைய இரண்டாம் வருகைவரையும் உள்ள இந்த நற்செய்திக் காலத்தைக் குறிக்கின்றது. அந்த ஆயிரம் வருட காலத்தின் மத்தியிலேயே நாம் இப்போது வாழ்ந்து கொண்-டிருக்கிறோம். இந்தக் காலப்பகுதியில் திருச்சபை மூலம் நாடுகள் பூராவும் நற்செய்தி பரவுவதை சாத்தானால் தடைசெய்ய முடியாது. அதேவேளை நாடு-களைப் பயன்படுத்தி சுவிசேஷத்தைப் பரப்பிக் கொண்டிருக்கும் திருச்சபையை சாத்தானால் அழிக்கவும் முடியாது. இந்தக் காலப்பகுதியில் உலகம் முழுவதும் சுவிசேஷம் பரவினாலும் முழு உலகமும் கிறிஸ்தவ உலகமாக மாறிவிடாது. அதேவேளை சாத்தானும் தன்னுடைய எதிர்ப்பைக் காட்டிக் கொண்டே இருப்பான். அழிவு வேலைகளையும் செய்து கொண்டிருப்பான். அவன் கட்டி வைக்கப்பட்டிருந்தாலும் அவனுடைய திருவிளையாடல்கள் நின்றுவிடாது. அவன் திமிறிக் கொண்டு நாச வேலைகளில் ஈடுபட்டாலும் இந்த நற்செய்திக்-காலப்பகுதியில் உலகம் பூராவும் உள்ள தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அவனுடைய பொய்யை நிராகரித்து சத்தியத்தை விசுவாசிப்பதை அவனால் தடுத்து நிறுத்த முடியாது. இயேசுவின் இரண்டாவது வருகைக்கு முன்பாக சாத்தான் கொஞ்சக்காலத்துக்கு விடுதலை செய்யப்படும்போது அவன் பேரட்டூழியங்களைச் செய்வான். இதுவே அந்திக் கிறிஸ்துவின் காலமாகவும் இருக்கும். இக்காலத்தில் நற்செய்தி ஊழியங்கள் பாதிக்கப்படும். திருச்சபை

*உபத்திரவத்தைச் சந்திக்கும்.*

### சிறையில் சாத்தான், பரலோகத்தில் பரிசுத்தவான்களின் ஆட்சி

*இந்த உலகத்தில் நடக்கும் ஆயிரம் வருட காலம் சாத்தான் கட்டி வைக்கப்பட்டிருக்கும் காலமென்று இதுவரை விளக்கினோம். அதேவேளை பரலோகத்தில் காணப்படும் ஆயிரம் வருடங்கள் பரிசுத்தவான்களின் ஆளுகையின் காலமாக இருக்கின்றது. இவை இரண்டும் பிரிக்க முடியாதபடி இணைந்திருக்கின்றன. வெளிப்படுத்தல் விசேஷத்தின் **20** ம் அதிகாரத்தின் **4-6** வரையிலான வசனங்கள் பரிசுத்தவான்களின் ஆயிரம் வருட பரலோக ஆட்சியைப்பற்றி விளக்குகின்றன. இயேசு இந்த உலகத்தில் திருச்சபையை நிறுவி, சாத்தானைக் கட்டி ஆயிரம் வருட ஆட்சியை ஆரம்பித்த அதேவேளை ராஜாவாக பரலோகத்திலும் பரிசுத்தவான்களுடன் இணைந்து ஆள்கிறார். இதை இனி சிறிது விளக்கமாகப் பார்ப்போம்.*

### பரலோக ஆட்சி எப்போது நடக்கப்போகிறது?

*இந்த உலகத்தில் ஆயிரம் வருட ஆட்சி கிறிஸ்துவின் முதலாம் வருகையில் ஆரம்பித்து அவருடைய இரண்டாம் வருகை சமீபிக்கும்வரை நடக்கும் என்று ஏற்கனவே பார்த்தோம். இரண்டாம் வருகைக்கு முன்பாக சாத்தான் கொஞ்சக்காலத்துக்கு கட்டவிழ்க்கப்பட்டு தன்னுடைய அட்டகாசங்களைச் செய்ய அனுமதிக்கப்படுவான். இந்தக் காலமே அந்திக் கிறிஸ்துவின் காலமும் பேருபத்திரவ காலமுமாக இருக்கும். இதன்பின் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிகழும். பரலோகத்தில் இக்காலத்தில் எந்தவித உபத்திரவத்திற்கும் இடமிருக்காது. இவ்வுலகில் நாம் பார்க்கப்போகும் 'சாத்தானின் கொஞ்சக்காலத்திற்கு' பரலோகத்தில் இடமில்லை. ஆகவே, பரலோகத்தில் பரிசுத்தவான்களின் ஆயிரம் வருட ஆட்சி கிறிஸ்துவின் முதலாம் வருகையில் இருந்து இரண்டாம் வருகைவரையும் முழுமையாக எந்தவிதத்தடையும் ஏற்படாது நடக்கும். இக்காலப்பகுதியில் பரலோகத்தில் உள்ள பரிசுத்தவான்கள் சரீரம் இல்லாதவர்களாக ஆத்துமாக்களாக மட்டுமே இருந்து ஆள்கிறார்கள் என்று **4-6** வரையுள்ள வசனங்கள் சொல்வதையும் கவனியுங்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அவர்களுடைய சரீரங்கள் உயிர்த்தெழுந்து ஆத்துமாக்களோடு இணைந்து கொள்ளும். ஆகவே, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரையுமே பரலோகத்தில் பரிசுத்தவான்களின் ஆட்சி நடைபெறுகிறது.*

### பரலோக ஆட்சி எங்கே நடக்கப்போகிறது?

*எங்கே சிங்காசனங்கள் இருக்கின்றனவோ அங்கேயே இவ்வாட்சி நடக்கப்போகின்றது **(4)**. கிறிஸ்துவின் சிங்காசனமும், அவருடைய மக்களும் பரலோகத்திலேயே இருக்கிறார்கள் என்று வெளிப்படுத்தல் விசேஷத்தின் ஏனைய பகுதிகள் அனைத்தும் விளக்குகின்றன. அங்கேயே கிறிஸ்துவிற்கான சாட்சியின் நிமித்தம் இரத்தசாட்சியாக மரித்தவர்களுடைய ஆத்துமாக்களும் சரீரமற்று இருக்கின்றன. யோவான் ஆத்துமாக்களையே தன்னுடைய விண்ணகக் காட்சியில் கண்டார்; சரீரங்களையல்ல. அந்த ஆத்துமாக்கள் பரலோகத்தில் இருக்கிறார்கள். அங்கேயே கிறிஸ்துவும் இருக்கிறார். **4**ம் வசனத்தில் அவர்கள் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருடங்கள் அரசாண்டார்கள் என்று வாசிக்கிறோம். தமிழ் வேதத்தில் **4**ம் வசனத்தின் கடைசிப்பகுதியில், "அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருடங்கள் அரசாண்டார்கள்" என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தில் "உயிர்த்து" என்ற வார்த்தை எதைச் சொல்கிறது*

*என்பதை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். அந்த ஆத்துமாக்கள் ஜீவனுள்ளவையாக பரலோகத்தில் இருக்கின்றன என்ற உண்மையை விளக்குகிறது.*

### இவ்வாட்சியின் மெய்த்தன்மை என்ன?

*இது கிறிஸ்துவோடு ஆத்துமாக்கள் ஜீவனுடன் வாழ்வதை விளக்குகிறது. **4**ம் வசனம் அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட அரசாண்டார்கள் என்று கூறுகிறது. இந்த உலகில் அவர்களை வெறுத்து அழித்தவர்களுக்கு உண்மையில் முழுத்தோல்விதான். பரலோகத்தில் இந்த ஆத்துமாக்கள் கிறிஸ்துவோடு சகல நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள். அவர்கள் கிறிஸ்துவோடு குதிரைகளில் செல்வதாக அடையாள மொழியில் விளக்கப்படுகிறது. அவர்கள் கிறிஸ்துவோடு நியாயந்தீர்ப்பதோடு, கிறிஸ்துவின் நீதியைத் தொடர்ந்து பாராட்டித் துதிக்கிறார்கள். கிறிஸ்துவின் ஆட்சியின் மகிமையில் அவர்களுக்கு ஒரு பங்கு இருக்கிறது. கிறிஸ்துவோடு அவர்கள் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுடைய நெற்றியில் கிறிஸ்துவின் பெயர் இடப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவோடு இவர்கள் அனைவரும் தங்கள் தலையில் தங்கக் கிரீடத்ததை அணிந்திருக்கிறார்கள். இப்படியாக இவர்கள் பரலோகத்தில் ஆள்கிறார்கள்.*

### யார் இதில் பங்குகொள்கிறார்கள்?

*முதலாதாக கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தவர்களும் - "தேவனுடைய சாட்சியினிமித்தமும், வசனத்தினிமித்தமும் சிரச்சேதம் செய்யப்பட்டவர்களுடைய ஆத்துமாக்கள்" (4). இரண்டாவதாக கிறிஸ்துவுக்குள் மரித்த அனைத்துக் கிறிஸ்துவர்களும் - "மிருகத்தையாவது அதன் சொரூபத்தையாவது வணங்காமல் இருந்தவர்கள்" (4). இவர்களே கிறிஸ்துவோடு பரலோகத்தில் ஆயிரம் வருடங்களுக்கு ஆளுகிறார்கள்.*

*இதுவே வெளிப்படுத்தல் விசேஷம் விளக்கும் ஆயிரம் வருட ஆட்சி. இது உலகத்தில் எழுத்து பூர்வமாக (Literal) யூதர்களைக் கொண்டு அமையப்போகும் கிறிஸ்துவின் ஆட்சியைக் குறிக்கவில்லை. கிறிஸ்துவின் முதலாம் வருகையிலிருந்து இரண்டாம் வருகை சமீபிக்கும் காலம் வரையிலான ஒரு நீண்ட காலப்பகுதியை மட்டுமே விளக்குகிறது. இந்தக்காலப்பகுதியில் பரலோகத்தில் ஆத்துமாக்கள் கிறிஸ்துவோடு ஆட்சி செய்கிறார்கள். இக்காலப்பகுதியில் சாத்தான் நாடுகளை மயக்கித் தன்வசப்படுத்தி திருச்சபையை அழிக்க முடியாதளவுக்குக் கட்டி வைக்கப்பட்டுள்ளான். இவ்வதிகாரத்தின் **1-10** வரையிலான வசனங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு நிகழும் காரியங்களையே விளக்குகின்றன. அவருடைய வருகைக்கு முன்பு சாத்தான் கட்டவிழ்த்து விடப்பட்டு கொஞ்சக்காலம் அட்டூழியங்களைச் செய்வான் (**7-9**). இறுதியில் அவனைக் கிறிஸ்து தன்னுடைய வருகையின்போது நிர்மூலமாக்குவார் (**8-10**). அதற்குப் பின்பே நியாயத்தீர்ப்பு அனைவருக்கும் நிகழும். இதிலிருந்து பிரி-டிரிபியூலேசனல் டின்பென்சேஷனலிசம் இவ்வதிகாரத்திற்குக் கொடுக்கும் விளக்கம் எத்தனைத் தவறானது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அடையாள மொழியில் காணப்படும் இப்பகுதிக்கு அவர்கள் எழுத்து பூர்வமான விளக்கம் கொடுத்து எதிர்காலத்தில் யூதர்களைக் கொண்ட தேவ இராஜ்யம் இந்த உலகத்தில் ஏற்படும் என்று சொல்வது வேதத்தில் காண முடியாத போதனை. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நற்செய்திக் காலப்பகுதியிலேயே தேவ இராஜ்யமும் கர்த்தருடைய மக்கள் மத்தியில் நடந்து கொண்டிருக்கிறது. வரப்போகும் ராஜா நீதியின் தேவனாக எல்லோரையும் நியாயந்தீர்க்க வரப்போகிறார். யூத இராஜ்யத்தை நிறுவதற்காக அல்ல.*

# 1689 விசுவாச அறிக்கை - இது ஏன் அத்தனை முக்கியமானது?

நாம் ஏற்கனவே 1689 விசுவாச அறிக்கையின் முக்கியத்துவத்தைக் குறித்து இவ்விதழ்களில் எழுதியிருக்கிறோம். இன்று அது தமிழில் வெளி-வந்திருப்பதாலும், விசுவாசிகளும், சபைகளும் அதனை வாங்கி வாசிக்க ஆரம்பித்திருப்பதாலும், இது ஏன் வெளியிடப்பட்டது? இதன் சிறப்பான அம்சங்கள் யாவை? இதன் முக்கியத்துவம் யாது? இதனை எப்படிப் பயன்-படுத்திக் கொள்ள வேண்டும்? என்று வாசகர்கள் அறிந்திருப்பது மிகவும் அவசியமாகிறது. ஒரு விசுவாச அறிக்கையை சொந்தமாக தாமே எழுதிவைத்துக் கொள்ளாமல், பலநாடுகளிலும் ஒரே விசுவாசத்தைக் கொண்டிருக்கும் ஆயிரக்-கணக்கான சபைகளால் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக இது மட்டும் ஏன் பயன்படுத்தப்பட்டுவருகிறது? திருச்சபை வரலாற்றில் பேரறிஞர்களையும், பெரும் வேத வல்லுனர்களையும் பயன்படுத்தி கர்த்தர் ஏன் இப்படியொரு விசுவாச அறிக்கையைத் தந்தார்? என்பதை அறிந்து கொள்ளத்தானே வேண்டும். ஆகவே, இந்த ஆக்கத்தில் அதை நாம் ஓரளவுக்கு விளக்கமாக ஆராயப்போகிறோம்.

### 1689 விசுவாச அறிக்கையின் வரலாற்றுப் பின்னணி

இந்த விசுவாச அறிக்கை சீர்திருத்த கால வரலாற்றின் மத்தியில் எழுந்ததால் அந்த வரலாற்றை ஓரளவுக்கு அறிந்திருந்தால் மட்டுமே இதன் மூலம் வேத சத்தியங்களின் முழுப்பயனையும் நாம் அடைய முடியும். “இந்த விசுவாச அறிக்கையின் முக்கியத்துவத்தை இதன் வரலாற்று, இறையியல் பின்னணியை அறிந்திருப்பதால் மட்டுமே நாம் அதிகமாக அறிந்து கொள்ள முடியும்” என்று ஜேம்ஸ் ரெனிகன் என்ற தற்கால சீர்திருத்த பாப்திஸ்து இறையியல் வல்லுனர் எழுதுகிறார். நாம் இந்த விசுவாச அறிக்கை பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இருந்த சீர்திருத்த பாப்திஸ்து பெரியோர்களால் எழுதப்பட்டது (1689) என்பதை அறிவோம். அந்தக் காலத்தில் திருச்சபை ரோமன் கத்தோலிக்-கத்தின் கொடூரமான பிடியில் இருந்து விடுபட்டு வெளியே வந்திருந்தபோதும் வேறு பல தொல்லைகளைத் தன் வாழ்வில் சந்திக்க வேண்டி இருந்தது. அந்தத் தொல்லைகள் அரசியல் தொல்லைகளாக மட்டுமல்லாமல், வேதபோதனைகள் குறித்ததாகவும் இருந்தன.

அக்காலத்தில் திருச்சபை கூடி வர முடியாதபடி அரசின் சட்டம் இருந்தது. ரோமன் கத்தோலிக்க மதம் ஆட்சி புரிந்த காலத்தைப் போலவே தொடர்ந்து அரசு திருச்சபையின் பாதுகாவலன் என்ற முறையில் இயங்கி வந்ததால் இங்கிலாந்து திருச்சபை (Church of England - ஆங்கிலிக்கன்) அரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. அரசு திருச்சபையில் வேதத்துக்கு விரோதமான செயல்களை அறிமுகப்படுத்தியபோது அதற்குக் கட்டுப்பட மறுத்த சீர்திருத்தவாதிகள் சபையாக கூடி வர முடியாத நிலை இருந்தது. அநேக கிறிஸ்தவர்களும், திருச்சபைப் போதகர்களும் துன்புறுத்தலுக்குள்ளாகி சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். மதசுதந்திரமும், வழிபாட்டு சுதந்திரமும் மக்களுக்கு இருக்கவில்லை. இங்கிலாந்தில் முதலாம் சார்ள்ஸும், இரண்டாம் சார்ள்ஸும் ரோமன் கத்தோலிக்க மனைவிமாரைக் கொண்டிருந்தார்கள்.

அதற்குப்பின் வந்த இரண்டாம் ஜேம்ஸ் ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றியவனாக இருந்தான். இந்த நூற்றாண்டு முழுவதுமே திரும்பவும் திருச்சபை ரோமன் கத்தோலிக்க மதத்தின் வழியில் போய்விடுமோ என்ற பயம் இருந்து வந்தது. ஆராதனை முறைகளில் வேதத்திற்கு முரணான காரியங்களைத் திணிக்கும் முயற்சி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. அதை எதிர்த்த போதகர்கள் (Non Conformist) சபைகளில் இருந்து தூக்கி எறியப்பட்டனர். பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி விசுவாசிகள் சந்தித்த உபத்திரவ காலமாக இருந்தது. இக்காரணங்களாலேயே அரசும் திருச்சபையும் எப்போதும் தனித்தனியாக இயங்க வேண்டும் என்று பாப்திஸ்து பெரியோர்கள் வற்புறுத்தினர். அதை விசுவாச அறிக்கையில் எழுதியும் வைத்தனர்.

இத்தகைய அரசியல் தொல்லைகள் மறைந்து 1689 ல் Act of Toleration சட்டம் கொண்டுவரப்பட்டபோது மறுபடியும் சமயவழிபாட்டு சுதந்திரம் கிடைத்தது. சபைகள் மீண்டும் கூடி வழிபடக்கூடிய வசதி ஏற்பட்டது. **1677** இல் பாப்திஸ்து பெரியோர்கள் தங்களுடைய விசவாச அறிக்கையை வெளியிட்டிருந்த போதும் **1689** ல் தான் அதை சுதந்திரமாக வெளியிடவும் அனைவரும் வாசிக்கக்கூடிய வசதியும் கிடைத்தது. இதனாலேயே இதனை **1689** விசுவாச அறிக்கை என்று அழைத்து வருகிறோம். இதுவே இவ்விசுவாச அறிக்கையின் வரலாற்றுப் பின்னணி.

### 1689 விசுவாச அறிக்கையின் இறையியல் பின்னணி

பாப்திஸ்துகள் **1644/46** இல் ஒரு விசுவாச அறிக்கையை எழுதி வைத்திருந்தனர். அது அவர்களுடைய சபையின் விசுவாச அறிக்கையாக இருந்தது. **52** விதிகளை இது கொண்டிருந்தது. அப்படியானால் அவர்கள் இன்னுமொரு விசுவாச அறிக்கை எழுத வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்ற கேள்வி எழுகிறது. அதற்குக் காரணம் திருச்சபையில் ஏற்பட்டிருந்த பெருமாற்றங்களே. சீர்திருத்தவாதமும், தூய்மைவாதமும் திருச்சபைகளில் பரவி ஒரு புதிய விசுவாச அறிக்கையின் அவசியத்தை உருவாக்கின. இதை எல்லா சபைப்பரிவினரும் அக்காலத்தில் உணர்ந்தனர்.

இந்தப் பதினேழாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் திருச்சபை கர்த்தரால் அற்புதமாக ஆசீர்வதிக்கப்பட்டு அநேக வல்லமையுள்ள பிரசங்கிகளையும் வேத அறிஞர்களையும் கண்டிருந்தது. ஜோன் ஓவன், குட்வின், சிப்ஸ் போன்ற பல நல்ல வேத அறிஞர்கள் சபையை அலங்கரித்தனர். இவர்கள் திருச்சபை சீர்திருத்தத்திலும், திருச்சபையின் பரிசுத்தத்திலும் அதிக நாட்டம் செலுத்தியதால் தூய்மைவாதிகள் (பியூரிட்டன்) என்று இக்காலத்தில் அழைக்கப்பட்டனர். இவர்கள் நல்ல பல நூல்களையும் எழுதி வைத்தனர். அக்காலத்தில் பல திருச்சபை பிரிவுகளும் இத்தகைய தூய்மைவாதிகளால் நிரம்பி வழிந்தது. அதாவது பாப்திஸ்து, பிரஸ்பிடீரியன், காங்கிரகேசனலிஸ்ட் (இன்டிபென்டன்ட்ஸ் - Independants) என்று எல்லா சபைப்பிரிவுகளிலும் இவர்கள் இருந்தனர். திருச்சபை பழையபடி ரோமன் கத்தோலிக்க மதத்தின் போலிப் போதனைகளுக்கு தலைசாய்த்துவிடக்கூடாது என்ற எண்ணத்தில் சபையைப் பாதுகாக்க ஒரு விசுவாச அறிக்கையை எழுத வேண்டும் என்று இச்சபைப்பிரிவினர் எண்ணங்கொண்டனர். அந்த விசுவாச அறிக்கை முழுமையானதாகவும் சீர்திருத்த, தூய்மைவாதக் கோட்பாடுகளைத் தெளிவாகப் போதிப்பதாகவும், **16**ம் **17**ம் நூற்றாண்டு சபை சீர்திருத்தத்தின்

வெளிப்பாடாக இருக்க வேண்டும் என்பதும் இவர்களின் நோக்கமாக இருந்தது. பிரஸ்பிடீரியன் சபைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் இலண்டனில் வெஸ்ட்மின்ஸ்டர் அபே என்ற கட்டடத்தில் கூடி ஒரு விசுவாச அறிக்கையையும் அதோடு வினாவிடைப் போதனைகளையும் வரைந்தனர். இவை வெஸ்ட்மின்ஸ்டர் கோட்பாடுகள் என்ற பெயரைப் பெற்றிருந்தன. இவை திருச்சபைக் கோட்பாடுகளைப் பொறுத்தளவில் பிரஸ்பிடீரியன் கோட்பாடுகளைப் பின்பற்றியதாக இருந்தது. அதாவது, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் வழக்கமும், திருச்சபைக்கு வெளியில் 'சினட்' என்ற அதிகாரம் கொண்ட ஒரு குழு அமைந்து திருச்சபைகளின் மேல் அதிகாரம் செலுத்துவதும், அரசும், திருச்சபையும் இணைந்திருக்க வேண்டும் என்பது போன்ற கோட்பாடுகளைக் கொண்டிருந்தன. இவை தவிர்ந்த ஏனைய சத்தியங்களில் இந்த விசுவாச அறிக்கையும் வினாவிடைப் போதனைகளும் சீர்திருத்தவாத, தூய்மைவாதக் கோட்பாடுகளைப் பின்பற்றியதாக இருந்தன. இரட்சிப்பு கர்த்தருடையது என்றும், மனிதனின் சித்தம் பாவத்திற்குக் கட்டுப்பட்டது என்றும், கர்த்தரின் ஆவியின் கிரியையால் மட்டுமே மனிதன் இரட்சிப்பை அடைய முடியும் என்ற சீர்திருத்தக் கோட்பாடுகளை இவ்விசுவாச அறிக்கை தெளிவாகப் போதித்தது.

எனவே பாப்திஸ்துகளும் நடைமுறைக்கு ஏற்றவிதத்தில் சீர்திருத்தப் போதனைகளைக் கொண்ட ஒரு விசுவாச அறிக்கை சபைக்குத் தேவை என்ற எண்ணத்தில் அத்தகைய அறிக்கையை எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தனர். பிரஸ்பிடீரியன்களின் வெஸ்ட்மின்ஸ்டர் விசுவாச அறிக்கை, ஜோன் ஓவன் போன்றோரின் (Congregationalist - காங்கிரிகேசனலிஸ்ட்) சவோய் விசுவாச அறிக்கை போன்ற அறிக்கைகள் எழுதப்பட்டுவந்திருப்பதை அறிந்த பாப்திஸ்து பெரியவர்கள் தாங்கள் எழுதிக் கொண்டிருந்த அறிக்கையில் தங்கள் கோட்பாடுகளுக்கு ஒத்துப் போகும்வகையில் அவற்றில் காணப்பட்டவற்றை தங்களுடைய விசுவாச அறிக்கையில் பயன்படுத்திக் கொண்டனர். இதற்கு ஒரு முக்கியமான காரணமிருந்தது. அரசியல் சூழ்நிலையும், சபை சூழ்நிலையும் மோசமாக காணப்பட்ட அக்காலத்தில் சீர்திருத்த திருச்சபைகள் ஒன்றோடொன்று சேர்ந்து ஒத்துழைப்பது அவசியமென்றபடியாலும், வேற்றுமைகளைவிட ஒத்துப்போகக்கூடிய போதனைகளே அதிகமாக இருந்தது என்பதாலும் தங்களுடைய விசுவாச அறிக்கை அநேகமான காரியங்களில் வெஸ்ட்மின்ஸ்டர், மற்றும் சவோய் அறிக்கைகளை வார்த்தைக்கு வார்த்தை தழுவியதாக இருக்கும்படி எழுதினார்கள். இந்த விசுவாச அறிககைகளை ஒத்துப் பார்த்துப் படித்தால் அதைப் புரிந்து கொள்ள முடியும்.

இருந்தாலும் சில விடயங்கள் பாப்திஸ்துகளுக்கு முக்கியமானதாகவும், அடிப்படைப் போதனைகளாகவும் தெரிந்தன. குழந்தை ஞானஸ்நானம் ரோமன் கத்தோலிக்க மதத்தின் ஒரு அங்கமென்றும் அதைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது வேதம் போதிக்கும் இரட்சிப்பு, திருச்சபைபற்றிய போதனைகளுக்கு முரணானது என்றும் அவர்கள் கருதினார்கள். விசுவாசிகளுக்கு மட்டுமே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்றும், விசுவாசிகள் மட்டுமே சபையில் அங்கத்தவர்களாகத் தெரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதிலும் அவர்கள் தெளிவாய் இருந்தனர். அத்தோடு திருச்சபை மூப்பர்களால் ஆளப்பட வேண்டும் என்றும், திருச்சபைக்கு வெளியில் அதன் மீது அதிகாரம் செலுத்தும் எந்தக் குழுவும் இருக்கக்கூடாது என்பதிலும் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். திருச்சபை பற்றிய பிரஸ்பிடீரியன்களின்

போதனைகளை பாப்திஸ்துகள் நிராகரித்தனர். மேலும், திருச்சபையும் அரசும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படக்கூடாது என்றும் திருச்சபை தனித்தியங்க வேண்டும் என்றும் அவர்கள் நம்பினார்கள். இவை ஒன்றிணைந்திருந்ததாலேயே திருச்சபைக்கு அரசால் எப்போதும் பெருந்துன்பம் ஏற்பட்டது என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். அத்தோடு அரசும், திருச்சபையும் இணைந்திருக்க வேண்டுமென்ற போதனையே வேதத்தில் இல்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆகவே, தங்களுடைய விசுவாச அறிக்கை இந்தப்போதனை- களைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர்.

இக்காலத்தில் பிரஸ்பிடீரியன்களுக்கு அரசால் பெருந்துன்பம் ஏற்பட்டு மத சுதந்திரம் இல்லாமல் இருந்தது. பாப்திஸ்துகளுக்கு சுதந்திரம் இருந்ததால் அவர்களால் தங்களுடைய விசுவாச அறிக்கையை **1677** ல் வெளியிட முடிந்தது. பின்பு எல்லோருக்கும் பூரண மதசுதந்திரம் **1689** ல் வழங்கப்பட்டபோது தங்களுடைய விசுவாச அறிக்கையை அவர்கள் வெளியிட்டு **1689** விசுவாச அறிக்கை என்ற பெயரில் அதை அழைத்தனர். ஆரம்பத்தில் **32** பாப்திஸ்து போதகர்கள் இங்கிலாந்தில் கூடிக்கையெழுத்திட்டு இதை ஏற்றுக்கொண்டனர். அன்றுமுதல் இன்றுவரை இதுவே சீர்திருத்த பாப்திஸ்துகளின் விசுவாச அறிக்கையாக இருந்து வருகின்றது.

## 1689 விசுவாச அறிக்கையின் குறிப்பிட்ட இரு போதனைகள்

**1689** விசுவாச அறிக்கை மிக முக்கியமானதொன்றாகவும், விசேடமானதாக-வும் இருந்தாலும் **அது வேதத்தைப் போலப் பூரணமானதல்ல. வேதம் மட்டுமே பூரணமான கர்த்தருடைய வார்த்தை.** இருந்தபோதும் நமது மூதாதையர்களான சீர்திருத்தவாதிகள் மேதைகளான பல போதகர்களை ஒன்றுகூட்டி மிகவும் கவனத்தோடு வேதபூர்வமாக இந்த விசுவாச அறிக்கையை எழுதித் தந்திருக்கிறார்கள். மேதைகளாகவும், பெரும் அறிஞர்களாகவும் அவர்கள் இருந்தபோதும் வேதசத்தியங்கள் அனைத்திலும் அவர்கள் பூரணமான ஞானத்தைக் கொண்டிருந்தார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. அவர்களும் தங்களைப் பற்றி அப்படி ஒருபோதும் சொல்லிக் கொண்டதில்லை.

இந்த விசுவாச அறிக்கையின் இரண்டு போதனைகளை நமது மூதாதையர் தங்களுடைய அறிவுக்குப்பட்டவிதத்தில் விளக்கியுள்ளார்கள். ஆனால், அது அவர்களுடைய விளக்கம் மட்டுமே என்பதையும், அதைக்குறித்து வேதம் ஆணித்தரமான விளக்கத்தை நமக்குத் தரவில்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதனால் விசுவாச அறிக்கை தவறான விளக்கத்தைத் தந்திருக்கிறது என்ற தவறான முடிவுக்கு நாம் வந்துவிடக்கூடாது. இந்த இரண்டு போதனைகளைப் பொருத்தவரையிலும் வேதம் வெளிப்படையாக எதையும் சொல்லாத போதும் விசுவாச அறிக்கையை எழுதியவர்கள் இருக்கும் வேத வசனங்களைப் பயன்படுத்தி வேதத்தோடு ஒத்துப்போகக்கூடியது தாம் நம்பும் ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். அந்த விளக்கங்களை நாம் ஏற்றுக்-கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இந்த இரு போதனைகளையும் பொருத்தவரையில் வேதம் தீர்மானமான ஒரு முடிவை நமக்குத் தெரியப்படுத்த-வில்லை என்பதை இவ்விசுவாச அறிக்கையை இன்று பயன்படுத்திக் கொண்டிருக்கும் சபைகள் அனைத்தும் புரிந்து கொண்டுள்ளன. ஆகவே, இதை நாமும் அறிந்து கொள்வது அவசியம். இனி அந்த இரண்டு போதனைகளும் யாவை என்று விளக்கமாகப் பார்ப்போம்.

### *(1) குழந்தைப் பருவத்தில் இறப்பவர்கள்*

*இவ்விசுவாச அறிக்கையின் **10**ம் அதிகாரத்தின் **3**வது பாரா, "குழந்தைப் பருவத்தில் இறக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட குழந்தைகளை கடவுள் ஆவியின் மூலம் மறுபிறப்பளித்து இரட்சிக்கிறார்" என்று விளக்குகிறது. இதன் மூலம் இந்தப்பகுதி எதைப் போதிக்கவில்லை என்பதை முதலில் பார்ப்போம். இறக்கின்ற குழந்தைகளில் 'சில குழந்தைகள் மட்டும்' கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவை என்று விசுவாச அறிக்கை சொல்லவில்லை. ஆனால், இறக்கின்ற குழந்தைகளில் 'சில குழந்தைகளாவது' தெரிந்து கொள்ளப்பட்டவையாய் இருக்கலாம் என்று மட்டும்தான் இப்பகுதி விளக்குகிறது. இதற்கு மேல் எதையும் இது சொல்லவில்லை. யோவான் **3:8** வசனம் இவ்விளக்கத்திற்கு ஆதாரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வேதத்தில் இதுபற்றி நமக்கு தெளிவான விளக்கம் கொடுக்கப்படவில்லை. சிலர் தாவீது தன்னுடைய குழந்தையைப் பற்றிக் கூறியதை உதாரணமாகக் காட்டுவார்கள் (**2** சாமுவேல் **12:23**). தாவீது, "நான் அதனிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்திற்குத் திரும்பிவரப்போகிறதில்லை என்றான்". ஆனால், அந்தப்பகுதியில் 'அதனிடம்' என்று தாவீது குறிப்பிடுவது (சியோல்) பரலோகமல்ல. அது கல்லறையையே* (grave) *குறிக்கிறது. எனவே, வேதம் தெளிவான விளக்கங்களைக் கொடுக்காவிட்டால் அது பற்றி நாம் தீர்மானமான முடிவுகளை எடுப்பதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. இது குறித்து வேதம் அமைதியாக* (Bible is silent on this issue) *இருக்கிறது என்று மட்டும்தான் நாம் சொல்ல முடியும்.*

*இந்தப்பகுதி குழந்தைப்பருவத்தில் இறப்பவர்களைப்பற்றி மட்டும் விளக்காமல் இந்த உலகத்தில் புத்தி சுவாதீனமற்றிருப்பவர்களைப்பற்றியும், அறிவு வளர்ச்சி இல்லாதிருப்பவர்களைப் பற்றியும் விளக்குகிறது. **10:3** ல் காணப்படும் "வெளிப்படையாக நற்செய்திப்பிரசங்கத்தினால் அழைக்கப்பட முடியாத தெரிந்து கொள்ளப்பட்ட அனைத்து மனிதர்களையும்" என்ற வார்த்தைகள் இவர்களையே குறிக்கின்றன. இவர்களில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் கடவுள் இரட்சிக்கிறார் என்பது இந்தப்பகுதியின் போதனை.*

*உண்மையில் கடவுள் பாவிகளை எப்படி இரட்சிக்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். "வேதத்தைப் பொறுத்தவரையில் கர்த்தர் தன்னுடைய வார்த்தையைப் பயன்படுத்தியே ஒருவர் திட்ப உறுதியான அழைப்பைப் பெற்று மறுபிறப்படையும்படிச் செய்கிறார்" என்று சாமுவேல் வால்டிரன் விளக்கமளிக்கிறார் (**2** தெசலோ. **2:14; 1** பேதுரு **1:23-25**; யாக். **1:17;-25**). நற்செய்திப் பிரசங்கத்தின் மூலம் எல்லோருக்கும் கொடுக்கப்படுவது பொதுவான அழைப்பு* (General Call)*. ஒருவர் பொதுவான அழைப்பின் மூலம் மட்டும் கிறிஸ்துவிடம் வந்துவிடுவது கிடையாது. ஆனால், அவ்வழைப்பின் மூலம் கர்த்தர் எவரைத் திட்பஉறுதியாக* (Effectual Call) *அழைக்கிறாரோ அவர் மறுபிறப்பையும் ஆவியின் கிரியையால் அடைகிறார். திட்பஉறுதியாய் அழைக்கப்பட்டவனே நற்செய்தியைக் கேட்டு கிறிஸ்துவை விசுவாசிக்கிறான். ஆகவே, வார்த்தையைக் கேட்காமல், அதன் உந்துதல் இல்லாமல் தெரிந்துகொண்டவர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்க முடியும் என்ற ரீதியில் சிந்திப்பது தவறானது. இரட்சிப்பைப்பற்றி அறிந்து கொள்ளவும், அதை அடையவும் எல்லோருக்கும் நற்செய்தியைக் கொடுத்த கடவுள் அதன் பயன்பாடே இல்லாமல் சிலரை இரட்சிக்க வேண்டிய அவசியம் என்ன?*

## *(2) போப் அந்திக் கிறிஸ்துவா?*

*இரண்டாவதாக விசுவாச, அறிக்கையில் **26**ம் அதிகாரத்தின் **4**ம் பாரா ரோமன் கத்தோலிக்க மதத்தலைவரான போப் அந்திக் கிறிஸ்து என்றும், பாவ மனிதனாகவும், கேட்டின் மகனாக இருக்கிறார் என்று அடையாளம் காட்டுகின்றது. பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் ரோமன் கத்தோலிக்க மதம் அதிகார வெறியில் தலைவிரித்தாடிய இருண்ட காலத்தில் இந்தவிதத்தில் போப் அந்திக் கிறிஸ்துவாக அடையாளம் காட்டப்பட்டதை எவரும் குறைகூறமாட்டார்கள். இன்றும் திருச்சபையில் ஒரு சாரார் போப்பே அந்திக் கிறிஸ்து என்று விசுவாசிக்கின்றனர். ஆனால், கடைசிக்கால நிகழ்ச்சிகளைப்பற்றி வேதபூர்வமாக ஆராயும்போது போப்தான் அந்திக் கிறிஸ்துவா? அல்லது வேறு யாருமா? என்பதில் திருச்சபையில் வித்தியாசமான கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த விஷயத்தில் போப்தான் அந்திக்கிறிஸ்து என்று அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதம் எதிர்பார்க்கவில்லை. யோவான் சுட்டிக்காட்டும் அந்திக் கிறிஸ்துகளில் ஒருவராக நிச்சயம் போப்பும் இருப்பதை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில், கிறிஸ்துவுக்கு எதிரானவர்கள் எல்லோரும் அந்திக்கிறிஸ்துகளே. ஆனால், இறுதிக் காலம் காணப்போகும் கொடிய அந்திக்கிறிஸ்து யாராக இருக்கும் என்பதில் சீர்திருத்த சபைகள் மத்தியிலும் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஆகவே, இந்த விஷயத்தில் இந்தப்பகுதியின் **(26:4)** விளக்கம் பயனுள்ள பல விளக்கங்களில் ஒரு விளக்கமாகத்தான் கருதப்பட வேண்டும். இதையே இறுதியான முடிவாகக் கருத வேண்டிய அவசியமில்லை.*

## 1689 விசுவாச அறிக்கையின் முக்கிய அம்சங்கள் (Distinctive features)

*இதுபற்றி ஒரு நூலே எழுதிவிட முடியும். இருந்தாலும் சுருக்கமாக இவ்வறிக்கையின் முக்கிய அம்சங்களை விளக்க முயற்சி செய்கிறேன். நான் கொடுக்கப்போகும் விளக்கங்களுக்கு உருவம் கொடுத்தவர் எனது நண்பரான கிரெக் நிக்கல்ஸ். அவர் ஒரு சீர்திருத்த பாப்திஸ்து. அவர் உருவம் கொடுத்த சிந்தனைகளை நான் உதாரணங்களுடன் விளக்க மட்டுமே முயன்றுள்ளேன்.*

*இன்று **1689** விசுவாச அறிக்கையை சபைகள் பயன்படுத்துவது மட்டுமல்ல முக்கியம். அதன் தன்மையை நன்றாக அறிந்தும், புரிந்து கொண்டும் நடைமுறையில் கொண்டுவருவதால் மட்டுமே பயன் கிடைக்கும். இதை ஏன் சொல்லவருகிறேன் என்றால் சீர்திருத்த பாப்திஸ்துகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் சிலர் இன்று அது எதைக் குறிக்கிறது என்று தெரியாமலேயே அந்தப் பெயரைப் பயன்படுத்திக் கொள்வதோடு இவ்விசுவாச அறிக்கை போதிக்கும் பல முக்கிய போதனைகளையும் நிராகரிக்கிறார்கள். என்னுடைய சபை இருக்கும் நகரத்திற்குப் பக்கத்தில் உள்ள ஊரில் ஒரு சபை தன்னை சீர்திருத்த பாப்திஸ்து என்று அழைத்துக் கொள்கிறது. ஆனால், அச்சபை முழுக்கு ஞானஸ்நானத்தையும், குழந்தை ஞானஸ்நானத்தையும் ஏற்றுக்கொள்கிறது. இந்த இரண்டு முறைகளையும் நம்புபவர்கள் அச்சபையின் மூப்பர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எப்படி **1689** விசுவாச அறிக்கையை பின்பற்றும் சபையாக இருக்க முடியும்? இந்தக் காரியங்களைப் பற்றி விசுவாச அறிக்கை மிகத்தெளிவானதும் உறுதியானதுமான போதனைகளைத் தருகிற-போது அவற்றை சரியாகப் புரிந்துகொள்ளாமலும், பின்பற்றாமலும் வெறுமனே சீர்திருத்த பாப்திஸ்து என்று அழைத்துக் கொள்வதால் எந்தப் பயனுமில்லை.*

சிலர் இன்று கிருபையின் போதனைகள் (The Doctrines of Grace) மட்டுமே முக்கியம் மற்றதெல்லாம் அவசியமில்லை என்கிறார்கள் (மலர் **7** இதழ் **3**ஐப் பார்க்கவும்). வேறு சிலருக்கு விசுவாச அறிக்கை போதிக்கும் வரையறுக்கப்பட்ட ஆராதனை விதி முறை கசக்கிறது (விசுவாச அறிக்கையில் **22** ம் அதிகாரம் இதை விளக்குகிறது). சிலர் ஓய்வு நாளைக் கவனத்தோடு இன்று பின்பற்ற வேண்டியதில்லை என்றும், நியாயப்பிரமாணத்தை விசுவாசிகள் இன்று கடைப்பிடிக்க வேண்டியதில்லை என்றும் போதிக்கிறார்கள் (Antinomianism, New Covenant Theology). பலருக்கு திருச்சபை அமைப்பில் அக்கறை இல்லை. சபை அங்கத்துவம், ஒழுங்குக் கட்டுப்பாடு எல்லாம் அவசியமில்லை என்று நினைக்கிறார்கள். இவர்கள் எப்படித் தங்களை சீர்திருத்த பாப்திஸ்து என்று அழைத்துக் கொள்ள முடியும்? **1689** விசுவாச அறிக்கையில் **50%** தை அடுப்பில் எறிந்துவிட்டு அதை விசுவாசிக்கிறோம் என்று சொல்வது எந்தவிதத்தில் பொருந்தும்? அதன் சகல அதிகாரங்களும் தரும் போதனைகளை அங்கீகரிக்காதவர்களுக்கு அதன் மேல் நம்பிக்கையில்லை என்றுதான் அர்த்தம்.

இன்று சீர்திருத்தவாதிகள் என்றும் அல்லது சீர்திருத்த பாப்திஸ்துகள் என்றும் தங்களை அழைத்துக் கொள்பவர்களையெல்லாம் நாம் உடனடியாக அங்கீகரித்து அவர்களோடு ஐக்கியத்தில் வர முடியாமலிருக்கிறது. மலர் **8** இதழ் **1** ல் பார்த்தது போல் ஒரு சபையையும், அதன் போதகரையும் நன்றாகத் தெரிந்து பழகாமலும், அச்சபை எதை விசுவாசிக்கிறது? எப்படி நடந்து கொள்கிறது? என்பதை அறிந்து கொள்ளாமலும் நாம் அச்சபையோடு மெய்யான ஐக்கியத்தில் வரமுடியாது; வரவும் கூடாது. போலி ஐக்கியத்திற்கு இதெல்லாம் அவசியமில்லை. மெய்யான இருதயபூர்வமான ஐக்கியம் வேண்டுமானால் இதையெல்லாம் பார்த்துத்தான் ஆக வேண்டும். அது மட்டுமே நமது இருதயத்தையும், நமது சபையின் ஆத்மீக வளர்ச்சியையும் காக்கும்.

இவ்விசுவாச அறிக்கை பற்றிய ஐந்து முக்கிய அம்சங்களை இனிப்பார்ப்போம்:

### 1. இது கிறிஸ்தவ வேத அடிப்படையில் அமைந்த இவெஞ்சலிக்கல், சீர்திருத்தவாத விசுவாச அறிக்கையாக இருக்கிறது.

அதாவது, வேதம் போதிக்கும் அடிப்படைப் போதனைகள் அனைத்தையும் அது போதிக்கும்விதத்தில் இது விளக்குகிறது. கர்த்தரைப் பற்றியும், இரட்சிப்பு பற்றியும், கிறிஸ்து பற்றியும் வேதபூர்வமான விளக்கங்களைத் தருகிறது. சகலவிதமான போலிப்போதனைகளையும் முற்றாக நிராகரிக்கிறது. இதன் முதல் அதிகாரம் வேதம் பற்றிய தெளிவான விளக்கத்தைத் தருகிறது. வேதத்தின் அதிகாரமும், போதுமான தன்மையும், அதை விளங்கிக் கொள்ள வேண்டிய முறையையும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் விளக்குகிறது. வேதத்தின் அதிகாரத்திலும் அதன் போதுமான தன்மையிலும் நம்பிக்கையற்ற பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் கூட்டத்தையும், ரோமன் கத்தோலிக்க மதத்தையும் நிராகரிக்கிறது. திருச்சபைகளும், விசுவாசிகளும் கர்த்தருடைய வேதத்தில் நம்பிக்கை வைத்து அதன்வழிப்படி மட்டுமே நடக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது.

### 2. இது வேதத்தில் கர்த்தரின் உடன்படிக்கை (Covenant of God) விளக்கும் சத்தியமாகிய கர்த்தர் ஒரே மக்களைக் கொண்டிருக்கிறார் என்பதை ஆணித்தரமாக விளக்குகிறது.

வேதம் கர்த்தரின் உடன்படிக்கை பற்றி விளக்கும்போது அந்த உடன்படிக்கை

ஒன்றே என்று போதிக்கின்றது. அதாவது, அவர் தனது மக்களை இரட்சிக்கும் நோக்கத்துடனேயே படைப்பின் ஆரம்பத்தில் இருந்து செயல்பட்டு வந்திருப்பதோடு அந்த அடிப்படையிலேயே தனது உடன்படிக்கைகளையும் ஏற்படுத்தியுள்ளார். இஸ்ரவேலருக்கு ஒரு திட்டம், புற ஜாதியாருக்கு ஒரு திட்டம் என்று வெவ்வேறு திட்டங்களை அவர் வகுத்துக் கொள்ளவில்லை. இஸ்ரவேலை அவர் தனது நோக்கங்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டபோதும் மெய்யான இஸ்ரவேல் கர்த்தருடைய மக்களே. எனவே, வேதம் கர்த்தர் ஒரே மக்களைக் கொண்டிருந்ததாகவும், அவர்களை இரட்சிக்க ஒரே முறையைத்தான் எப்போதும் பயன்படுத்துவதாகவும் சொல்கிறது. கர்த்தர் தான் தெரிந்து கொண்ட மக்களை மீட்கவே கிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பியதோடு அந்த மக்களைக் கொண்டே அவர் தன்னுடைய சபையையும் நிறுவினார். அச்சபையே கர்த்தருடைய திட்டத்தில் முக்கிய இடத்தை வகிப்பதோடு, கிறிஸ்து தனது இரண்டாவது வருகையின்போது தன்னோடு இணைத்துக் கொள்ளப் போகும் சபையாகவும் இருக்கிறது.

இதன்படி இந்த விசுவாச அறிக்கை டின்பென்சேஷனலிசம் என்ற போதனையை வேதத்தோடு பொருந்தி வராததாக அடியோடு நிராகரிக்கிறது. டின்பென்சேஷனலிசம் இஸ்ரவேலர், புதிய ஏற்பாட்டு மக்கள் என்று இரண்டு கூட்டத்தை வேதத்தில் பார்க்க முயல்வதோடு, கர்த்தர் இவர்களை இரட்சிக்க இருவேறு முறைகளைப் பயன்படுத்தியதாகவும் தவறாகப் போதிக்கிறது. சி. ஐ. ஸ்கோபீல்டின் (C. I. Scofield) வேதக்குறிப்புகள் இப்போதனையையே இன்றும் பரப்பி வருகின்றன. விசுவாச அறிக்கையின் **7**வது அதிகாரம் கர்த்தருடைய உடன்படிக்கை பற்றிய போதனையை அளிக்கிறது.

### 3. இந்த விசுவாச அறிக்கை கிருபையின் கோட்பாடுகளைத் தெளிவாகப் போதிக்கிறது.

கர்த்தர் தன்னுடைய மக்களை எப்படியாக இரட்சிக்கிறார் என்ற போதனையைத் தருவதே கிருபையின் கோட்பாடுகள். இதனைக் கல்வினிசக் கோட்பாடுகள் என்றும், கல்வினின் ஐங்கோட்பாடுகள் என்றும் பலவிதமாக அழைப்பார்கள். இதுபற்றி விபரமாக அறிந்து கொள்ள வேண்டுமானால் இப்பத்திரிகையின் மலர் **7** இதழ் **4** ஐ வாங்கி வாசிக்கவும் (கல்வினிச ஐங்கோட்பாடுகள் அவசியமா?). இந்தக் கிருபையின் போதனைகள் கர்த்தர் அளிக்கும் இறை ஆண்மையுள்ள இரட்சிப்பு பற்றிய போதனைகளை வேதபூர்வமாக விளக்குகின்றன. இவை ரோமன் கத்தோலிக்க மற்றும் ஆர்மீனியனிசப் போதனைகளை அடியோடு நிராகரிக்கின்றன. மனிதன் தனது சித்தத்தைப் பயன்படுத்தி தானே சுயமாக முடிவெடுத்து இரட்சிப்பை அடைய முடியும் என்ற அசட்டுத்தனமான போதனையை அடியோடு நிராகரிக்கிறது. மனித சித்தம் பாவத்தால் கறைபடிந்து, வல்லமையற்று ஆத்மீக காரியங்களில் எந்த நன்மையான முடிவையும் எடுக்க முடியாத நிலையில் இருக்கிறது என்று தெளிவாக விளக்குகின்றது. இரட்சிப்பு கர்த்தரிடமிருந்து வருகின்றது என்ற சத்தியத்தை, ஆணித்தரமாய் அறிவிக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இந்தக் கிருபையின் போதனைகள் ஹைபர்-கல்வினிசம் (Hyper-Calvinism) என்ற போலிப்போதனையையும் முற்றாக நிராகரிக்கின்றது. Gospel Standards என்ற பெயர் கொண்ட சபைகள் இங்கிலாந்தில் இந்தப் போதனையை இன்றும் பின்பற்றுகிறார்கள். இந்தப் போதனைக்கும் கல்வினிசத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்தப் போதனை கர்த்தர்

*தன்னுடைய மக்களைத் தெரிந்து கொண்டிருப்பதால் அவர்களுக்கு நற்செய்தி சொல்லுவது அவசியமில்லை என்கிறது. இது மனிதன் நற்செய்தியைக் கேட்டு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டிய பொறுப்புடையவனாக இருக்கிறான் என்ற சத்தியத்தைப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால், விசுவாச அறிக்கை **3, 5, 6, 8, 9** அதிகாரங்களில் கிருபையின் போதனைகளை விளக்குவதுடன் ஹைபர்-கல்வினிசத்தின் தோலை உரிப்பதற்காக **20** ம் அதிகாரத்தில் நாம் கிறிஸ்துவின் நற்செய்தியை எல்லோருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமைப் பொறுப்புடையவர்களாக இருக்கிறோம் என்றும் விளக்குகிறது. மனிதன் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ள முடியும் என்று கூறும் ஆர்மீனியனிசத்தையும், மனிதனுக்கு நற்செய்தியைக் கொடுக்க வேண்டியது அவசியமில்லை என்று கூறும் ஹைபர்-கல்வினிசத்தையும் நாம் நிராகரிக்க வேண்டும் என்று விசுவாச அறிக்கை வலியுறுத்துகிறது.*

### *4. இது தூய்மைவாதிகளின் (பியூரிட்டன்) போதனைகளை வெளிப்படையாகப் பிரதிபலிக்கிறது.*

*கிருபையின் போதனைகள் இரட்சிப்பின் மகத்துவத்தை அறிந்து கர்த்தரை ஆராதிக்க நமக்குத் துணை புரிகின்றன. அதேநேரம் இரட்சிப்புக்குரிய கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் பரிசுத்தமாக வாழ்வது மிகவும் அவசியம். இதை விசுவாச அறிக்கை ஆணித்தரமாகப் போதிக்கிறது. கிறிஸ்தவன் தவறாக கிறிஸ்தவ சுதந்திரத்தைப் பயன்படுத்தி அலட்சியமாக வாழ்ந்துவிடக்கூடாது என்பதில் நமது பெரியோர்கள் அக்கறை காட்டினார்கள். மனிதனுடைய போலிக் கட்டுப்பாடுகளுக்கு நாம் இலவசமாக கிறிஸ்துவிடம் இருந்து பெற்றுக்கொண்ட இரட்சிப்புக்குரிய வாழ்க்கையை பணயம் வைத்துவிடக்கூடாது என்று **21** ம் அதிகாரமாகிய “கிறிஸ்தவ சுதந்திரமும், மனச்சாட்சியின் சுதந்திரமும்” நம்மை எச்சரிக்கிறது. அதேவேளை விசுவாச அறிக்கை, கர்த்தருடைய சகல கட்டளை-களுக்கும் நாம் அடிபணிந்து பரிசுத்தத்துடன் அவரை ஆராதித்து, மகிமைப்படுத்தும் வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன் **10-25** வரையிலான அதிகாரங்கள் மூலம் நமக்குத் தகுந்த போதனைகளைத் தருகின்றது. தூய்மைவாதிகள் (பியூரிட்டன்) தம் காலத்தில் இவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். இந்த அதிகாரங்கள் அனைத்தும் பரிசேயர்கள் போன்ற வாழ்க்கைமுறையையும் (Legalism), உலக இச்சையுள்ள வாழ்க்கை முறையையும் (Libertarianism), கர்த்தருடைய கட்டளைகளைப் புறக்கணிக்கும் வாழ்க்கைமுறையையும் (Antinomianism, New Covenant Theology) அடியோடு நிராகரிக்கின்றன. இன்று உலக இச்சையுள்ள வாழ்க்கைமுறைக்கு அநேக கிறிஸ்தவர்களும், போதகர்களும், சபைகளும் பலியாகிக் கொண்டிருக்கும் வேலையில் இந்த விசுவாச அறிக்கையின் போதனைகளைப் புரிந்து கொண்டு விசுவாசிகள் வாழ்வது எத்தனை அவசியம்.*

### *5. இது வேத போதனைகளின்படி திருச்சபை கிறிஸ்துவின் தலைமையில் தன்னைத் தானே ஆண்டுகொள்ள வேண்டுமென்றும், விசுவாசிகளுக்கு மட்டுமே முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்து சபைக்குள் அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது. ஆகவே, இது பாப்திஸ்து கோட்பாடுகளை வேதபூர்வமான கோட்பாடுகளாக விளக்குகிறது.*

*திருச்சபை பற்றிய கோட்பாடுகளை **26-30** வரையுள்ள அதிகாரங்களில் விசுவாச அறிக்கை விளக்குகின்றது. ரோமன் கத்தோலிக்க மதப்போதனை-*

களையும், சமய சமரசக் கோட்பாட்டையும் இவ்வதிகாரங்கள் நிராகரிக்கின்றன. இவை வேதம் போதிக்கும் திருச்சபை பற்றிய போதனைகளைத் தெளிவாக விளக்குகின்றன. அரசும், சபையும் இணைந்திருக்கும் நிலையை நிராகரிக்கும் விசுவாச அறிக்கை திருச்சபை மூப்பர்களால் ஆளப்பட்டு தனித்தியங்க வேண்டுமென்று போதிக்கின்றது. விசுவாசிகளை மட்டுமே அங்கத்தவர்களாகக் கொண்டு திருச்சபை இயங்க வேண்டும் என்று கூறுகிறது. திருச்சபை ஒழுங்கைக் கடைப்பிடித்து திருநியமங்களை விசுவாசிகளுக்கு அளிக்க வேண்டும் என்றும் விளக்குகிறது. திருச்சபை என்பது ஏனோதானோவென்று, எந்தவித அமைப்பும் இல்லாமல் கூடிவரும் ஒரு கூட்டமல்ல என்பதைப் புரிய வைக்கிறது. கிறிஸ்துவின் தலைமையில் ஒரு கட்டுப்பாடுள்ள அமைப்பாக வேதபூர்வமான சபைத்தலைவர்களைக்கொண்டு இயங்கி சத்தியத்தை வளர்க்க வேண்டியது அதன் கடமையாக இருக்கின்றது என்பதை தெளிவாகக் கூறுகின்றது. "கூடில்லாத குருவிகளுக்கும்", சபையை மதிக்காத ஊழியங்களுக்கும் திருச்சபையில் இடமில்லை என்பதைப் புரிய வைக்கின்றது.

அத்தோடு முழுக்கு ஞானஸ்நானம் மட்டுமே வேதபூர்வமான ஞானஸ்நானம் என்பதை விளக்கி, அத்தகைய ஞானஸ்நானத்தை விசுவாசிகளுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும் என்றும் போதிக்கின்றது. திருவிருந்தையும் கன்னா பின்னா வென்று கேட்பவர்களுக்கெல்லாம் கொடுத்துவிடாமல் திருச்சபையை மதித்து அதற்குத் தம்மை முறையாக ஒப்புக் கொடுப்பவர்களுக்கு மட்டுமே கொடுக்கும்படிக் கூறுகிறது .

சபைப்போதகர்களும், உதவிக்காரர்களும் சபையால் தெரிவு செய்யப்பட வேண்டுமென்றும் அவர்கள் சபையில் விசுவாசத்துடன் உழைக்க வேண்டும் என்றும் விளக்குகின்றது.

சபைகள் இணைந்து ஐக்கியத்தில் வரவேண்டும் என்று கூறும் விசுவாச அறிக்கை அத்தகைய உறவு சத்தியத்தின் அடிப்படையில் மட்டுமே இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறது. ஒரு சபைக்கு இன்னொரு சபை மேல் அதிகாரம் செலுத்தும் தகுதி இல்லை என்பதை தெளிவாகப் புரிய வைக்கிறது. அசோசியேஷன்களும், கமிட்டிகளும் ஐக்கியத்தை வளர்க்க அவசியமில்லை என்பதையும் தெரிவிக்கிறது. ஒரு சபை கொடுக்கும் எந்த ஆலோசனையும் இன்னொரு சபையைக் கட்டுப்படுத்தாது என்பதைத் தெளிவாக விளக்குகிறது.

சத்தியத்தை விற்றுப்பிழைக்கும் சமயசமரசப் பச்சோந்திகளைத் தலைவர்களாகவும், அதை ஆதரிக்கும் ஆத்துமாக்களைக் கொண்டிருக்கும் சபைகளைப் "பேய்களின் குடியிருப்பாகவும்" இது வர்ணிக்கிறது.

இவையே **1689** விசுவாச அறிக்கையின் ஐந்து முக்கிய விசேட தன்மைகள். இவற்றை சுருக்கமாக முடிந்தவரையில் விளக்கியுள்ளோம். இவ்விசுவாச அறிக்கையைப் பயன்படுத்துபவர்கள் இதனை முறையாக வாசித்து, இந்தப் பகுதியில் நாம் விளக்கியுள்ளவற்றை சபை மக்களுக்குப் போதிப்பது அவசியம். சீர்திருத்தவாதிகளும், தூய்மைவாதிகளும் நமது நன்மைகருதி உழைத்து உருவாக்கித் தந்துள்ள, எக்காலத்துக்கும் பயனுள்ள **1689** விசுவாச அறிக்கையை நமது மக்கள் படித்து அதன்படி நடக்க இது உதவும். வேதத்தை மட்டுமே நம்புகிறோம், விசுவாச அறிக்கைகள் தேவையில்லை என்று கூறி தாம் எதை விசுவாசிக்கிறோம் என்பதை வெளிப்படையாக அறிவித்து தங்களை இனங்காட்டிக்கொள்ள மறுக்கும் பச்சோந்திகளோடு நாம் ஒருபோதும் உறவாட முடியாது. நமது பெரியோர்கள் அது ஆபத்து என்று உணர்ந்திருந்தார்கள்.

# நூல் அறிமுகம் - 'வெளிப்படுத்தின விசேஷத்தின் விளக்கவுரை'

கடைசிக்கால நிகழ்ச்சிகளைப்பற்றி வேதத்தில் காணமுடியாத போதனைகளைத் தரும் அனேக நூல்கள் இன்று கிறிஸ்தவ புத்தகசாலைகளை அலங்கரிக்கின்றன. ஆனால், வெளிப்படுத்தல் விசேஷத்தை விளக்கும் பயனுள்ள ஒரு நூலை தமிழ் பாப்திஸ்து வெளியீடு வெளியிட்டிருக்கிறது. இதன் நிறை குறைகளை இனி ஆராய்வோம்.

இவ்விளக்கவுரை ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு. ஆசிரியர் நார்மன் டாட்மேன். பதினொரு அதிகாரங்களில் வெளிப்படுத்தின விசேஷத்தின் 22 அதிகாரங்களுக்கும் 92 பக்கங்களில் சுருக்கமான விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. நூலாசிரியர் நூலின் ஆரம்பத்தில் வெளிப்படுத்தல் விசேஷத்தை விளக்க பலரும் பயன்படுத்துகிற விதிமுறைகளை விளக்கி அவ்விதிமுறைகளில் தான், ஐடியலிச விளக்கமுறையின்படியே நூலுக்கு விளக்கம் தருவதாக அறிவிக்கிறார். ஐடியலிச விளக்கமுறை வெளிப்படுத்தலை கடந்தகாலத்தைப்பற்றி மட்டும் கூறும் நூலாகவோ அல்லது எதிர்காலத்தைப் பற்றி மட்டும் கூறும் நூலாகவோ கருதாது நிகழ்காலத்தில் விசுவாசிகள் ஆத்மவிருத்தி அடையக்கூடிய செய்திகளைக் கொண்டிருப்பதாகக் கருதி விளக்கமளிக்கிறது. இதற்காக இந்த வேத விளக்கமுறை கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் அலட்சியம் செய்வதாகக் கருதிவிடக்கூடாது. அவற்றையும் இது கவனத்தில் எடுத்துக் கொள்கிறது. ஆனால், வெளிப்படுத்தின விசேஷம் அடையாள மொழிகள் நிறைந்த நூல் என்பதை நினைவில் கொண்டு அது விளக்கும் ஆவிக்குரிய உண்மைகளை விளக்குவதிலேயே இது அதிக அக்கறை கொள்கிறது. ஆகவே, வெளிப்படுத்தின விசேஷத்தை விளங்கிக் கொள்ள இந்தவிதிமுறையே ஏனைய முறைகளைவிட மேலானது; சிறப்பானது.

வெளிப்படுத்தின விசேஷத்திற்கு எழுத்துபூர்வமாக விளக்கம் கொடுப்பதன் ஆபத்தை அடிக்கடி நினைவூட்டும் ஆசிரியர் கவனத்தோடு இந்நூலில் காணப்படும் அடையாளங்களுக்கு விளக்கங் கொடுத்திருக்கிறார். முதல் மூன்று அதிகாரங்களில் காணப்படும் ஏழு சபைகளும் உலகில் இருக்கப்போகும் எல்லாசபைகளையும் பிரதிபலிக்கின்றன என்றும், முழு நூலும் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் சாத்தான் கிறிஸ்துவோடும் நடத்தும் போராட்டத்தை விளக்குவதாக இருக்கின்றன என்றும் கூறுகிறார். நூலின் கடைசி அதிகாரங்கள் நியாயத்தீர்ப்பு நாளையும் அந்நாளில் நடக்கப்போகும் காரியங்களிலும் அதிகமாக கவனம் செலுத்துகின்றன என்று விளக்குகிறார். இவ்வகையிலான விளக்கமே வெளிப்படுத்தல் விசேஷத்தின் சரியான விளக்கமுறையாக இருக்கின்றது. **20:1-10** வரையுள்ள வசனங்களுக்கு 'எவர் கொடுக்கும் விளக்கமும் கடினமானது' என்றும், இதற்கு 'ஒருவரும் ஆணித்தரமாக விளக்கம் கொடுக்க முடியாதென்றும்' ஆசிரியர் கூறியிருப்பது சரியல்ல (பக்கம் **71, 74** பக்கங்கள்). நல்லதொரு விளக்கத்தைத் கொடுத்துவிட்டு இப்படி எழுதியிருக்க வேண்டிய அவசியமில்லை. வேதத்திற்கு பலரும் பலவிதமாக விளக்கமளித்தாலும் அதற்கு எப்போதும் சரியான ஒரு விளக்கம்தான் இருக்க முடியும்.

இந்த நூலில் இன்னுமொரு குறை. அது நூலாசிரியரின் தவறா? மொழி பெயர்த்தவரின் தவறா? என்று தெரியவில்லை. பக்கம் **2**ல் அடையாள மொழிபற்றிய விளக்கத்தில் அது 'ரீல் சுத்துவது போல' மிகைப்படுத்தப்பட்ட மொழிநடை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவறு. மிகைப்படுத்தப்பட்ட மொழிநடை வேறு. அடையாள மொழி வேறு. நூலின் ஆரமபத்தில் அதிகாரப் பிரிவுகளையும், வசனப்பிரிவுகளையும் முறையாகத் தொகுத்தளித்திருந்தால் வாசிப்பவர்கள் நூலின் முழு அமைப்பையும் புரிந்து கொண்டு வாசிக்க உதவியாக இருந்திருக்கும். நூலை வாசிக்கும்போதே அது மொழிபெயர்ப்பு என்று தெரிகிறது. இதன் தமிழ் நடையில் மேலும் சிறிது கவனம் செலுத்தியிருக்கலாம். வாசிக்க வேண்டிய ஒரு நூல். வாசித்து முடித்த பின் வெளிப்படுத்தின விசேஷம் அப்படியொன்றும் புரிந்து கொள்ள முடியாத ஒரு நூலல்ல என்றுதான் சொல்லப் போகிறீர்கள். (தமிழ் பாப்திஸ்து வெளியீடு, சென்னை. விலை **30/-**)

# பரலோகம் போனவன் திரும்ப முடியுமா?

சமீபத்தில் நண்பர் ஒருவர் சொன்னபடியால் பெனிஹின்னின் ஒரு டி.வி நிகழ்ச்சியைப் பார்த்தேன். அதில் தென் ஆபிரிக்க மனிதன் ஒருவன் இறந்து உயிர்த்தெழுந்தது மட்டுமல்லாமல் பரலோகம் போய் கர்த்தரிடம் முக்கியமான ஒரு செய்தியையும் பெற்று மீண்டும் திரும்பி இந்த உலகத்திற்கு வந்துள்ளதாக ஒரு நிகழ்ச்சி காண்பிக்கப்பட்டது. இந்த தென் ஆபிரிக்க மனிதனே தன்னுடைய அனுபவங்களை இதில் விளக்கியிருந்தான். தான் இறந்தபின் பரலோகம் கொண்டு போகப்பட்டதாகவும், அங்கே அதிசயமான காட்சிகளைக் கண்டதாகவும், பூக்கள் மரங்கள், கட்டடங்கள் எல்லாம் தங்கத்தில் இருந்ததாகவும் கண் சிமிட்டாமல் இந்த மனிதன் விளக்கினான். அதற்குப்பின் தன்னோடிருந்த தேவதூதன் தன்னை நரகத்திற்கு அழைத்துப் போனதாகவும், நரகத்தில் இருந்த கொடுந்துன்பங்களைத் தான் கண்டதாகவும் விளக்கினான். நரகத்தில் ஒரு போதகன் அலறிய காட்சியையும் வர்ணித்தான். அந்தப் போதகன், ஐயா, நான் ஊழியம் செய்யும்போது பணத்தை திருடியது உண்மைதான் ஆனால், அதை திரும்பவும் வைத்து விடத்தான் நினைத்தேன் அதற்கு இந்தக்கஷ்டமா? என்று அலறியதைத்தான் கேட்டதாகவும் சொன்னான். இந்த ஆபிரிக்க மனிதன் சொன்னதில் விசேஷம் என்னவென்றால், கர்த்தர் தன்னைப் பார்த்து, "அப்பா, நீ மறுபடியும் பூவுலகுக்கு போக வேண்டும். அங்கே போய், இயேசு லாசருவின் உவமையில் நரகத்தில் இருந்து 'ஜெபித்த' ஐசுவரியவானின் ஜெபத்திற்கு இப்போது பதில் கொடுக்கப்பட்டு விட்டது. அதனால்தான் நான் உன்னை மீண்டும் பூவுலகுக்கே அனுப்பியிருக்கிறேன். நீ மிகுதியான உன்னுடைய பூவுலகவாழ்நாளில் என்னைப் பற்றி எல்லோருக்கும் சொல்லி அவர்கள் மனந்திருந்துமாறு கேட்டுக் கொள்" என்று தன்னைப் பார்த்து சொல்லி அனுப்பியதாகவும் சொன்னான்.

இந்த மனிதனுடைய அனுபவத்தையும், அவன் சொன்னதையும் கேட்டு பெனிஹின் மட்டுமல்ல பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக்கூட்டத்தாரெல்லாம் உணர்ச்சிகள் கரைபுரண்டோட, இயேசு சீக்கிரமே வரப்போகிறார் அதனால்தான் இப்படி நடந்திருக்கிறதென்றும், இனி அநேகர் நரகத்திற்குப் போகாதிருக்க மரித்தவர்கள் அடிக்கடி உயிர்த்தெழுந்து நற்செய்தி சொல்வது தொடர்ந்து நடக்கப்போகிறதென்றும் பேசித்திரிகிறார்கள். இந்தப் புதுச்செய்தி இப்போது பரவிக்கொண்டிருப்பதால் வாசகர்கள் இதைக்குறித்து வேதபூர்வமாக சிந்தித்து பயனடைவதற்காக இதைப்பற்றி எழுதத் தீர்மானித்தேன்.

இந்த மனிதன் சொன்ன காரியங்களை முதலில் பார்ப்போம்.

(1) தான் இறந்து மீண்டும் உயிர்த்தெழுந்தேன்.
(2) உடனடியாக பரலோகம் போனேன். அங்கே அதிசயக்காட்சிகளைப் பார்த்தேன்.
(3) அதன்பின் தேவதூதனோடு நரகத்திற்குப் போய் நரக துன்பங்களைக் கண்டேன்.
(3) கர்த்தர் ஐசுவரியவானையும், லாசருவையும் பற்றிய உவமையில்

*அலறிய ஐசுவரியவானின் கூக்குரலை ஜெபம் என்று சொல்லி, அந்த ஜெபத்திற்கு இத்தனை காலத்திற்குப் பிறகு இன்று பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் என்னிடம் சொன்னார்.*

*(4) கர்த்தர், உவமையில் உள்ள அந்த ஐசுவரியவானின் ஜெபம் நிறைவேறும்படியாக மீண்டும் உலகத்திற்குப் போய் எல்லோருக்கும் நடந்ததை சொல்லி அவர்கள் மனந்திரும்ப உதவும்படி என்னை அனுப்பினார். அதனால்தான் இப்போது உயிர்த்தெழுந்திருக்கிறேன்.*

அடுத்ததாக இந்த மனிதனின் அனுபவத்தின் அடிப்படையில் பெனிஹின்னும், கெரிஸ்மெட்டிக் கூட்டமும் புதிதாக உருவாக்கியுள்ள போதனையைப் பார்ப்போம்:

*(1) இந்த அனுபவம் கர்த்தரின் வருகை வெகு சீக்கிரம் நடக்கபோகிறது என்பதற்கு கர்த்தர் அனுப்பியிருக்கும் ஒரு அடையாளம்.*

*12) நரகத்தில் இருந்த ஐசுவரியவானின் ஜெபம் நிறைவேறியிருப்பதால் இனி அடிக்கடி மரித்தவர்கள் உயிர்த்தெழுவார்கள்.*

*(3) இந்த அனுபவத்தைத் சொல்லி, மனந்திருந்தி நரகத்தில் இருந்து தப்பிக்கொள்ளும்படி எல்லோரையும் எச்சரிக்கை செய்யவேண்டியது சபையின் கடமை.*

நமது திருமறைத்தீப வாசகர்கள் வேதத்தின் அதிகாரத்திலும், போதுமான தன்மையிலும் மட்டுமே அக்கறை கொண்டவர்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மெய்க்கிறிஸ்தவத்தின் முதுகெலும்பு போல் இருக்கும் இருக்கும் வேதம் இந்த மனிதனின் அனுபவத்தைப் பற்றி என்ன சொல்கிறது என்று இனி ஆராய்வோம்.

முதலாவது மனிதனின் மரணத்தைப்பற்றி சிந்திப்போம். ஒரு மனிதன் இறந்துவிட்டான் என்று டாக்டர்கள் அறிவித்தபிறகும் உயிரோடு இருந்தவர்கள் பற்றிய அநேக நிகழ்ச்சிகளைப்பற்றி உலகம் கேள்விப்பட்டிருக்கிறது. இதிலிருந்து தெரிவது என்னவென்றால், டாக்டர்கள் கூட சில சமயங்களில் ஒருவன் இறக்காமலிருக்கும்போதே இறந்துவிட்டான் என்று எண்ணிவிடக்கூடிய வாய்ப்பு உண்டு. இது ஒன்றும் புதுமையானதல்ல. இப்படி எத்தனையோ தடவை நடந்திருக்கிறது. ஆகவே, இறந்ததுபோல் இருந்து எழுந்தவர்களை எல்லாம் பரலோகம் போய் திரும்பிவந்தவர்களாக நாம் நினைத்துவிடக்கூடாது.

உண்மையிலேயே இறந்து மீண்டும் எழுந்த சிலரைபற்றி பழைய, புதிய ஏற்பாடுகளில் வாசிக்கிறோம். அது கர்த்தருடைய வெளிப்படுத்தல் (வேதம்) முழுமையாகக் கொடுக்கப்படுவதற்கு முன்பு அவருடைய வார்த்தையை உறுதிப்படுத்துவதற்காகவும் கிறிஸ்து கர்த்தரால் அனுப்பப்பட்ட ஆண்டவர் என்பதை நிரூபிப்பதற்காகவும் நிகழ்ந்த அற்புதங்கள். இயேசு இவ்வுலகில் இருந்தபோது சிலரை உயிர்த்தெழச் செய்திருக்கிறார். அப்போஸ்தலர்களும் அதைச் செய்துள்ளனர். உதாரணத்திற்கு புதிய ஏற்பாட்டில் லாசருவையும், பவுல் பிரசங்கித்தபோது உறங்கியதால் மேல்வீட்டிலிருந்து விழுந்து இறந்த மனிதனை பவுல் உயிர்ப்பித்ததையும் குறிப்பிடலாம். ஆனால் இவை வழமையாக நடக்கும் நிகழ்ச்சிகள் அல்ல. இயேசுவுக்குப்பின் அப்போஸ்தலர்களால் மட்டுமே இந்த அற்புதங்களைப் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் செய்ய முடிந்தது. இவர்களில் ஒருவர்கூட உயிர்த்தெழுந்தபின் பரலோக அனுபவங்களைப்பற்றி பேசவில்லை. இறந்து உயிர்த்தெழாமலே பரலோக அனுபவத்தை விண்ணகக் காட்சி மூலம் பெற்ற பவுல்கூட அதைப்பற்றி தனக்குப் பேசக்கட்டளை இல்லை

என்று புதிய ஏற்பாட்டில் சொல்கிறார்.

இயேசு இறந்தபின் ஹேடிஸில் (Hades) இருந்தார் என்று வேதம் சொல்கிறது (அப்போஸ். 2:27). ஹேடீசுக்கு வேதத்தில் பல விளக்கங்கள் உள்ளன. தமிழ் வேதத்தில் ஹேடிசை எல்லாப் பகுதிகளிலும் பாதாளம் என்று மொழி-பெயர்த்திருக்கிறார்கள். அப்போஸ்தலர் 2:27ல் ஹேடீஸை (பாதாளம்) நரகம் என்று மொழி பெயர்க்கக்கூடாது. இது இயேசு இறந்தபின் ஆவியும், சரீரமும் பிரிக்கப்பட்ட நிலையில் இருந்தார் (State of death) என்று மட்டுமே விளக்குகிறது. பேதுரு அப்போஸ்தலர் 2:25-31 வரையுள்ள வசனங்களில் சங்கீதம் 16:8-11ப் பயன்படுத்தி கிறிஸ்துவை மரணத்திற்குப்பின் ஆவியும், சரீரமும் பிரித்த நிலை கட்டுப்படுத்தவில்லை என்ற இதே உண்மையை விளக்குகிறார். இறந்த-பின் இயேசுவின் ஆவி கர்த்தரை அடைந்தது (லூக்கா 23:46). அவருடைய சரீரம் கல்லறையில் இருந்தது. இந்த நிலையில் (Disembodied existence) இயேசு மூன்று நாட்கள் இருந்திருக்கிறார். அதன்பின் பிதா அவரை உயிர்த்தெழச் செய்தார். இயேசு இறந்தபின் நரகத்தை அடைந்தார் என்ற ரோமன் கத்தோலிக்க போதனையில் எந்த உண்மையும் இல்லை. (இயேசு நரகத்திற்குப் போனாரா? என்ற கட்டுரையைப் பார்க்கவும்).

மரணமடைந்த ஒருவன் விசுவாசியாக இருந்தால் பரலோகத்துக்கும், அவிசுவாசியாக இருந்தால் நரகத்துக்கும் போகிறான் என்று வேதம் சொல்கிறது. லூக்கா 16:19-31 வரையிலான வசனங்களில் இயேசு போதிக்கும் சத்தியத்தை நாம் கவனமாகப்படிக்க வேண்டியது அவசியம். இப்பகுதியில் இயேசு ஐசுவரிய-முள்ள ஒரு மனிதனையும், லாசரு என்ற தரித்திரனையும் பற்றிய ஒரு உவமையை விளக்குகிறார். இந்த உவமையைப் பயன்படுத்தி இயேசு பல சத்தியங்களை விளக்குகிறார். உவமைகளின் எல்லாப் பகுதிகளுக்கும் நாம் ஒருபோதும் பொருள்காண முயற்சி செய்யக்கூடாது. அது போதிக்கும் அடிப்-படை உண்மைகளை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். அதற்காகவே உவமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த உவமையின் மூலம் (ஒருதடவை அதை வாசியுங்கள்) இயேசு இறந்தபின் மனிதனுக்கு ஏற்படும் நிலை பற்றிய சில உண்மைகளைத் தெரிவிக்கிறார். இவை ஒருபோதும் மாறாது. அப்படி இயேசு விளக்கும் உண்மைகள் என்ன?

1. இறந்தபின் விசுவாசி உடனடியாக பரலோகம் போகிறான். பரலோகம் போனபின் அவன் திரும்பவும் இந்த உலகத்துக்கு வர முடியாது. பரலோகத்-தைத் தாண்டி நரகத்துக்கும் போக முடியாது (22, 27, 29-31).

2. இறந்தபின் அவிசுவாசி நரகத்துக்கு கொண்டு செல்லப்படுகிறான் (22). அங்கே தன் பாவத்துக்கு ஏற்ற தண்டனையை அனுபவிக்கிறான். (இந்த உவமை-யில் பாதாளத்திற்கு Hades என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டு அது இந்த இடத்தில் பொருத்தமாக நரகத்தைக் குறிக்கிறது. நரகம் பற்றிய இந்தப்பகுதியின் வர்ணனை அதை மேலும் தெளிவாக்குகின்றது.) அக்கினி ஜுவாலையில் வேதனையை நித்தியத்துக்கும் அனுபவிக்கிறான் (24, 25). அவன் நரகத்தைத் தாண்டி பரலோகத்திற்குப் போக முடியாது. இந்த உலகத்துக்கும் மறுபடியும் வர முடியாது. நரகத்தில் அவன் இருக்கும் நிலை நித்தியத்துக்குமாக நியமிக்-கப்பட்டிருக்கிறது. அதை ஒருவராலும் மாற்றமுடியாது (26-31).

3. இந்த உவமையில் ஐசுவரியவான் ஆபிரகாமை நோக்கிப் பேசியதற்கு எழுத்துபூர்வமாக சொல்லுக்கு சொல் பொருள் கொடுப்பது தவறு. ஏனெனில்

இது ஓர் உண்மையை விளக்க இயேசு பயன்படுத்தும் உவமை. ஐசுவரியவானின் பேச்சு ஜெபம் அல்ல. நரகத்தில் இருப்பவர்கள் தங்களுடைய நரக வாழ்க்கையில் ஆத்மீக விருத்தி அடைவதில்லை. அவர்கள் ஆவிக்குரிய ஜெபம் செய்வதில்லை. அவர்கள் மனம் திரும்பவும், ஆத்மீகவிருத்தி அடையவும் வழி இல்லை. நரகத்தில் இருப்பவனுக்கு நல்ல எண்ணங்கள் ஏற்படாது. இந்த உவமையின் மூலம் இயேசு பாவி நரகத்தில் தன் பாவத்துக்கு தகுந்த தண்டனையை அனுபவிப்பதை விளக்குவதை மட்டுமே நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உவமையின் ஏனைய பகுதிகளுக்கு (ஐசுவரியவானின் பேச்சு) நாம் ஆத்மீக விளக்கம் கொடுக்க முயற்சி செய்யக்கூடாது. அது தவறான விளக்கங்களைக் கொடுப்பதில் முடிந்துவிடும்.

4. இயேசு இந்த உவமையின் கடைசிப் பகுதியில், இறந்தவர்கள் உயிர்த்தெழுவதால் மனிதர்கள் மத்தியில் ஆத்மீக உணர்வு ஏற்படாது என்பதை உறுதியாக விளக்குகிறார். மனிதன் தான் பாவி என்று உணர்ந்து கர்த்தரிடம் ஓடிவருவதற்கு உயிர்த்தெழுதல் போன்ற அற்புதங்கள் உதவாது என்பதை இயேசு தெளிவாகக் கூறுகிறார். அற்புதங்கள் அந்த நோக்கத்தில் எப்போதுமே பயன்படுத்தப்பட்டதாக வேதமும் எங்கும் போதிக்கவில்லை (27-31).

5. பாவிகள் தங்களுடைய பாவத்தையும், இரட்சிப்புக்கான வழிமுறைகளையும் அறிந்து கொள்ள கர்த்தர் வேதத்தை மட்டுமே (மோசேயும், தீர்க்கதரிசிகளும்) கொடுத்திருக்கிறார் என்று இயேசு தெளிவாக விளக்குகிறார் (29). வேத போதனைகளைக் கேட்டு அவற்றை விசுவாசிக்காத ஒருவன் வேறு எந்த அற்புதத்தைப் பார்த்தாலும் மனந்திரும்ப மாட்டான் என்று இயேசு உறுதியாகச் சொல்கிறார் (31). அத்தோடு, வேதத்தை நம்புவதைத்தவிர மனிதனுக்கு வேறு வழியில்லை என்பதையும் இயேசு ஆணித்தரமாக விளக்குகிறார் (31). நற்செய்திக்கு செவிகொடாவிட்டால் ஆத்மீக விடுதலைக்கு இடமே இல்லை என்கிறார். நற்செய்தியைக்கேட்டு, பரிசுத்த ஆவியின் கிரியையால் மட்டுமே எந்த மனிதனும் இரட்சிப்பை அடைகிறான். பாவிகளுக்கு இரட்சிப்பை அளிக்க கர்த்தர் ஏற்படுத்தியிருக்கும் இந்த தெய்வீக மீட்பின் வழிகளில் ஒருபோதும் எந்த மாற்றமும் ஏற்படாது; கர்த்தரும் அதை மாற்றவோ, அதற்கு எதிராக நடக்கவோ மாட்டார் என்பதை இந்தப்பகுதி விளக்குகிறது.

கர்த்தர் முன்பு இந்த உவமை மூலம் தான் கொடுத்த போதனையை மாற்றி இனி பரலோகம் போன அநேகரை மீண்டும் உயிர்த்தெழச்செய்து பாவிகளை மனம் திரும்பும்படி எச்சரிக்கப் போகிறார் என்று இந்த ஆபிரிக்க மனிதனும், பெனிஹின்னும் சொல்கிறார்கள். அற்புதங்களைவிட அழியாத வேதத்தை நம்பும்படிச்சொன்ன இயேசு தன் வார்த்தையை ஏன் மாற்றிக் கொள்ளப் போகிறார்? இயேசுவின் வார்த்தைகள் மாறாது. வேதம் ஒருபோதும் பொய் சொல்லாது. மனிதனே எப்போதும் பொய் பேசுவான். இயேசு தான் ஏற்கனவே கொடுத்த போதனையை இப்போது மாற்றிக் கொண்டுள்ளார் என்று இவர்கள் சொல்வது பெரும்பொய். வேதம் தன்னை மட்டுமே நம்பும்படி சொல்கிறது. மத்தேயு 6ம், வெளிப்படுத்தின விசேஷத்திலும் இயேசு தன்னுடைய வார்த்தையோடு எதையும் சேர்க்கவோ அல்லது அதிலிருந்து எதையும் குறைக்கவோ கூடாது என்று தெளிவாகக் கூறியிருக்கிறார். அவரே வார்த்தை மாறி நடப்பாரா? இவர்கள் இயேசு தன் வார்த்தையை மீறி நடப்பதாக அல்லவா சொல்கிறார்கள். இது கடைசிக் காலம். சாத்தானின் விளையாட்டுக்கள் தீவிரமடைந்திருக்கும் காலம் என்பதை நாம் உணரவேண்டும். போலிப்போதனைகள் எந்த ரூபத்தில் வந்தாலும் நம்பக்கூடாது..

# கிறிஸ்தவ கோட்பாடுகள்

*கேள்வி: 60  நான்காவது கட்டளை என்ன?*

*பதில்: நான்காவது கட்டளை, ஓய்வு நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக; ஆறு நாளும் நீ வேலை செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்; அதிலே நீயாகிலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அன்னியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆதலால் கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.*

*யாத்திராகமம் 20:8-11.*

*கேள்வி: 61  நான்காவது கட்டளை எதைப் போதிக்கிறது?*

*பதில்: தேவன் தன்னுடைய வார்த்தையில் நியமித்திருக்கும் காலங்களை அவருக்காக நாம் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று நான்காம் கட்டளை போதிக்கிறது. அதாவது, ஏழு நாட்களில் ஒரு நாளை அவருக்காக பரிசுத்த ஓய்வுநாளாக வைத்திருக்க வேண்டுமென்று போதிக்கிறது.*

*லேவியராகமம் 19:30; உபாகமம் 5:12-14.*

*கேள்வி: 62  ஏழு நாட்களில் எந்த நாளை வாராந்தர ஓய்வு நாளாக கடவுள் நியமித்திருக்கிறார்?*

*பதில்: உலகம் தோன்றிய நாளிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்ததுவரை வாரத்தின் ஏழாவது நாளை வாராந்தர ஓய்வு நாளாக கடவுள் நியமித்திருந்தார்; கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளிலிருந்து வாரத்தின் முதல் நாளை உலகம் முடியும்வரையும் ஓய்வு நாளாக இருக்கும்படி கடவுள் நியமித்துள்ளார். இதுவே கிறிஸ்தவ ஓய்வு நாளாக இருக்கின்றது.*

*ஆதியாகமம் 2:2-3; 1 கொரிந்தியர் 16:1-2; அப்போஸ்தலர் 20:7; வெளிப்படுத்தல் விசேஷம் 1:10.*

**விளக்கக்குறிப்பு:** *நாம் பார்த்து வருகின்ற வினாவிடை பத்து ஒழுக்க நியதிக் கட்டளைகள் இருப்பதாக விளக்குகிறது. இந்தப் பத்துக்கட்டளைகள் இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்ட ஏனைய கட்டளைகளைப்போல அல்லாமல் எக்காலத்துக்கும் நிலைத்திருக்கும் கட்டளைகள். இக்கட்டளைகள் எல்லா மனிதர்களும் அறிந்து கொள்ளும்படி கர்த்தரின் சித்தத்தை வெளிப்படுத்து-கின்றன. ஆனால், சிலர் அது பத்துக்கட்டளைகளில் உள்ள ஒன்பது கட்டளை-களுக்கு மட்டுமே பொருந்தும் என்கின்றனர். அவர்கள் நான்காவது கட்டளை எக்காலத்துக்கும் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டிய கட்டளை என்பதை மறுக்கிறார்கள். அப்படியானால், இந்த வினாவிடை நான்காம் கட்டளை பத்துக் கட்டளைகளில் ஒன்று; அதுவும் ஒழுக்க நியதிக்கட்டளையாக இருக்கின்றது என்று ஏன் வற்புறுத்துகிறது? இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.*

*(1) ஓய்வுநாள், படைப்பில் ஏற்படுத்தப்பட்ட நியமமாக இருக்கின்றது. - ஏனைய*

கட்டளைகளைப்போல் அல்லாமல் இது படைப்பில் ஏற்படுத்தப்பட்டதாக ஆதியாகமம் 2:2, 3 தெளிவாக விளக்குகிறது. தேவன் ஏழாம் நாளைப் படைத்ததோடு மட்டுமல்லாமல் தானே அந்நாளில் ஓய்ந்திருந்ததோடு அதை ஆசிர்வதித்துப் பரிசுத்தமாக்கினார் என்று 2:3 ல் வாசிக்கிறோம். அத்தோடு, யாத்திராகமம் 20:11 நான்காம் கட்டளையை விளக்கும்போது அது படைப்பில் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லி ஆரம்பிக்கிறது. ஆதலால், நாம் இந்தக் கட்டளை மனிதர்கள் அனைவரும் எக்காலத்துக்கும் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நியதிக் கட்டளை என்று நம்புகிறோம்.

(2) கர்த்தர் பத்துக் கட்டளைகள் அனைத்தையும் தன் கைகளால் இரண்டு கற்பலகைகளில் எழுதினார். - ஏனைய எல்லாக் கட்டளைகளையும் கர்த்தர் மோசே மூலமாக இஸ்ரவேலருக்குக் கொடுத்தார். ஆனால், பத்துக்கட்டளை மட்டும் தன் கைகளால் கற்பலகைகளில் எழுதிக் கொடுத்தார். எனவே, இது எல்லாக்கட்டளைகளும் பிரிக்க முடியாதபடி இணைந்தவை என்றும் அவை அனைத்துமே ஒழுக்க நியதிக் கட்டளைகள் என்பதைத் தெளிவாக்குகின்றன.

(3) நான்காம் கட்டளையை நாம் பின்பற்றத் தேவையில்லை என்று புதிய ஏற்பாடு எங்குமே போதிக்கவில்லை. - புதிய ஏற்பாடு நாம் இன்று ஓய்வுநாளைக் கடைப்பிடிக்கத் தேவையில்லை என்று எந்தப்பகுதியிலும் சொல்லவில்லை. இயேசு, மத்தேயு 5:17லின் மூலம் நியாயப்பிரமாணத்தை அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் என்றார். இதையே ரோமர் 3:31 ம் சொல்கிறது. இதைத்தான் புதிய ஏற்பாடு முழுவதும் விளக்குகிறது. ஆதிசபைக் கிறிஸ்தவர்கள் இந்தக் காரணத்தால்தான் வாரத்தில் ஒருநாளை ஓய்வுநாளாகக் கடைப்பிடித்தார்கள். ஆனால், புதிய ஏற்பாட்டில் அது வாரத்தின் முதல் நாளாக, கிறிஸ்தவ ஓய்வு நாளாக இருக்கிறது (மத்தேயு 28:1, மாற்கு 16:2; லூக்கா 24:1; யோவான் 20:1, 19; அப்போஸ்தலர் 20:7; 1 கொரிந்தியர் 16:2).

செவந்த் டே (ஏழாம் நாள்) அட்வென்டிஸ்டுகள், ஏழாம் நாளையல்லவா பத்துக்கட்டளைகள் பின்பற்றும்படி சொல்கின்றன என்று கேட்கிறார்கள். ஓய்வுநாளாக சனிக்கிழமையே பின்பற்றப்பட வேண்டும் என்று அந்நாளை அவர்கள் இன்றும் ஓய்வுநாளாகத் தொடர்ந்து பின்பற்றுகிறார்கள். அத்தோடு கர்த்தர் அதை ஏற்படுத்தியிருப்பதால் நாம் அதை மாற்ற முடியாது என்றும் கூறுகிறார்கள்.

இதற்கு பதிலளிக்க வேண்டியது அவசியம். கர்த்தர் தந்த பத்துக் கட்டளைகளை நாம் வாசித்துப் பார்ப்போமானால் அது சனிக்கிழமை என்று சொல்லாமல் ஏழாம்நாள் என்று மட்டுமே சொல்கிறது. அதாவது வாரத்தின் ஆறுநாளும் வேலைசெய்துவிட்டு ஏழாம் நாளில் ஓய்ந்திருக்கும்படிச் சொல்கிறது. இதைப்பற்றி மீண்டும் சிந்தித்துப் பாருங்கள். வாரத்தின் ஒருநாள் ஓய்வுநாளாக இருக்க வேண்டும் என்பதுதான் நான்காவது கட்டளையின் போதனை. குறிப்பாக அது எந்த நாள் என்று பத்துக்கட்டளைகள் தீர்மானமாக சொல்லவில்லை. படைப்பில் கர்த்தர் ஒரு ஒழுங்கின்படி அனைத்தையும் சிருஷ்டித்தார். முதல் நாள், இரண்டாம் நாள் என்று ஒரு ஒழுங்கைப்பின்பற்றி எல்லாவற்றையும் படைத்தார். ஆறுநாட்களில் எல்லாவற்றையும் படைத்தபின்பு ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். புதிய ஏற்பாட்டில் ஓய்வுநாள் குறித்து கர்த்தர் ஒரு புதிய ஒழுங்கை ஏற்படுத்தினார். தன்குமாரனான கிறிஸ்துவை அவர் வாரத்தின் முதல் நாளில் உயிர்த்தெழச் செய்ததால் அந்நாள் ஓய்வுநாளாக இருக்கும்படிச் செய்தார். அந்நாளைத்தான் கிறிஸ்தவ சபையும் ஓய்வுநாளாக

பின்பற்றி ஆராதனையில் ஈடுபட வேண்டும் என்ற நியதியை ஏற்படுத்தினார். ஆறுநாட்களுக்கு மனிதன் வேலை செய்ய வேண்டும் என்றும் வாரத்தின் ஒரு நாளை ஓய்வுநாளாக வைத்திருக்க வேண்டும் என்பதும்தான் பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் போதிக்கும் விதிமுறை. அந்த நாள் பழைய ஏற்பாட்டில் சனிக்கிழமையாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் நமது மீட்பை நிறைவேற்றிய கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளான ஞாயிறு தினம் ஓய்வு நாளாக மாற்றப்பட்டு ஆண்டவருடைய நாளாகக் கருதப்படுகிறது.

இந்த உண்மையின் அடிப்படையிலேயே நாம் கொலோசெயர் 2:16, 17; கலாத்தியர் 4:10, 11; ரோமர் 14:5 போன்ற வேதப்பகுதிகளைப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போஸ்தலர்களின் காலத்தில் யூதர்கள் பழைய ஏற்பாட்டு சடங்குகளை கிறிஸ்தவர்கள் பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்தினர். பவுல் பழைய ஏற்பாடு ஓய்வு நாட்களை நாம் இனி கடைப்பிடிக்கத் தேவையில்லை என்று இப்பகுதிகளின் மூலம் சொல்கிறார். அதாவது யூதர்கள் பின்பற்றிய வாரத்தின் ஒரு நாளான ஓய்வுநாளைத்தவிர (Sabbath Day) ஏனைய ஓய்வுநாட்களை (the sabbath days) நாம் இன்று பின்பற்றத் தேவையில்லை என்கிறார். இந்த வேறுபாட்டைச் சுட்டிக் காட்டத்தான் புதிய ஏற்பாடு ஓய்வுநாளை ஆண்டவருடைய நாள் என்று அழைக்கிறது. கிறிஸ்துவே ஓய்வுநாளை வாரத்தின் முதல் நாளாக மாற்றி அமைத்தபின்பு பழைய யூத ஓய்வுநாட்கள் இன்று அவசியமில்லை. இதனாலேயே பவுலும் 1 கொரிந்தியர் 16:2லே ஓய்வு நாள் ஞாயிறாக இருக்க வேண்டும் என்று கொரிந்தியருக்கு கட்டளையிடுகிறார்.

ஓய்வுநாளை நாம் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை என்ற போதனையை நாம் புதிய ஏற்பாட்டில் எங்கும் வாசிப்பதில்லை. சிலர் ஓய்வு-நாளக்கும், ஆண்டவருடைய நாளுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கிறது என்பார்கள். ஆனால், நாள் மட்டும்தான் மாற்றப்படிருக்கிறதே தவிர வேறு வித்தியாசங்கள் இல்லை. இன்று நாம் கிறிஸ்தவ ஓய்வுநாளைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுவே ஆண்டவருடைய நாள்.

சிலர் நாம் ஓய்வுநாளைப் பின்பற்றத் தேவையில்லை என்றும், ஆராதனைக்-காக மட்டும் ஒருநாள் தேவைப்படுகிறது என்றும் கூறுவார்கள். இவர்கள் சொல்வதில் எந்த உண்மையும் இல்லை. கர்த்தர் நாம் முழு நாளையும் ஆண்ட-வருடைய நாளாகவும், ஓய்வுநாளாகவும் வைத்திருக்க வேண்டுமென்றுதான் சொன்னார். இவர்கள் சபை நியமிக்கும் ஆராதனைக் கூட்டங்கள் மட்டுமே அவசியமென்றும் அந்த ஆராதனைக் கூட்டங்களில் நாம் கலந்து கொண்டு கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்கிறார்கள். இந்த முறையில்தான் கிறிஸ்மஸ் தினம், நல்ல வெள்ளிக் கிழமை போன்றவை சபையில் தோன்றி விசேட நாட்களாக கடைப்பிடிக்கப்படத் தொடங்கின. இதைத்தான் பவுல் கொலோ-செயர், கலாத்தியர் போன்ற நிருபங்களில் சாடினார். ஆத்துமாக்களின் ஆரா-தனைக்காக எந்த நாளையும் ஏற்படுத்தும் அதிகாரம் சபைக்கோ அல்லது சபைப் போதகர்களுக்கோ இல்லை. கர்த்தர் மட்டுமே அதைச் செய்யக் கூடியவராக இருக்கிறார். கர்த்தர் வாரத்தின் முதல் நாளான ஆண்டவருடைய நாளை மட்டுமே கிறிஸ்தவ விசுவாசிகள் ஓய்வு நாளாகக் கடைப்பிடித்து பொது ஆராதனையிலும், தனிப்பட்ட ஆராதனையிலும் ஈடுபடும்படிக் கட்டளை-யிட்டுள்ளார். சபையோ, சபைப்போதகர்களோ நமது மனச்சாட்சியை வேறு எந்த நாளின் மூலமும் கட்டுப்படுத்துவது கர்த்தருக்கு விரோதமான காரியம்.

# சபைப் பிதாக்கள்-II
(Church Fathers)

அப்போஸ்தலர்களுடைய காலத்துக்குப் பிறகு திருச்சபைத் தலைவர்களாக இருந்த சபைப்பிதாக்களைப்பற்றி தொடர்ந்து பார்த்து வருகிறோம். அப்போஸ்தலர்களைப்போல விகேமும், ஞானமும் திறமையும் கொண்டவர்களாக இவர்களில் அனைவரும் இல்லாவிட்டாலும் ஒருசிலர் குறிப்பிடத்தக்கவர்களாக இருந்தனர் என்றும் கடந்த இதழில் பார்த்தோம். இவர்கள் காலத்தில் திருச்சபை பல போலிப்போதனைகளை சந்தித்ததோடு மட்டுமல்லாமல் பலவீனமடைந்து வந்ததையும் பார்க்கிறோம். சபைத் தலைவர்கள் வேதபூர்வமான தகுதிகளைக் கொண்டிராதபோது திருச்சபை வரலாற்றில் இந்நிலையையே சந்திக்க வேண்டி வந்தது. ஒரு நூற்றாண்டுகள் உலகைத் தன்பக்கம் திருப்பிய திருச்சபை இப்போது தளர்ச்சியை சந்திக்க ஆரம்பித்தது.

**ஓரிகன் (Origan) (185–254)**

கிறிஸ்தவ சபை சந்தித்த திறமைவாய்ந்த தலைவர்களில் ஒருவராக ஓரிகன் விளங்கினார். போதிப்பதிலும், எழுதுவதிலும் அவர் மிகத்திறமைசாலியாக இருந்தார். கிறிஸ்துவை விசுவாசித்ததற்காக பலியான ஒருவருக்கு மகனாக அலேக்சாந்திரியாவில் பிறந்த ஓரிகன் ஆத்மீக சூழல் நிறைந்த ஒரு குடும்பத்தில் வளர்ந்தார். கிளெமன்டின் மாணவராக இருந்து கல்வி கற்ற ஓரிகன் தனது 18ம் வயதில் ஒரு பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்தார். உபத்திரவங்கள் நிறைந்த அந்தக் காலப்பகுதியிலும் எல்லோராலும் பாராட்டப்படும் அளவுக்கு அவருக்கு மதிப்பு உயர்ந்திருந்தது. ஓரிகனை பாடசாலை அதிபராக நியமித்த டெமீட்ரியஸ் கருத்து வேறுபாடுகளால் ஓரிகனுக்கு எதிரியாக மாறினார். இருந்தாலும் ஓரிகனின் பாடசாலை அநேக மாணவர்களைக் கவர்ந்திழுத்தது. கிழக்கு திருச்சபையின் நல்ல பல பிசப்புக்களை இப்பாடசாலை தயார் செய்திருந்தது.

ஓரிகன் பல நாடுகளுக்கும் போய் சிறந்த ஞானிகளிடம் பயில விரும்பினார். ரோம், யெரூசெலேம் அன்டியோக், கிரீஸ், அரேபியா போன்ற நாடுகளுக்கெல்லாம் ஓரிகன் போனார். வெகு விரைவிலேயே இறையியல் போதனைகளில் ஆலோசனை சொல்லக்கூடிய திறமைசாலியாக கிழக்கு திருச்சபையினால் மதிக்கப்பட்டார். **231** ல் பாலஸ்தீன சீசரேயாவின் திருச்சபை ஓரிகனைப் போதகர் பதவியில் பிரதிஷ்டை செய்து நியமித்தது. இது ஓரிகனின் எதிரியாக இருந்த டெமீட்ரியஸுக்கு அதிக ஆத்திரமூட்டியது. டெமீட்ரியஸ் ஓரிகனை அலெக்சாந்திரிய சபையில் இருந்து ஒழுங்குக் கட்டுப்பாடு மூலம் நீக்கினார். ஓரிகன் பாலஸ்தீனிய சீசரேயாவிலேயே தங்கி எழுதுவதிலும், போதிப்பதிலும், பிரசங்கம் செய்வதிலும், பிரயாணங்கள் செய்வதிலும் நேரத்தை செலுத்தி தனது இறுதிக்காலத்தைக் கழித்தார். கிறிஸ்தவர்களுக்கெதிராக மீண்டும் ஆரம்பித்த துன்புறுத்தல்களின்போது **250**ல் சிறைபிடிக்கப்பட்டு ரோம அதிகாரிகளால் பல துன்பங்களை அனுபவித்து **254**ல் தன் சரீரத்தில் ஏற்பட்ட காயங்களின் காரணமாக மரணமடைந்தார்.

ஓரிகன் வேதத்தை அதிகமாக நேசித்தார். தன் வாழ்வில் தீவிரமாக பல

கட்டுப்பாடுகளைப் பின்பற்றினார். மதுவையும், சுவையான உணவையும் துறந்தார். வெறும் தரையில் உறங்குவதை வழக்கமாகக் கொண்டார். மிகக் கடுமையாக உழைத்து அநேக நூல்களை எழுதித் தயாரித்தார். ஜெரோம் ஒரிகனைப் பற்றிக் கூறும்போது, எந்த ஒரு மனிதனும் தன்னுடைய வாழ்நாளில் வாசித்துத் தீர்க்கமுடியாத அளவுக்கு நூல்களை அவர் எழுதினார் என்று கூறியுள்ளார். சிலர் ஒரிகன் கட்டுரைகளாகவும், கடிதங்களாகவும் 6000 ஐ எழுதியிருந்தார் என்று கூறுகிறார்கள்.

ஒரிகன் பழைய ஏற்பாட்டு நூலொன்றைத் தயாரித்திருந்தார். இதில் பழைய ஏற்பாட்டு எபிரேய வசனங்களுக்கு பக்கத்தில் அவ்வசனங்களை கிரேக்க மொழியில் தந்து மேலும் நான்கு பழைய ஏற்பாட்டு கிரேக்க மொழிபெயர்ப்பு-களையும் தந்திருந்தார். இது ஹெக்செப்லா (Hexapla) என்று அழைக்கப்பட்டது. இது எந்த அளவுக்கு ஒரிகனுக்கு வேதமொழிகளில் பாண்டித்தியம் இருந்தது என்பதை விளக்குகிறது. அத்தோடு பழைய புதிய ஏற்பாட்டு நூல்களின் ஒவ்வொரு நூலுக்கும் விளக்கவுரை எழுதியதோடு பல பிரசங்கங்களையும் எழுத்தில் தந்திருந்தார் ஒரிகன்.

ஒரிகன் ஆரம்ப தத்துவங்கள் (First principles) என்ற பெயரில் சபை வரலாறு கண்ட முதலாவது முறைப்படுத்தப்பட்ட இறையியல் நூலை எழுதினார். இவற்றைத்தவிர ஜெபத்தைப் பற்றிய ஒரு நூலையும், ஆண்டவருடைய ஜெபத்தைப்பற்றிய மிகப் பழமையான ஒரு விளக்கவுரையையும், இரத்த சாட்சியாக மரிப்பவர்களுக்கு ஆறுதல் என்ற நூலையும் எழுதினார்.

தன்னுடைய வாழ்நாளில் ஒரிகன் மாறுபாடுகள் கொண்ட ஒரு மனிதராக விளங்கினார். இன்றும் அத்தகைய மனிதராகவே கணிக்கப்படுகிறார். ஒருபுறம் தாழ்மையும், நற்பண்புகள் கொண்டமனிதராகவும், வேதத்திலும், தத்துவத்திலும் ஆழமான ஞானமுள்ள மனிதராகவும் தென்படுகிறார். இன்னொருபுறம் தனது சிந்தனைகளாலும், எழுத்துக்களாலும் மிகக் கடுமையான வாதப்பிரதாபங்களை ஏற்படுத்திய மனிதராகவும் இருக்கிறார்.

வேதம் மட்டுமே கர்த்தரின் ஆவியால் அருளப்பட்டது என்றும், தத்துவஞானியான பிலேட்டோவோ அல்லது வேறு எவருடைய நூல்களோ வேதத்திற்கு இணையானது இல்லை என்றும் ஒரிகன் சொன்னார். வேதத்தின் அடிப்படையில் மட்டுமே விசுவாசி சிந்திக்க வேண்டும் என்றும் சொன்னார். ஆனால், உண்மையில் ஒரிகனுடைய சிந்தனைகள் அனைத்தையும் பிளேட்டோவின் தத்துவமே வழிநடத்தியது. உதாரணத்திற்கு வேத விளக்க விதிமுறை பற்றி ஒரிகன் போதித்ததைப் பார்ப்போம். வேத வசனங்களை விளக்கும்போது அதற்கு எப்போதும் மூன்றுவிதமான அர்த்தங்கள் உண்டு என்றார் ஒரிகன். முதலாவது சரீரம் (எழுத்துபூர்வமான அர்த்தம்). இரண்டாவது ஆத்துமா (ஒழுக்கம் அல்லது நடத்தை பற்றிய அர்த்தம்), மூன்றாவது ஆவி (ஆவிக்குரிய அர்த்தம்) என்று மூன்று அர்த்தங்கள் உண்டு என்று கூறினார். ஒரிகனின் இந்த விளக்கத்துக்கு பிளேட்டோவின் தத்துவம் காரணமாக இருந்தது. சரீரம், ஆத்துமா, ஆவி என்று மூன்று கூறுகளை மனிதன் கொண்டிருப்பதாக வேதத்தில் இல்லாததை தத்துவஞானியான பிளேட்டோ போதித்தான். இந்த Tricotamist கருத்தை வேதத்தில் பார்க்க முடியாது. இந்தவித சிந்தனைப் போக்குக்கு ஒரிகன் அடிமையாயிருந்தார். இந்துமதம், ரோமன் கத்தோலிக்கமதம் போன்றவற்றின் கலாச்சாரத்தாலும், போதனைகளாலும் பாதிப்படையாமல் தள்ளி நிற்பது எத்தனை அவசியம் என்பதை விசுவாசிகள்

புரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இந்து மதப் போதனைகளை வைத்து கிறிஸ்தவ விளக்கம் கொடுக்க முயல்கிறவர்களைப் போலவே அன்றைக்கு ஒரிகன் தன் வாழ்வில் பெருந்தவறைச் செய்தார். வேதத்தின் ஒவ்வொரு பகுதியிலும், வசனத்திலும் இந்த முறையிலான் மூன்றுவித அர்த்தங்களைப் பார்க்க முயன்ற ஒரிகன் எழுத்து பூர்வமான அர்த்தம் கொடுப்பதைவிட ஒழுக்க நடத்தைகான போதனை இருக்கிறதா என்று பார்ப்பதே மிக அவசியம் என்று நம்பினார். இந்தமுறையில் வேதத்திற்கு விளக்கம் கொடுத்து தன்னுடைய இறையியல் கோட்பாடுகளை ஒரிகன் வளர்த்தபடியால் அவருடைய இறையியல் போதனைகள் வேதத்தின் எழுத்து பூர்வமான அர்த்தத்தோடு தொடர்புடையதாக இருக்கவில்லை.

வேத வசனங்களில் ஆழமான அர்த்தத்தைப் பார்க்க முயன்ற ஒரிகனின் வேதவிளக்க முறை அலகோரிக்கல் (Allegorical) வேதவிளக்க முறை என்று அழைக்கப்படுகிறது. அதாவது, உருவகப்படுத்தல் என்பது இதற்குப் பொருள். இது என்ன என்று நாம் விளங்கிக் கொள்வது அவசியம். உருவகம் என்பது இரண்டு அர்த்தங்களைக் கொண்ட ஒரு கதை. கதையின் முதலாவது அர்த்தம் நேரடியான, வெளிப்படையான அர்த்தம். இரண்டாவது அர்த்தம் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் அர்த்தம். இந்து சமயப் புராணக்கதைகள் எல்லாம் இந்த வகையைச் சேர்ந்ததே. ஒரு வரலாற்று நூலில் நான் வாசித்த, இந்த உருவகப்படுத்தலை விளக்கும் ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். - "மூன்று மனிதர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு உணவு தயாரித்தார்கள்". மூன்று மனிதர்கள் தங்களுடைய பிள்ளைகளின் பசியைப்போக்க உணவு தயாரித்தார்கள் என்பது இவ்வசனத்தின் நேரடியான விளக்கம். அதேநேரம், இந்த வசனத்தில் மறைத்துவைக்கப்பட்டுள்ள ஒரு இரகசிய அர்த்தம் இருக்கிறது என்று நான் சொல்லலாம். அதாவது, திரித்துவக் கடவுளரே மூன்று மனிதர்கள் என்றும், திருவிருந்தே உணவு என்றும், பிள்ளைகள் சபையைக் குறிப்பதாகவும் நான் அர்த்தம் சொல்லலாம். கதையின் விளக்கத்தின்படி, திரித்துவ அங்கத்து-வர்கள் மூவரும் சபையில் ஆத்மவிருத்தியை வளர்க்கும்படி திருவிருந்தை ஏற்படுத்தினார்கள் என்பதே விளக்கம் என்று நான் அர்த்தம் சொல்லலாம். ஒரிகன் வேதவசனங்களுக்கும் அதில் காணப்படும் கதைகளுக்கும் இந்த முறையிலேயே விளக்கம் கொடுத்தார். வேத வசனத்தின் எழுத்து பூர்வமான அர்த்தத்தை ஒரிகன் நிராகரிக்காவிட்டாலும் இந்தமாதிரியான ஆவிக்குரிய அர்த்தமே மிகவும் முக்கியமானது என்று கருதினார்.

இதே முறையில்தான் இன்று தமிழ் கிறிஸ்தவ போதகர்களில் அநேகர் வேதவிளக்கம் கொடுத்து வருகின்றனர். இந்துசமய தத்துவங்களுக்கு கிறிஸ்தவ விளக்கம் கொடுக்கும் சிலர் இதையே செய்துவருகின்றனர். கெட்டகுமாரனின் கதையில் அவனுடைய தகப்பன் மனந்திருந்தி வரும் மகனுக்கு கொடுத்த மோதிரத்திற்கும், விலை உயர்ந்த வஸ்திரத்திற்கும், பாதணிகளுக்கும் ஆத்மீக விளக்கும் அளிக்கும் அநேக போதகர்களை நாம் அறிந்திருக்கிறோம். இந்த மாதிரியான உருவகப்படுத்தும் முறை கர்த்தருடைய வார்த்தையையே சிதைத்துவிடும் மிக மோசமான முறையாகும். கிரேக்க தத்துவ ஞானிகள் இந்த வகையிலேயே தங்களுடைய கடவுளர்களைப்பற்றி விளக்கம் கொடுத்தனர். அதையே இன்று இந்துசமயத்திலும் காண்கிறோம். ஒரிகன் பின்பற்றிய இந்த வேதவிளக்கமுறை பல தவறான போதனைகளை உருவாக்கவே வழிவகுத்தது. படைப்பில் இரண்டு விதங்கள் இருப்பதாகவும், உலகத்தில் உள்ள எல்லோரும் இரட்சிப்பை அடைவார்கள் என்றும்,

*விழுந்தபோன தூதர்களும் இரட்சிப்பை அடைவார்கள் என்றும் பல தவறான விளக்கங்களைக் கொடுத்தார் ஒரிகன். கர்த்தருடைய வேதத்தை உருவகப்படுத்தும் முறை மிக மோசமானதும் ஆபத்தானதுமாகும் என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.*

*ஒரிகனின் இன்னுமொரு போதனை கத்தோலிக்க மதத்திற்கு பிற்காலத்தில் பேருதவி செய்வதாக இருந்தது. ஒரிகன் பிதாவும், குமாரனும் வெவ்வேறான தனித்தன்மை கொண்டவர்கள் என்று விளக்கினார். இக்காலத்தில்தான் ரோமன் கத்தோலிக்கனான செபிலியசின்* (Sabellius) *செபிலியனிசம்* (Sabellianism) *என்ற போதனை பரவிக் கொண்டிருந்தது. செபிலியன் கடவுளில் பிதா, குமாரன் ஆவி என்று மூன்று ஆட்கள் இருக்கின்றார்கள் என்ற வேத போதனையை நிராகரித்தது. கடவுள் ஒருவர் என்று கூறாமல் அவர் ஒரே ஆள்* (only one person) *என்று விளக்கினான் செபிலியன். குமாரனும், ஆவியும் ஆட்கள் அல்ல என்றும், பிதாவின் நடத்தைகளை வேறுவிதமாக விளக்கும் வெறும் தத்துவங்களே என்றும் செபிலியனிசம் போதித்தது. இதனால் இதை மொடலிசம்* (Modelism) *என்றும் மொனாக்கியனிசம்* (Monarchianism) *என்றும் அழைப்பார்கள். வேறு சிலர், தெய்வீகத் தன்மை இயேசுவில் வந்திறங்கியதாலேயே இயேசுவால் பிதாவின் கட்டளைகளைச் செய்ய முடிந்தது என்றும் போதித்தனர். செபிலியனிசத்தை முழு மூச்சாக எதிர்த்த ஒரிகனுடைய திரித்துவப் போதனைகள் ஒரளவுக்கு மட்டுமே வேதத்தை ஒத்திருந்தன. தத்துவம் ஒரிகனின் சிந்தனைகளைப் பெருமளவுக்கு பாதித்து அவருடைய வேதவிளக்கங்களை மாடுபடுத்தின. நித்தியத்திலிருந்து இருந்த தெய்வீக வார்த்தை பிதாவிடமிருந்து புறப்பட்டதாக விளக்கினார் ஒரிகன். அதுவரைக்கும் அவருடைய போதனை சரியே. ஆனால், வார்த்தை பிதாவிடத்திலிருந்தே தெய்வீகத்தை அடைந்ததாகவும், வார்த்தை பிதாவைவிட ஓரளவு குறைந்த தெய்வீகத்தன்மையையே கொண்டிருந்ததாகவும் விளக்கமளித்தார். இதே முறையிலேயே பரிசுத்த ஆவியைப்பற்றியும் விளக்கினார் ஒரிகன். வார்த்தை (இயேசு) நித்தியத்திலிருந்து இருந்தது என்ற ஒரிகனின் போதனை பின்னால்* ***4****ம் நூற்றாண்டில் தோன்றிய ஏரியனின் தவறான போதனைகளை எதிர்க்க நைசீன் கவுன்சிலுக்கு* ***(325)*** *உதவியது.*

*திருச்சபையின் கோட்பாடுகளைத் தவறாது பின்பற்றுவதாகக் கூறிய ஒரிகன் வேதத்தின் பல போதனைகளை கண்மண் தெரியாத விதத்தில் தத்துவரீதியாக சிந்தித்து விளக்க ஆரம்பித்தார். இம்மாதிரியான சிந்தனை அவருடைய வேத விளக்கங்களைப் பெரிதும் மாசுபடுத்தி, இவர் ஒரு போலிப்போதகனோ என்று மற்றவர்கள் கேட்கும்படிச் செய்தது. ஒரிகனின் வாழ்க்கையிலிருந்து நாம் படிக்க வேண்டிய பாடங்கள் நிறைய உண்டு. எவ்வளவுதான் நாம் கிறிஸ்துவை உயிருக்குயிராக நேசித்தாலும் வேதத்திற்கு கட்டுப்பட்டே நாம் வேதவிளக்கங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். வேதம் தெளிவாக நேரடியாக போதிக்கும் உண்மைகளை சத்தியமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். வேதவசனங்களை வேதத்தோடு ஒப்பிட்டுப்படித்து அறிந்து கொள்ளாமல் அதனை உருவகப்படுத்தி நினைத்ததை சொல்ல நமக்கு உரிமை இல்லை. ஒரிகன்விட்ட பெருந்தவறு வேதத்தை எழுத்து பூர்வமாக புரிந்து கொள்ளாமல் உருவகப்படுத்த முனைந்ததுதான். இந்த முறையில் வேத விளக்கமளிக்கும் வழக்கம் பிற்காலத்தில் திருச்சபையைப் பெரிதும் பாதித்தது. ரோமன் கத்தோலிக்க மதத்திற்கான அத்திவாரமும் ஒரிகன் காலத்திலேயே போடப்பட்டுவிட்டது.*

# வெளிப்படுத்தின விசேஷம் - ஒரு விளக்கம்

வெளிப்படுத்தின விசேஷத்தை ஒரு புரியாத புதிர் போலவும், எதிர் காலத்தைப் பற்றி மட்டுமே சுட்டிக் காட்டும் ஒரு காலச்சக்கரம் போலவும், இல்லாததை சொல்லி பலரையும் மயங்க வைக்க உதவும் ஒரு தீர்க்கதரிசன நூலாகவும் பலரும் பலவிதமாக இன்று அதைப் பயன்படுத்தி வருகின்றார்கள். ஆனால், ஏனைய வேத நூல்களைப் போல இதுவும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அவசியமான ஆத்மீக உணவளிக்கும் வேத சத்தியமாகக் கருதி எவரும் இதைப்படிக்க முன்வருவதில்லை. இந்நூலைப்பற்றி உங்களுடைய மனத்தில் ஏற்கனவே பதிந்துபோயிருக்கும் எண்ணங்களையெல்லாம் அகற்றிவைத்துவிட்டு திறந்த மனத்தோடு நாம் தரப்போகும் விளக்கத்தை ஆராய்ந்து பாருங்கள். இதை வில்லியம் ஹென்றிக்சன் (William Hendriksen) என்ற வேத அறிஞர் More than Conquerors என்ற நூலில் விளக்கியிருக்கிறார். ஹென்றிக்சன் இந்நூலை விளங்கிக் கொள்ள அவசியமான **9** விதிகளைத் தன் நூலில் விளக்குகிறார். அவர் தந்துள்ள விதிகளைப் பின்பற்றி வெளிப்படுத்தின விஷேசத்தைப் படித்தால் கர்த்தருடைய வார்த்தையின் இந்த முக்கியமான பகுதி நமக்கு ஒரு புதிராகத் தெரியாது. அவ்விதிகளை இப்பகுதிகளில் சுருக்கமாகத் தருகிறோம்.

**விதி 1: முதலாவது விதி இந்நூலின் அமைப்பைப் பற்றியது. வெளிப்படுத்தல் சுவிசேஷம் ஏழு பாகங்களைக் கொண்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் கிறிஸ்துவின் முதல் வருகையில் இருந்து அவருடைய இரண்டாவது வருகைமட்டுமான புதிய உடன்படிக்கையின் காலத்தை விளக்குவதாக இருக்கின்றன. அதேநேரம், அவை ஒவ்வொன்றும் ஒரே காலத்தைப் பற்றிவிளக்குவதாகவும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ளவையாகவும் காணப்படுகின்றன.**

இந்நூலின் முதல் பாகம் குத்துவிளக்குத் தண்டங்களின் மத்தியில் இருக்கின்ற கிறிஸ்துவைப் பற்றி விளக்குகின்றன (1:1 - 3:22). ஏழு விளக்குத்தண்டங்களும் ஏழு சபைகளைக் குறிக்கின்றன. இந்த ஏழு சபைகளும் கிறிஸ்துவின் முதல் வருகையில் இருந்து இரண்டாம் வருகைவரையும் இந்த உலகில் இருக்கப் போகின்ற சபைகளைக்குறிப்பதாக இருக்கின்றன. "இந்தமுறையில் விளக்கும்போது ஒவ்வொரு சபையும் ஒரு 'மாதிரியாக' (Type) இருக்கின்றது. இம்மாதிரிகள் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியை விளக்காமல் பல்வேறு சபைகளின் வாழ்க்கையிலும் தொடர்ச்சியாக மாறி மாறி நிகழ்ந்துவரும் சம்பவங்களைக் குறிப்பதாக இருக்கின்றன." என்று ஹென்றிக்சன் கூறுகிறார். கிறிஸ்துவின் முதலாவது வருகை பற்றி 1:5 ல் விளக்கப்படுகிறது. அவரது இரண்டாம் வருகைபற்றி 1:7 விளக்குகிறது.

இந்நூலின் இரண்டாம் பாகம், "பரலோக காட்சியையும், முத்திரைகளையும்" பற்றியது (4:1 - 7:17). இந்தப் பாகம் கிறிஸ்து மகிமையுடன் தனது சிம்மாசனத்தில் வீற்றிருந்து ஏழு முத்திரைகளுடன் இருந்த புத்தகச் சுருளைத் திறப்பதுடன் ஆரம்பிக்கிறது. பலிகொடுக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் இப்போது மகிமையுடன் ஆள்பவராக இப்பகுதியில் காட்சியளிக்கிறார். அத்தோடு,

இவ்வுலக மக்களை நாடி வரும் தொடர்ச்சியான தண்டனைகளை விபரிப்பதோடு வரலாறு இப்பகுதியில் விளக்கப்படுகிறது. அவ்வரலாறு இறுதியான நித்திய ஆக்கினைத் தீர்ப்புடன் முடிவுக்கு வரப்போவதையும் இப்பகுதி விளக்குகிறது. இந்தப்பகுதி கிறஸ்துவின் முதலாம் வருகையின் ஆரம்பத்தில் நடந்த நிகழ்ச்சிகளை விபரிப்பதோடு ஆரம்பித்து (5:5, 6) அவருடைய இரண்டாம் வருகையின்போது நிகழப்போகின்ற காரியங்களை விபரிப்பதோடு முடிவடைகின்றது (6:17, 7:16, 17).

இந்நூலின் மூன்றாம் பாகம், ஏழு எக்காளங்களையும் விளக்குகின்றது (8:1 - 11:19). இந்த எக்காளங்கள் இந்த உலகம் அனுபவிக்கப்போகின்ற தண்டனைகளை அறிவிக்கின்றன. அதேநேரம், திருச்சபை தொடர்ந்து இந்த உலகத்தில் சாட்சி கொடுத்து வருகின்றது (10 & 11). இந்தப் பகுதியின் முடிவில் மறுபடியும் இறுதி நியாயத்தீர்ப்பைப்பற்றிய விளக்கத்தைப் பார்க்கிறோம் (11:15, 18).

இந்நூலின் நான்காம் பாகம், "துன்புறுத்தும் வலுச்சர்ப்பத்தைப்" பற்றி விளக்குகிறது (12:1-14:20). இந்தப்பகுதி படைப்பிலிருந்து கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரையுமான உலக வரலாற்றை உள்ளடக்கியதாக இருக்கிறது. வசனம் 12:5 கிறிஸ்துவின் முதலாம் வருகையை சுருக்கமாக அறிவிக்கிறது. கிறிஸ்து இப்போது சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டுவிட்டதால் வலுச்சர்ப்பம் விசுவாசிகளின் மீது பெரும் போரை ஆரம்பிக்கிறது. அதற்காக ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் கொண்ட மிருகத்தையும் (13:1), ஆட்டுக்குட்டிக்கு ஒப்பானதாக இரண்டு கொம்புகளைக் கொண்டதாக இருந்த இரண்டாவது மிருகத்தையும் (13:11, 12), பாபிலோன் நகரத்தையும் (13:8) பயன்படுத்திக் கொள்கிறது. இறுதி நியாயத்தீர்ப்புக்காக வரும் கிறிஸ்துவின் இரண்டாவது வருகையோடு இப்பகுதி நிறைவுக்கு வருகிறது (14:14-16).

ஐந்தாம் பாகம், "ஏழு கோபக்கலசங்களைப்" பற்றிய விளக்கத்தைத் தருகிறது (15:1-16:21). இந்தப் பாகம் மறுபடியும் கர்த்தருடைய தண்டனைகளைப்பற்றி விளக்கி, 16:20 ல் இறுதி நியாயத்தீர்ப்பைப்பற்றிக் கூறுவதோடு முடிவடைகிறது.

ஆறாம் பாகம், பாபிலோனின் வீழ்ச்சி பற்றியதாகும் (17:1 - 19:21). கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் உலகில் காணப்படும் ராஜ்யங்கள் கிறிஸ்துவால் அழிக்கப்படுவதை விளக்கி அவருடைய இரண்டாம் வருகையைப்பற்றி 19:11:16ல் தெரிவிப்பதோடு இப்பாகம் நிறைவு பெறுகிறது.

ஏழாம் பாகத்தின் மூலம் சாத்தானின் இறுதி முடிவைப் பற்றி நாம் அறிந்து கொள்கிறோம். சாத்தான் ஆயிரம் வருடங்களுக்கு கட்டி வைக்கப்படுவதாக 20:2, 3 வசனங்கள் சொல்லுகின்றன. இது கிறிஸ்துவின் முதலாம் வருகையுடன் ஆரம்பமாகிறது. ஆகவே, சாத்தான் இப்போது கட்டிவைக்கப்பட்டிருக்கிறான். இந்த ஆயிரம் வருடங்கள் முடிவுக்கு வரும்போது ஒரு கொஞ்சக் காலப்பகுதிக்கு (little season) சாத்தான் கட்டவிழ்த்து விடப்படுவான் (20:7). பின்பு இறுதியாக அவனுடைய சகல அதிகாரங்களும் அழிக்கப்பட்டு தூக்கி எறியப்படுவான் (20:10). "வெளிப்படுத்தல் சுவிசேஷம் ஏழு பாகங்களைக் கொண்டது. இந்த ஏழு பாகங்களும் இரயில் தண்டவாளங்களைப் போல ஒன்றுக்கொன்று சமமாக போய்க்கொண்டிருக்கின்றன (The seven sections are parallel to one another). ஒவ்வொரு பாகமும் கிறிஸ்துவின் முதல் வருகையிலிருந்து இரண்டாம் வருகை மட்டுமான காலப்பகுதியை விளக்குகின்றன. இந்த ஏழாம் பகுதி அதே காலப்பகுதியை ஏனைய பகுதிகளைவிட ஒரு புதிய கோணத்தில் விளக்கு-

*கின்றன" என்கிறார் ஹென்றிக்சன்.*

*இந்த நூலின் பிரிவுகளை பின்வருமாறு விளக்கலாம்:*

*அ. உலகத்தில் நடக்கும் போராட்டம் - திருச்சபை உலகத்தால் துன்புறுத்தப்படுகிறது. திருச்சபை பாதுகாக்கப்பட்டு, பெரு வெற்றி பெறுகிறது. அதன் எதிரிகளுக்கெதிராக அதற்கு நீதி கிடைக்கிறது. (வெளி.* ***1-11****).*

*1. ஏழு பொற்குத்துவிளக்குத் தண்டங்களுக்கு மத்தியில் கிறிஸ்து* ***(1-3)***

*2. ஏழு முத்திரைகளைக் கொண்ட புத்தகம்* ***(4-7)***

*3. ஏழு எக்காளங்கள்* ***(8-11)***

*ஆ. இதற்குப்பின்னால் உள்ள ஆழமான ஆத்மீக பின்னணி - கிறிஸ்து (திருச்சபை) வலுசர்ப்பத்தாலும் (சாத்தான்) அதன் உதவிக்காரர்களாலும் துன்புறுத்தப்படுதல். இறுதியில் கிறிஸ்துவும் அவருடைய சபையும் பெரு வெற்றி அடைதல் (வெளி.* ***12-22****).*

*4. ஸ்திரீயும், ஆண்பிள்ளையும் வலுசர்ப்பத்தாலும் அதன் உதவியாளர்களாலும் (மிருகங்களும், வேசியும்) துன்புறுத்தப்படுகிறார்கள்* ***(12-14)***

*5. ஏழு கோபக்கலசங்கள்* ***(15, 16)***

*6. வேசியினதும், மிருகங்களினதும் பெரு வீழ்ச்சி* ***(17-19)****.*

*7 வலுசர்ப்பத்தின் (சாத்தான்) மீதான நியாத்தீர்ப்பும், புதிய வானமும் புதிய உலகமும் (புதிய எருசெலேம்)* ***(20-22)***

**விதி 2: இரண்டாவது விதி இந்நூலின் தன்மை பற்றிய இன்னுமொரு உண்மையை விளக்குகிறது. இதுவரை இந்நூலில் ஒன்றுக்கொன்று சமமாகக் காணப்படும் ஏழு பாகங்களையும் நாம் பார்த்தோம். இனி இரண்டாம் விதியைப் பார்ப்போம். – இந்த ஏழு பாகங்களையும் இரண்டு பெரு முக்கிய பகுதிகளுக்குள் கொண்டு வரலாம். முதலாவது பெரும் பாகம் (1–11) மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. இரண்டாவது பெரும் பாகம் (12–22) நான்கு பகுதிகளைக் கொண்டு காணப்படுகின்றது. இந்த இரண்டு பெரும் பாகங்களும் ஆத்மீகப் போராட்டத்தின் ஆழமான வளர்ச்சியை அல்லது அதன் தீவிரத்தை வெளிப்படுத்துவதாக இருக்கின்றன. முதலாவது பெரும் பாகம் (1–11) கிறிஸ்துவைத் தனக்குள் கொண்டிருந்து இவ்வுலகத்தால் துன்புறுத்தலுக்குள்ளாகும் திருச்சபையைப் பற்றி விளக்குகிறது. இரண்டாவது பெரும் பாகம் (12–22) சபை அனுபவிக்- கும் இந்த ஆழமான ஆத்மீகப் போராட்டத்தின் பின்னணியை விளக்குகின்றது. இது கிறிஸ்துவுக்கும் வலுச்சர்ப்பத்திற்கும் இடையில் நடக்கும் போராட்டம். இந்தப்போராட்டத்தில் கிறிஸ்துவே வெற்றி அடைகிறார் – அதாவது அவரது திருச்சபை வெற்றி அடைகின்றது.**

*முதலாவது பாகத்தில் (அதிகாரங்கள் 1-11) மனிதர்களுக்கிடையில் நடைபெறும் போராட்டத்தை வாசிக்கிறோம். அதாவது, விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தை இது விளக்குகிறது. கிறிஸ்து வாழும் திருச்சபை உப்பாகவும், ஒளியாகவும் இருந்து இந்த உலகத்தைத் தாக்குகிறது. ஆனால், உலகம் திருச்சபையின் செய்தியை நிராகரிக்கிறது.*

*வெறுப்போடு உலகம் திருச்சபையைத் துன்புறுத்துகிறது. இப்பாகத்தின் இறுதியில் திருச்சபை மகா வெற்றி அடைவதைப் பார்க்கிறோம். இந்தப் பாகம் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.*

*(1) குத்துவிளக்குகளுக்கு மத்தியில் இருக்கும் கிறிஸ்து (அதிகாரங்கள் **1-3**);*
*(2) ஏழு முத்திரைகளைக் கொண்ட புத்தகச் சுருள் (அதிகாரங்கள் **4-7**);*
*(3) தண்டனைகளின் ஏழு எக்காளங்கள் (அதிகாரங்கள் **8-11**).*

*இரண்டாம் பாகத்தில் (**12-22**) இந்தப் போராட்டத்தின் கண்ணால் காண-முடியாத ஆத்மீகப் பின்னணியைப்பற்றி அறிந்து கொள்கிறோம். மனிதர்களுக்-கிடையில் ஏற்படும் இந்த ஆத்மீகப் போராட்டத்திற்கு ஆண்பிள்ளையான கிறிஸ்துமேல் சாத்தான் கொண்டுள்ள கொடூர வெறுப்பே காரணம். இயேசுவை தோற்கடிக்க முடியாத சாத்தான் இப்போது அவரைப்பின்பற்றும் சீடர்களின் மீது தனது கோபத்தையும், வெறுப்பையும் காட்டுகிறான். தனது காரியங்களுக்-காக சாத்தான் இரண்டு மிருகங்களையும், பாபிலோனையும் பயன்படுத்திக்-கொள்கிறான். இருந்தபோதும் அவையெல்லாமே இறுதியில் தூக்கி எறியப்படு-கின்றன.*

*(1) ஸ்திரியும், ஆண்குழந்தையும் சாத்தானாலும், அவனுடைய உதவியாளர்களாலும் துன்புறுத்தப்படுகிறார்கள்: மிருகங்களும், பாபிலோனும் (**12-14**).*
*(2) கோபாக்கினையின் ஏழு கலசங்கள் (**15-16**)*
*(3) மகா பாபிலோனினதும், மிருகங்களினதும் வீழ்ச்சி (**17-19**)*
*(4) வலுசர்ப்பமான சாத்தானின் நியாயத்தீர்ப்பும், புதிய வானங்களினதும், புதிய உலகத்தினதும் தோற்றம்: புதிய எருசெலேம் (**20-22**).*

**விதி 3: மூன்றாம் விதி இந்நூலின் ஒருங்கிணைந்த தன்மையைப் புரிந்து கொள்ள உதவுகிறது. இம்மூன்றாம் விதியாவது, இந்நூல் ஒன்றே என்பதாகும். இந்நூலில் மனிதர்களுடைய நடத்தைகளும், தெய்வீக அரசாட்சியும் பகுதி பகுதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன: உதாரணமாக, குத்துவிளக்குத் தண்டுகளுக்குப்பின் முத்திரைகள் எழுகின்றன. முத்திரைகள், எக்காளங்களுக்கு இடம் கொடுக்கின்றன.**

*வெளிப்படுத்தல் விஷேசம் வெவ்வேறு பாகங்களாக விளக்கப்பட்டிருந்த போதும், அது முறைப்படுத்தப்பட்டு ஒருங்கிணைந்த ஒரே நூலாக இருக்கின்றது. அது வெவ்வேறு விண்ணகக் காட்சிகளைக் கொண்டிருந்தபோதும், திருச்சபைகளுக்கு ஒரே செய்தியைக் கொடுக்கின்றது. இந்நூலின் பல பிரிவு-களையும் நாம் படிக்கின்றபோது அந்தச் செய்தி படிப்படியாக வளர்ச்சிபெற்று கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோடு தனது உச்சநிலையை அடைகின்றது. நூலின் ஒவ்வொரு பிரிவும் ஏனைய பிரிவுகளோடு நெருங்கிய தொடர்-புள்ளவையாக இருக்கின்றன.*

*வெளிப்படுத்தல் விசேஷம், இரண்டு பெரும் பாகங்களாகப் பிரிக்கப்-பட்டு, அவை மேலும் ஏழு பிரிவுகளைக் கொண்டிருந்தபோதும், ஒரே முடிவைநோக்கி வளர்ந்து செல்லும் ஒருங்கிணைந்த நூலாகக் காணப்-படுகின்றது. இந்நூலின் ஒவ்வொரு பகுதியும் மனிதனின் ஒழுக்கம், நடத்தை மற்றும் தேவனின் இராஜ்யம் பற்றிய ஒரே விபரங்களையே தருகின்றன. திருச்சபை எப்போதும் தனக்குள் ஜீவனுள்ள கிறிஸ்துவைக்கொண்டு ஒளிவிளக்காக வரலாற்றில் சுடர் விடுகிறது. உலகம் எப்போதும் கிறிஸ்துவை*

*வெறுத்து திருச்சபையை துன்புறுத்துகிறது. தேவஆட்டுக்குட்டிக்கும், சாத்தானுக்கும் இடையில் உள்ள போராட்டமே மனிதர்களுக்கிடையில் உள்ள போராட்டங்களுக்கெல்லாம் பின்னணியாக இருக்கின்றது. உலகம், மனிதரை மயக்கும் வேசியைப்போல விசுவாசிகளை சுகபோகத்தால் மயக்கி கிறிஸ்துவுக்கு அவர்கள் சேவை செய்வதைத் தடுப்பதில் மும்முரமாக இருக்கிறது. ஆனால், இந்த தேவஆட்டுக்குட்டியின் எதிரிகள் எல்லோரும் தோல்வியைத் தழுவி அழிவை சந்திக்கிறார்கள். வரலாறு முழுவதும் கிறிஸ்துவின் எதிரிகளுக்கு தோல்வியும், அழிவும் மட்டுமே மிஞ்சுகிறது. போராட்டம் தீவிரமடையும், ஆனால், இறுதி வெற்றி எப்போதும் நமக்கே. அடிவானத்தில் அது நமக்காகத் தொடர்ந்து காத்திருக்கிறது.*

**விதி 4: நான்காவது விதி வெளிப்படுத்தல் விஷேசத்தின் உள்ளடக்கம் பற்றியது. இந்நூலின் பொருள், அதன் நோக்கங்கள் எல்லாம் படிப்படியாக வளர்ச்சி அடைந்து இறுதி முடிவை நோக்கி நகர்கின்றன. இம்மறைபொருள் விசேஷத்தின் ஏழு பாகங்களும் படிப்படியாக உயர்ந்து ஒவ்வொன்றும் இறுதியில் ஒரு முக்கிய கட்டத்தை அடைவதாகக் காட்டப்பட்டுள்ளது. கடைசிக்கால நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்கள் படிப்படியாக வளர்ந்து முன்னேறுகின்றன. இறுதி நியாயத்தீர்ப்பு பற்றிய அறிவிப்பு முதலில் கொடுக்கப்படுகிறது, அதன்பின் அது அறிமுகப்படுத்தப்பட்டு, இறுதியில் இதற்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது. இதேமுறையில் புதிய பரலோகமும், புதிய உலகமும் இந்நூலின் ஆரம்ப பாகங்களைவிட இறுதிப் பாகத்திலேயே விளக்கமான விபரங்களைத் தருகின்றன. இந்நூலுக்கு இந்த முறையில் அளிக்கப்படும் விளக்கத்தை வில்லியம் ஹென்றிக்சன், புரோகிரசிவ் பெரலலிசம் (Progressive Parallelism) என்று அழைக்கிறார்.**

*இதுவரை நாம் பார்த்து வந்திருக்கின்ற விதிமுறைகள் எல்லாக்காலங்களிலும், எல்லா இடங்களிலும் இருக்கும் திருச்சபைகளுக்கும் பொருந்துகின்றன. இந்த முறையில் வெளிப்படுத்தல் விசேஷம் வரலாறு குறித்த வேதபூர்வமான தத்துவத்தை அளிக்கிறது. இந்த முறையில் சாத்தானின் ஏமாற்றுதல்களின் தாக்கத்திற்குள்ளாகும் மனிதர்களுடைய நடத்தைகளை நாம் புரிந்து கொள்ளத் தேவையான விதிமுறைகளை இந்நூல் அளிக்கிறது. இந்த விதிமுறைகளின் அடிப்படையில் நாம் நிகழ்ந்து முடிந்துவிட்ட நிகழ்ச்சிகளையும், இனி நடக்கப்போகும் நிகழ்ச்சிகளையும் புரிந்து கொள்ளலாம். இந்நூலில் நாம் பார்க்கும் இரண்டு மிருகங்களும் தங்களுடைய சொரூப வணக்க முறையின் அடிப்படையில் சமய, கலாச்சார, சமூக அமைப்புகளை இவ்வுலகத்தில் வளர்ப்பதைப் பார்க்கிறோம். அதேநேரம், கர்த்தர் தன்னுடைய திருச்சபை மூலம் நற்செய்தியைப் பிரசங்கித்து பாவிகளை மனந்திரும்பும்படி பொறுமையுடன் அழைப்பதையும் பார்க்கிறோம். எக்காளங்களின் தோனியின் மூலம் வரும் நியாயைத்தீர்ப்பு பற்றிய எச்சரிக்கைகளைக் கேட்டு பாவிகள் மனந்திரும்பாதபோது அந்த எக்காளங்களைத் தொடர்ந்து கர்த்தரின் கோபக்கலசங்கள் வருவதையும் நாம் இந்நூலில் இருந்து புரிந்து கொள்கிறோம். அதன்பிறகு இவ்வுலகை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் சாத்தானின் ஆட்சி இறுதியாக அழிக்கப்படுகிறது; பாபிலோன் வீழ்கிறது. இதைக்குறித்து ஏற்கனவே வரலாறு நமக்குப் பல உதாரணங்களைத் தந்திருக்கிறது: ரோமப் பேரசின் காலம், கிறிஸ்தவ பைசாந்தியக் காலம், இஸ்லாமிய ஒட்டமன் துருக்கியர்களின் காலம், ஐரோப்பிய எதேச்சாதிகாரிகளின் காலம், ஹிட்லரின் நாட்சிகளின் கொடுமை, ஸ்டாலினின் ரஷ்யா, மாவோசேதுங்கின் சீனக்கலாச்சாரப்புரட்சி,*

*ரஷ்யாவின் பொருளுடைமைவாதம் என்று இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். இவையெல்லாம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருக்கின்றவைகளின் வெளிப்படுத்தல்களே. எப்படியானாலும் பாபிலோன் இறுதியில் விழத்தான் வேண்டும். அதன் முடிவு வருடங்கள், பத்துவருடங்கள், நூறுவருடங்கள் சென்றாலும் இறுதியில் வந்தேதீரும். கர்த்தர் எல்லாவற்றையும் இறுதியில் நியாயந்தீர்த்து சாத்தானின் கொட்டத்தையும், அவனுடைய தேவவிரோதமான அமைப்புகளையும் முற்றாக அழிப்பார். இதன் மூலம் இக்கால முழுவதற்குமான ஒரு உதாரணத்தைப் பார்க்கிறோம். அதாவது, இக்காலமும் அதன் இறுதி நியாயத்தீர்ப்பைச் சந்தித்து இருட்டின் இராஜ்யம் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படும்.*

**விதி5: இந்நூலின் முழுப்பகுதியும் நகருகின்ற காட்சிகளைக் கொண்டமைந்திருக்கின்றது. ஒவ்வொரு காட்சியோடும் தொடர்புடைய அம்சங்களை நாம் இந்நூலின் மையப்போதனையின் அடிப்படையிலேயே விளங்கிக்கொள்ள வேண்டும். ஆகவே, நாம் எப்போதும் இக்காட்சிகளைக்குறித்து முக்கியமான இரண்டு கேள்விகளைக் கேட்க வேண்டும். (1) இக்காட்சியின் முழு விபரம் என்ன? (2) இதன் மையக்கருத்து என்ன?**

*வெளிப்படுத்தல் விசேஷம் கண்களுக்கு விருந்தளிக்கும் பல காட்சிகளை அளிக்கும் நூலாக இருக்கின்றது. கடந்த கால சந்ததியினர் அதிகமாக செய்திகளைக் கேட்டு அறிந்துகொள்ளுவதிலேயே ஆர்வம் காட்டினார்கள். நமது சந்ததி கண்களுக்கு விருந்தளிக்கும் காட்சிகளிலேயே அதிக அக்கறை காட்டுகிறது. வெளிப்படுத்தல் விசேஷம் சத்தியத்தை காட்சிகளாக அடையாள மொழியில் விளக்கும் நூல். இது ஒரு சினிமாப்படம் போல காட்சிகளை ஒன்று மாற்றி ஒன்றாக நமக்குக் காட்டுகின்றது. ஒவ்வொரு சுழல் முறை நிகழ்ச்சியிலும் ஒரு மேடை அமைக்கப்பட்டு, அங்கே நடிகர்கள் காட்சிகளில் நடிக்க ஆரம்பிக்கின்றனர். இந்நூலின் ஆரம்பத்தில் இருந்தே எல்லாம் காட்சிகளாகத்தான் வர்ணிக்கப்படப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. "சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை தம்முடைய ஊழியக்காரருக்கு காண்பிக்கும் பொருட்டு" என்று முதலாம் வசனத்தில் எழுதியிருப்பதைப் பார்க்கிறோம். காண்பிப்பது என்றால், தெய்வீக வெளிப்பாட்டை காட்சிகள் மூலம் விளக்குவது என்று பொருள்.*

*இதில் தரப்பட்டுள்ள மறைபொருள் விளக்கப்படக்காட்சியை நாம் பார்க்கும்போது முதலாவதாக கேட்க வேண்டிய கேள்வி - இதில் நாம் பார்க்கும் முழுக் காட்சியும் என்ன? என்பதுதான். இதைப்புரிந்து கொள்ள நாம் ஒருபோதும் உருவகப்படுத்தி எதையும் விளங்கிக்கொள்ளும் முறையைப்* (Allegorical method) *பின்பற்றக்கூடாது. இந்த முறையில் வேதத்திற்கு விளக்கங் கொடுக்க முயல்பவர்கள் ஒரு அடையாளத்தின் எந்த ஒரு சிறு பகுதியையும் விட்டு வைக்காமல் எல்லாவற்றிற்கும் ஏதாவது ஒரு பொருள் கொடுக்க முயல்வார்கள். இந்த முறை சீக்கிரமே தேவையில்லாமல் கன்னா பின்னாவென்று சிந்திக்க ஆரம்பித்து எல்லாவற்றிற்கும் பொருளற்ற விளக்கங்களை கொடுக்க ஆரம்பித்து விடுகிறது. இத்தகைய வேத விளக்க முறையை சபை வரலாற்றின் இருண்டகால பகுதி அறிஞர்கள் பயன்படுத்தியதோடு, முக்கியமாக அதை உவமைகளை விளக்கப் பயன்படுத்தினர். வெளிப்படுத்தல் விசேஷத்தின் மறைபொருள் விளக்கக் காட்சியைப்போலவே, உவமைகளும் பொதுவாக ஒரு மையமான போதனையை அளிப்பவையாக இருக்கும். அவற்றின்*

மையக்கருத்தைப் புரிந்து கொள்ள நாம் முழுக்காட்சியையும் பார்த்தல் அவசியம். அதன் ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியாகப் பிரித்து அவற்றிற்கு பொருள் கொடுக்கப் பார்க்கக்கூடாது. அதன் ஒவ்வொரு சிறு பாகமும் ஆத்மீக அர்த்தத்தைக் கொடுப்பதற்காக அக்காட்சியில் கொடுக்கப்படவில்லை. அக்காட்சியின் மையக்கருத்தை விளக்குவதற்காக மட்டுமே அவை அக்காட்சியில் இடம் பெறுகின்றன.

மறைபொருள் விளக்கப்படக்காட்சியைப்பற்றி நாம் இரண்டாவதாக கேட்க வேண்டிய கேள்வி, அக்காட்சியின் தலைமையான போதனை என்ன? என்பதுதான். அக்காட்சியின் ஒவ்வொரு பகுதியையும் வலியுறுத்தி அவற்றிற்கு நாம்பொருள் தேடப் பார்க்கக்கூடாது. மறைபொருள் விளக்கக்காட்சி நமக்கு ஒரு சத்தியத்தை வெளிப்படுத்தக் கொடுக்கப்பட்டிருப்பதால் நாம் அதைக் கவனத்துடன் விளங்கிக் கொள்ளப் பார்க்க வேண்டும். இங்கே, நமக்கு அதிக ஞானம் தேவைப்படுகிறது. அதே நேரத்தில் வேதத்தை விளங்கிக்கொள்ளப் பயன்படுத்த வேண்டிய விதிகளை சாமர்த்தியத்துடன் பயன்படுத்த வேண்டிய பக்குவமும் நமக்கு தேவைப்படுகிறது. வேதத்தில் மேலான, முதிர்ந்த அறிவை அடையும்போது அத்தகைய சாமர்த்தியம் நமக்குக் கிடைக்கிறது. யோவான், அப்போஸ்தல வெளிப்பாடுகளின் முடிவு நெருங்கிக்கொண்டிருக்கும் காலப்பகுதியில் இந்நூலை எழுதியுள்ளார். அவர் இந்தக்காலத்தின் முழுப்பகுதிக்கும் பயன்படும்விதத்தில் தன்நூலை எழுதியிருக்கிறார். ஆகவே, இது தரும் முழுக்காட்சிதான் என்ன? அதன் மையக்கருத்துதான் என்ன? என்ற கேள்விகளை நாம் கேட்பது அவசியம். இந்தக்காட்சியின் ஏனைய பகுதிகளுக்கு நாம் விளக்கமளிப்பதானால், அதற்கு அந்தப்பகுதிகள் இந்தக்காட்சியின் மையக்கருத்தை நாம் அறிந்து கொள்வதற்குத் துணை செய்வதாக இருக்க வேண்டும். இனி அடுத்த விதியைப் பார்ப்போம்.

**விதி 6: இதில் நாம் காணும் முத்திரைகளும், எக்காளங்களும், கோபக்கலசங்களும், அதேபோன்ற ஏனைய அடையாளங்களும் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளையோ அல்லது வரலாறுபற்றிய விளக்கமான விபரங்களையோ நமக்குத் தராமல் இவ்வுலக வரலாறு முழுவதிலும், முக்கியமாக இந்தப்புதிய உடன்படிக்கையின் காலத்தில் செயல்பட்டுவரும் மனிதர்களுடைய நடவடிக்கைகள், தேவ நிர்வாகம் ஆகியவற்றின் பின்னணியில் இருக்கும் அடிப்படைக் காரணிகளையே விளக்குகின்றன.**

இந்த விதி, வெளிப்படுத்தல் விசேஷத்தின் அடையாளங்களை மேலைத்தேய திருச்சபையின் வரலாற்றின் குறிப்பிட்ட நிகழச்சிகளோடு மட்டும் தொடர்புபடுத்தி விளக்கும் ஹிஸ்டோரிசிஸ்ட்டின் (Historicist) விளக்கத்திற்கு முரணானது (வரலாற்று நிகழ்ச்சிகளை மட்டும் மையமாகக் கொண்டமையும் விளக்கம்). ஹிஸ்டோரிசிஸ்ட்டின் விளக்கங்கள் ஐரோப்பாவையே பெரும்பாலும் தழுவியதாகவும் முழு உலகளாவியதான வெளிப்படுத்தல் விசேஷத்தின் தன்மைகளை அலட்சியம் செய்பவையாகவும் இருக்கின்றன. குறிப்பிட்ட சில வரலாற்று நிகழ்ச்சிகளை மட்டும் தனிமைப்படுத்தி அவற்றைப் பற்றி மட்டுமே வெளிப்படுத்தல் விசேஷத்தின் அடையாளங்கள் வர்ணிக்கின்றன என்று நாம் கூறுவோமானால், இந்நூலின் போதனைகளின் பயனை நாம் இழந்தவர்களாகி விடுவோம். வரலாற்றில் தொடர்ந்து காணப்படும் மனித நடவடிக்கைகள், தேவநிர்வாகம் ஆகியவற்றின் உதாரணங்களாகக் குறிப்பிட்டுக்கூறும்படி வரலாற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட அநேக நிகழ்ச்சிகள் இருப்பதை நாம் காண்கி-

*றோம். இவற்றில் ஒன்றை மட்டும் தெரிவு செய்து அதன் நிறைவேற்றுதலைக்குறித்துத்தான் இந்நூல் விளக்குகிறது என்று சொல்லும் அதிகாரம் யாருக்கு இருக்கின்றது? காட்சிகளாக இந்நூலில் வர்ணிக்கப்பட்டுள்ள அடையாளங்கள் உலக வரலாற்றில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் போராட்டங்களின் பின்னணியில் இருக்கும் தத்துவங்களை படம்பிடித்துக் காட்டுவனவாக இருக்கின்றன. இவை இன்றும் ஐரோப்பா, சீனா, ஆபிரிக்கா, அமேரிக்கா, ஆசியா, ஏன் இந்தியாவிலும், இலங்கையிலும்கூட நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அவை மனித நடவடிக்கைகளையும், தூதர்களினதும் பிசாசினதும் நடவடிக்கைகளையும், தெய்வீக இறை ஆண்மையின் இரகசியமான செயல்முறைகளையும் படம் பிடித்துக் காட்டும் மறைபொருள் விளக்கக் காட்சிகளாக இருக்கின்றன. இவை உலகத்தில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் மட்டும் நிகழ்வதாகவோ அல்லது வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியாகவோ மட்டும் இல்லாமல் மிகப்பரந்தவையாக, உலகளாவியதாக இருக்கின்றன. இந்நூலில் நாம் வாசிக்கும் முத்திரைகள் உலகின் நான்கின் ஒரு பாகத்தைப் பாதிக்கிறவையாக இருக்கின்றன. எக்காளங்கள் உலகின் மூன்றில் ஒரு பாகத்தைப் பாதிப்பவையாக இருக்கின்றன. வாதைகளும், கோபக்கலசங்களும் முழு உலகத்தையும் பாதிப்பவையாக இருக்கின்றன. அடையாள மொழியில் இந்நூலில் விளக்கப்படும் நிகழ்ச்சிகள் மனித வர்க்கத்தின் பெரும் பகுதியைப் பாதிக்கின்றவையாக இருக்கின்றன. உதாரணமாக எக்காளங்கள், இருண்டகால ஐரோப்பியர்கள் எதிர்த்த ஒரு போப்பை மட்டும் குறிப்பவையாக இல்லாமல் மனிதவர்க்கத்தைக் குறிப்பவையாக இருக்கின்றன. சில வேளைகளில் இவ்வடையாளங்கள் முழு மனிதவர்க்கத்தையும் அதன் துவக்கத்திலிருந்து படம்பிடித்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளன. ஆகவே, இந்த அடையாளங்கள் ஆதாமின் வீழ்ச்சியிலிருந்து, அதுவும் மிகவிஷேடமாக கிறிஸ்துவின் முதலாம் வருகையிலிருந்து இரண்டாம் வருகை வரையிலான காலப்பகுதியில் வரலாற்றில் நிகழும் எல்லாவற்றிற்கும் பின்னணியான காரணிகளின் செயற்பாடுகளைப் படம்பிடித்துக் காட்டுபவையாக இருக்கின்றன.*

**விதி 7: இந்நூலின் மறைபொருள் வெளிப்பாடு அது எழுதப்பட்ட காலத்துக்குரிய நிகழ்ச்சிகளிலும், சந்தர்ப்பங்களிலும் வேர்விட்டு வளர்ந்ததாக இருக்கின்றது. எனவே, இதன் அடையாளங்களை இந்நூல் எழுதப்பட்ட காலத்தில் காணப்பட்ட நிகழ்ச்சிகளின் அடிப்படையிலேயே விளக்க வேண்டும்.**

*வெளிப்படுத்தல் விசேஷம் மறைபொருள் வெளிப்பாட்டுத் தீர்க்கதரிசனமாக மட்டும் அல்லாமல் குறிப்பிட்ட சபைகளுக்கு, அச்சபைகளின் சூழ்நிலைகளோடு தொடர்புள்ளவிதத்தில் எழுதப்பட்ட நிருபமாகவும் இருக்கின்றது. முதலாம் நூற்றாண்டில் பல போராட்டங்களையும், துன்பங்களையும் சந்தித்த குறிப்பிட்ட ஏழு சபைகளுக்கு தைரியம் அளிக்கும் வகையில் எழுதப்பட்டதே இந்நூலாகும். இந்நூலின் அடையாளங்களுக்கான தகுந்த விளக்கங்களை அளிப்பதானால் இது முதலாம் நூற்றாண்டோடு சம்பந்தப்பட்டது என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். இந்த மறைபொருள் விளக்க வெளிப்பாடு அதைப் பெற்றுக்கொள்ளப்போகும் சபைகளுக்கு ஆறுதல் அளித்து பெலப்படுத்துவதைத் தனது உடனடி நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. அந்தக்காலத்து சபைகளின் உடனடித்தேவைகளை சந்திப்பதற்காக இது எழுதப்பட்டதால் அக்காலத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த சம்பவங்கள் மட்டுமே இந்நூலின் அடையாளங்களை நாம் புரிந்து கொள்ள துணை செய்ய*

*முடியும். இந்நூல் இக்காலத்தில் நமக்குப்பயனுள்ள செய்தியை அளிக்கிற-தென்பதை நாம் ஒருபோதும் மறுக்க முடியாது. அதேநேரம், ஆவியானவர் இதன் மூலம் நமக்கு அளிக்கும் செய்தியை அறிந்து கொள்ள வேண்டுமானால் இது எழுதப்பட்ட காலத்து சம்பவங்களோடும், சந்தர்ப்பங்களோடும் இதைத் தொடர்புபடுத்திப் படிப்பதால் மட்டுமே அதை விளங்கிக் கொள்ள முடியும்.*

**விதி 8: மறைபொருள் வெளிப்படுத்தல் விளக்கம் வேதத்தில் வேர்விட்டு உறுதியாக வளர்ந்திருப்பதால், முழு வேதபோதனைகளோடும் ஒத்துப் போகும் விதத்தில் வேத அடிப்படையிலேயே விளக்கப்பட்ட வேண்டும். வெளிப்படுத்தல் விசேஷம் கிரேக்க–ரோம கலாச்சாரமாகிய மண்ணில் வளர்ந்த போதும் வேதத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கின்றது. வேதத்தின் ஏனைய நூல்களைப் போலவே, இந்நூலையும் வேதத்தை வேதத்தாலேயே விளக்க வேண்டும் என்ற வேதவிளக்க விதிமுறையைப் பயன்படுத்தியே விளங்கிக் கொள்ள வேண்டும். வில்லியம் ஹென்றிக்சன் மிக முக்கியமான ஒரு அடிப்படை வேதவிளக்க விதிமுறையை நமக்கு நினைவுபடுத்துகிறார்: "வேதத்தின் தெளிவில்லாததாக தெரியும் பகுதிகளை தெளிவான விளக்கங்களைக் கொடுக்கும் பகுதிகளைக் கொண்டே விளங்கிக் கொள்ள வேண்டும். இதற்கு எதிர்மறையாக நாம் செயல்படக்கூடாது" என்கிறார் ஹென்றிக்சன். உதாரணமாக வெளிப்படுத்தின விசேஷம் 20 ம் அதிகாரத்தை (20:2) எடுத்துக் கொள்வோம். இப்பகுதியை நாம், சாத்தானை வெற்றிகொள்ளும் கிறிஸ்துவின் அரசாட்சியைப் பற்றி தெளிவாக விளக்கமளிக்கும் வேதத்தின் ஏனைய பகுதிகளைக் கொண்டே விளங்கிக் கொள்ள வேண்டும். வேதத்தின் ஏனைய பகுதிகளை வைத்து ஆராய்ந்து பார்க்காமல், இந்த 20 ம் அதிகாரம் இதைத்தான் சொல்லுகிறது என்று நாமே ஒரு போதனையை உருவாக்கிக் கொண்டு, அந்தப்போதனைக்கு சார்பாகப் பேசுகிறதுபோல் தோன்றும் வேதப்பகுதிகளை நாம் வேதத்தில் தேடி அலையக்கூடாது.**

**விதி 9: இம்மறைபொருள் விளக்க வெளிப்பாடு கர்த்தரின் சிந்தையில் இருந்து எழுந்த வெளிப்பாடாக உள்ளது. ஆண்டவராகிய கிறிஸ்துவே இதன் மூல ஆசிரியர். இந்தநூல் திருச்சபை வரலாறு பற்றிய தேவனுடைய திட்டங்களைத் தன்னுள் கொண்டதாக இருக்கின்றது.**

*நாம் வேதத்தின் அனைத்து நூல்களையும் கர்த்தரே வெளிப்படுத்தினார் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இந்நூல் வேதத்தைத் தவிர வேறில்லை. சாத்தா-னுடனும் அவனுடைய துணைவர்களுடனும் நாம் ஒரு பெரும் போராட்-டத்தில் ஈடுபட்டிருப்பதை இந்நூல் நமக்கு எச்சரிக்கைகளின் மூலம் விளக்கு-கிறது. இந்தப் போராட்டத்தைக் குறித்து மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கும்-படியும், உறுதியோடு நல்ல போராட்டத்தை நடத்தும்படியும் இந்நூல் நம்மை எச்சரிக்கிறது. நம்மை எதிர்நோக்கும் ஆபத்து மெய்யானது என்றும் அதில் நாம் நிச்சயம் வெற்றி அடைய வேண்டும் என்றும் இது வலியுறுத்துகிறது. வெளிப்படுத்தின விசேஷம் நமக்கு எதிர்காலத்தைக்குறித்த நம்பிக்கையை அளிக்கிறது. ஏனெனில், தேவ ஆட்டுக்குட்டியானவர் ஏற்கனவே சாத்தானை வெற்றிகொண்டு ராஜாதி ராஜனாக அனைத்தையும் ஆண்டு வருகிறார். அவர் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ள முடிவை நோக்கி வரலாற்றை நடத்திச் செல்பவராக இருக்கிறார். அவரைப்போலவே, நாமும் நித்திய ஆனந்தத்திற்குரிய நம்பிக்கையோடு இந்த ஓட்டத்தில் தொடர்ந்து கடைசிவரையும் ஈடுபட வேண்டும். அவரைப் போலவே, நம்மில் இருக்கும் அவரின் துணையோடு இந்தப் போராட்டத்தில் நாமும் நிச்சயம் வெற்றி அடைவோம்.*

# இயேசு நரகத்திற்குப் போனாரா?

ரோமன் கத்தோலிக்க மதம் இயேசு மரித்தபின் உயிர்த்தெழுவதற்கு முன்பு மூன்று நாட்களுக்கு நரகத்தில் போய் இருந்தார் என்று போதிக்கிறது. இதையே லூத்தரன் சபையும் விசுவாசிக்கிறது. வார்த்தை-விசுவாசம் (Word-Faith) என்ற பெயரில் கெரிஸ்மெட்டிக் கூட்டத்தில் ஆரம்பித்துள்ள ஒரு புதிய கூட்டமும் இதைப் போதிக்கிறது. கத்தோலிக்கரும், லூதரன்களும், கிறிஸ்து பாவத்தை அனுபவிப்பதற்காக நரகத்திற்கு போகாமல் பாவத்தை வெற்றி கொள்வதற்காக நரகத்திற்குப் போனார் என்று போதிக்கிறார்கள். வார்த்தை-விசுவாசக் கூட்டத்தைச் சேர்ந்த ஜொய்ஸ் மாயர் (Joyce Mayer) என்ற பெண் 'போதகி'!, கிறிஸ்து சிலுவையில் மரிக்கும்போதே பாவியானார் என்றும், அவர் மரித்தபின் நரகத்திற்குப் போய் தன் பாவத்திற்கான தண்டனையை அனுபவித்தார் என்றும், அதனாலேயே அவரால் பாவத்தின் கொடுமையை உணர்ந்து நம்மேல் பரிதாபப்பட முடிகின்றது என்றும் விளக்கு-கிறார். இன்று, சுவிசேஷ விசுவாசிகளில் பலர் கூட இந்தத் தவறான போதனையை உண்மை என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். வேதம் இதைப்-பற்றி என்ன சொல்கிறது என்று ஆராய்வோம்.

இயேசு இறந்தபின் ஹேடிஸில் (Hades) இருந்தார் என்று வேதம் சொல்கிறது (அப்போஸ். 2:27). ஹேடீஸை ஒத்த பழைய ஏற்பாட்டு வார்த்தை சீயோல் (Sheol). இவை இரண்டும் வேதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் வேதத்தில் ஹேடிஸை எல்லாப் பகுதிகளிலும் பாதாளம் என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். இது காணப்படும் வேதப்பகுதி தரும் விளக்கத்திற்கேற்றமுறையில் இதை எல்லாப்பகுதிகளிலும் மொழி பெயர்ப்பதும் சுலபம் இல்லை. ஆனால், இந்த வார்த்தையை எல்லாப் பகுதி-களிலும் நரகமாக மட்டும் புரிந்துகொள்வது பெருந்தவறு. இது சில இடங்-களில் நரகத்தைக் குறிப்பதாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது (லூக்கா 16:22). சில இடங்களில் இறந்தவர்கள் சரீரமும் ஆவியும் பிரிக்கப்பட்டு இருந்த நிலை-யைக் (disembodied state) குறிக்கிறது (அப்போஸ் 2:27, 31; வெளி. 1:12). சில வேளைகளில் இது கல்லறையாக (grave) விளக்கப்பட்டிருக்கிறது (மத். 11:23).

இயேசு இறந்தபின் ஆவியும், சரீரமும் பிரிக்கப்பட்ட நிலையில் இருந்தார் (State of death). வெளிப்படுத்தல் விசேஷம் 1:12ல் பாதாளம் என்ற வார்த்தையை இந்த விளக்கத்தின்படியே புரிந்து கொள்ள வேண்டும். பேதுருவும் அப்போஸ்-தலர் 2:25-31 வரையுள்ள வசனங்களில் சங்கீதம் 16:8-11ப் பயன்படுத்தி கிறிஸ்-துவை பாதாளம் கட்டுப்படுத்தவில்லை என்ற இதே உண்மையை விளக்குகிறார் பேதுரு, இயேசு அழிவைக் காணமாட்டார் என்கிறார் (அப்போஸ். 2:24, 27, 31). அதனால்தான் இயேசு வெளிப்படுத்தின விசேஷத்தில் 1:12ல் மரணத்தாலும், பாதாளத்தாலும் தன்னைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்கிறார். ஏனெனில், அவற்றின் திறவுகோள்கள் அவரிடமே இருக்கின்றன. அவரே அவற்றைக் கட்டுப்படுத்துபவராக இருக்கிறார். இறந்தபின் இயேசுவின் ஆவி கர்த்தரை அடைந்தது (லூக்கா 23:43, 46). அவருடைய சரீரம் கல்லறையில் இருந்தது. ஆவியும், சரீரமும் பிரிக்கப்பட்ட இறந்த நிலையில் (Disembodied existence)

*இயேசு மூன்று நாட்கள் இருந்திருக்கிறார். அதன்பின் பிதா அவரை உயிர்த்தெழச் செய்தார். இயேசு இறந்தபின் நரகத்தை அடைந்தார் என்ற ரோமன் கத்தோலிக்க, லூதரன் போதனையில் எந்த உண்மையும் இல்லை. அது வேதத்தில் இல்லாத போதனை.*

*எபேசியர் 4:10 ல் கிறிஸ்து பூமியின் தாழ்விடங்களில் இறங்கினார்* (lower parts of the earth - NKJV) *என்றிருக்கிறது. இது கிறிஸ்து நரகத்திற்குப் போனதைக் குறிக்கிறது என்று சிலர் கூறுவார்கள். ஆனால், இங்கே ஹேடீஸ் என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. அத்தோடு, இது கிறிஸ்து உன்னதத்திற்கு ஏறியதுபோல இந்த உலகத்திற்கும் இறங்கினார் என்பதை மட்டுமே விளக்குகிறது. அவர் ஏறியது போல் இறங்கியும் வந்தார் என்பதை மட்டுமே விளக்குகிறது. இந்தப் பகுதி சொல்லாததை நாம் இதில் திணிக்கப் பார்க்கக்-கூடாது.*

*இயேசு நரகத்திற்குப் போனார் என்பதை சுட்டிக் காட்ட 1 பெதுரு 3:19ஐ அடிக்கடி சிலர் நினைவுபடுத்துவார்கள். ஆனால் இந்தப் பகுதி அதைப் போதிக்கவில்லை. 'அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்' என்று 19ம் வசனம் சொல்லுகிறது. இந்தப்பகுதி, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நோவா கர்த்தரை விசுவாசிக்க மறுத்தவர்களுக்கு பிரசங்கம் செய்ததையும், அவ்வாறு நோவா பிரசங்கம் செய்தபோது கிறிஸ்துவே நோவா மூலம் அவிசுவாசிகளுடன் பேசினார் என்றும் சொல்லுகிறது. காவலில் இருந்த ஆவிகள் என்பது அக்காலத்தில் பாவத்தால் சிறைபிடிக்கப்படிருந்தவர்-களைக் குறிக்கிறது. எட்டுபேர் மட்டுமே அன்று வார்த்தையைக் கேட்டு மனந்-திரும்பியவர்கள். இந்தப் பகுதி இயேசு நரகத்திற்குப் போனார் என்ற போதனையைத் தரவில்லை. (1:10, 11 ஐயும் இப்பகுதியோடு ஒப்பிட்டுப் பாருங்கள் - பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் பிரசங்கித்தபோது கிறிஸ்துவின் ஆவி அவர்களில் இருந்தது என்று பேதுரு இவ்வசனங்களில் விளக்குகிறார்.)*

*இயேசு நரகத்திற்குப் போகவில்லை; இறந்தபின் தன் பிதாவையே அடைந்தார் என்பதற்கு அவருடைய வார்த்தைகளே தெளிவான சாட்சிகளாக இருக்கின்றன. இயேசு தான் இறப்பதற்கு முன்பாக தனக்குப்பக்கத்தில் சிலுவையில் அறையப்பட்டிருந்த மனந்திரும்பிய திருடனைப்பார்த்து, 'இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன் என்றார்' (லூக்கா 23:43). இயேசு நரகத்திற்குப் போவதாக இருந்தால் இப்படிச் சொல்லியிருக்க மாட்டார். மாறாக அவர் பரலோகத்திற்குப் போகப்போவதை அவருடைய வார்த்தைகள் தெளிவாக விளக்குகின்றன. சிலர் பரதீசு என்பது பரலோகம் அல்ல. அது வேறு ஒரு இடம். பரலோகம் போவதற்குமுன் இறப்பவர்கள் இங்கு போகிறார்கள் என்கிறார்கள். இதுவும் தவறு. வேதத்தில் பரலோகமும், பரதீசும் ஒரே இடத்தையே குறிக்கின்றன. அதாவது, பரலோகத்தையே குறிப்பதாக இருக்கின்றன. மேலும் லூக்கா 23:46 ல், இயேசு 'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்' என்று சொன்னார். இயேசுவே, தன் ஆவியை பிதாவின் கரங்களில் ஒப்படைத்திருக்கும்போது அவர் இறந்தபின் நரகத்திற்குப் போனார் என்று எப்படிச் சொல்ல முடியும்.*

*இயேசு நரகத்திற்குப் போனார் என்பது வேதமறியாத போதனை. அவருடைய ஆவி கர்த்தரையே அடைந்தது என்பதைத்தான் வேதப்பகுதிகளும், அவருடைய வார்த்தைகளும் விளக்குகின்றன.*

# பேர்கட்டரி (Purgatory) உண்டா?

ரோமன் கத்தோலிக்க மதத்தின் ஒரு முக்கிய போதனை பேர்கட்டரி (Purgatory) என்பது. ரோமன் கத்தோலிக்க சபையில் ஞானஸ்நானம்பெற்று தங்களுடைய பாவம் முழுவதுமாக மன்னிக்கப்படாது இறப்பவர்கள் நேரடியாக இந்த இடத்துக்குப் போகிறார்கள் என்று கத்தோலிக்க மதம் கூறுகிறது. பரலோகத்தையும், நரகத்தையும் தவிர இடைப்பட்ட இப்படியொரு இடம் இருப்பதாகவும் இங்கு போய்ச் சேருபவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கிடைக்கும்வரை தற்காலிகமாக இந்த இடைத்தரமான இடத்தில் துன்பங்களை அனுபவித்து தங்களுடைய பாவங்களைக் குறைத்துக் கொள்கிறார்கள் என்று ரோமன் கத்தோலிக்க மதம் போதிக்கிறது. இங்கிருப்பவர்களுடைய உறவினர்களும், நண்பர்களும் இந்த உலகத்தில் செய்யும் ஜெபத்தால் மட்டுமே இவர்களுடைய சகல பாவங்களுக்கும் மன்னிப்பு கிடைத்து பரலோகம் போக முடியும் என்பது ரோமன் கத்தோலிக்க மதப்போதனை. அதனாலேயே ரோமன் கத்தோலிக்கர்கள் இறந்தவர்களுக்காக ஜெபம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். போப்பும் அங்கிருப்பவர்களுடைய பாவத்தைக் குறைக்கக்கூடிய ஒருவகை அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார் என்கிறது ரோமன் கத்தோலிக்க மதம். இதைக் கவுன்சில் ஆப் டிரென்டின் (The Council of Trent) ***25*** வது செசன் விளக்குகிறது. இது ரோமன் கத்தோலிக்க மதத்தின் மிக முக்கிய போதனை.

கிறிஸ்தவ வேதத்தில் எங்கும் இந்தப் போதனையைப் பார்க்க முடியாது. கர்த்தரின் வேதம் பரலோகத்தையும், நரகத்தையும் தவிர வேறு எந்த இடங்களையும்பற்றிப் பேசுவதில்லை. மனிதர்கள் இறந்தபின் இந்த இரண்டு இடங்களில் ஒன்றை அடைகிறார்கள். விசுவாசி இறந்தபின் பரலோகத்தில் கண்ணைத் திறக்கிறான். அவிசுவாசி நரகத்தில் கண்ணைத் திறக்கிறான் (லூக்கா ***16:19-31***). அத்தோடு கர்த்தரின் வேதம் இடைத்தரமான ஒரு நிலைபற்றி விளக்குகிறது. இது இடைத்தரமான ஒரு நிலையே தவிர இடமல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, இறுதி நியாயத்தீர்ப்பு நாள் வரும்வரை பரலோகத்திலும், நரகத்திலும் இருப்பவர்கள் இடைத்தரமான நிலையில் இப்போது இருக்கிறார்கள் என்பது வேதபோதனை. ஏனெனில் இப்போது அவர்கள் சரீரத்தைக் கொண்டிருக்காமல் ஆவியாக மட்டுமே இருக்கிறார்கள். இறுதி நியாயத்தீர்ப்பு நாளில் கிறிஸ்து அவர்கள் எல்லோரையும் எழுப்பி அவர்களுக்கு சரீரத்தைக் கொடுப்பார். அதன்பிறகு அவர்கள் ஆவியோடும், சரீரத்துடனும் தங்களுடைய பரலோக வாழ்க்கையையும், நரக வாழ்க்கையையும் தொடருவார்கள். இந்நியாயத்தீர்ப்பு நாள் வரும்வரையும் அவர்கள் இருக்கும் நிலையையே இடைத்தரமான நிலை என்கிறது வேதம். ரோமன் தக்தோலிக்க மதம் போதிக்கும் இடைத்தரமான இடத்திற்கும் (Intermediate place -Purgatory) கிறிஸ்தவ வேதம் போதிக்கும் இடைத்தரமான நிலைக்கும் (Intermediate stage) எந்தவிதமான தொடர்பும் இல்லை. ரோமன் கத்தோலிக்க போதனையான ‘பேர்கட்டரி’ ஒரு போலிப்போதனை. சாத்தானின் ஊழியக்காரனாக இருந்து ஆன்மீக விடுதலை என்ற பெயரில் ஆத்துமாக்களை ஏமாற்றி தன்னுடைய மதத்தை வளர்த்து வருகிறது ரோமன் கத்தோலிக்க மதம்.

# 1 கொரிந்தியர் 12-14

இதுவரை பல இதழ்களில் நாம் தொடர்ச்சியாக் பார்த்து வந்த இந்த வேதப்பகுதிக்கான விளக்கம் இந்த இதழுடன் முடிவுக்கு வருகின்றது. இந்த இதழில் **1** கொரிந்தியர் **14:34-40** வரையிலான வசனங்களை ஆராய்வோம். **14** அதிகாரத்தின் இந்த இறுதிப்பகுதியில் **34, 35**ம் வசனங்கள் சபைகூடி-வரும்போது பெண்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று விளக்குகின்றன. **36-40** வரையிலான வசனங்கள் **11-14** அதிகாரங்களுக்கான முடிவுரையாக இருக்கின்றன. இனி இந்தப் பகுதியை விளக்கமாக ஆராய்வோம்.

**சிலருடைய சிந்தனைப்போக்கு**

சிலர் இந்தப்பகுதியை வாசித்தவுடனேயே ஒரு தவறான முடிவுக்கு வந்து-விடுகிறார்கள். ஆதாவது, பவுலின் காலத்தில் பெண்கள் மிக மோசமாக நடத்தப்பட்டதாகவும் அதனால்தான் பவுல் பெண்களை அடிமைகளைப் போலக் கருதி சபையில் அவர்கள் வாய் மூடி மெளனமாக இருக்க வேண்டும் என்று இப்பகுதியில் சொல்கிறார் என்பது இவர்களுடைய எண்ணம். இது தாராளவாதக் கோட்பாட்டை பின்பற்றுகிறவர்கள் இப்பகுதிபற்றி கொடுக்-கும் விளக்கம். அவர்களுக்கு வேதம் கர்த்தருடைய வசனம் என்ற விசுவாசம் இல்லை. வேதத்தில் தமக்குப் பிடித்தமான பகுதிககள் மட்டுமே கர்த்தருடைய வார்த்தை என்று இவர்கள் நம்புகிறார்கள். ஆகவே, இந்த இரு வசனங்களும் இவர்களைப் பொறுத்தவரையில் கர்த்தருடைய வார்த்தைகளல்ல, அவை ஆண் கர்வம் கொண்ட பவுலின் திமிரான வார்த்தைகள். இந்த முறையில் இந்தப் பகுதியை விளக்கிய ஒரு பாப்திஸ்து போதகரின் செய்தியை நான் கேட்டிருக்-கிறேன்.

இன்னுமொரு பகுதியினர் இது அந்தக்காலத்து கலாச்சாரத்தோடு சம்பந்தப்-பட்டது. நாம் இதை இன்று நம் கலாச்சாரத்திற்கேற்றபடி புரிந்து நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்கள். வேதம் கலாச்சாரங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டதென்பதையும், கலாச்சாரத்திற்கேற்ப அதற்கு விளக்கம் கொடுக்க முடியாதென்பதும் இவர்களுக்குத் தெரியவில்லை. இவர்களே பெண்ணியல் சார்பு புதிய சுவிசேஷக் கூட்டத்தார்.

வேறுசிலர், இந்த இரு வசனங்களும் பெண்களை அடிமைகளாகப் பார்ப்பது போல் தெரிகிறது என்ற எண்ணத்தில் இந்தப் பகுதியின் வார்த்தைகளுக்கு தங்களுக்குப்பிடித்தவிதத்தில் பொருள் கொடுக்கிறார்கள். இவர்களுடைய நோக்கம் புரிகிறது; ஆனால் செய்கை சரியில்லை. இந்தப்பகுதி என்னதான் சொல்கிறது என்று இனிப் பார்ப்போம்.

**சபைகூடிவருதல்**

இந்த இரு வசனங்களுக்கும் விளக்கம் கொடுப்பதற்கு முன் முதலில் நாம் கடந்த இதழில் முடிவாக சொன்ன காரியங்களை சிறிது நினைவுபடுத்திக் கொள்வது அவசியம். **11-14** வரையுள்ள அதிகாரங்களில் 'சபை கூடிவரும்போது' என்று அடிக்கடி வருகின்ற பதங்களின் முக்கியத்துவத்தை நான் கடந்த இதழில் சுட்டிக் காட்டியிருந்தேன். பவுல் ஆவிக்குரிய வரங்களைப் பற்றிய விளக்கங்-களைக் கொடுக்கும் போது சபைகூடிவரும்போது அவற்றை எப்படி சபையார்

மத்தியில் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அவ்விளக்கங்களைத் தந்திருக்கிறார் என்று கூறியிருந்தேன். இந்த "சபைகூடிவருதல்" என்ற பதம் பல தடவைகள் **12-14** அதிகாரங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன **(11:20, 33, 34; 14:23, 26).** சபை கூடிவரும்போது, என்றால் சபை அங்கத்தவர்கள் அதிகாரபூர்வமாக மூப்பர்களின் தலைமையில் கூடிவருவதைக் குறிக்கும். அத்தகைய கூட்டங்களாக ஞாயிறு ஆராதனைக் கூட்டங்களையும், ஆண்களும் பெண்களுமாக சபை அங்கத்தவர்கள் மூப்பர்களின் தலைமையில் கூடிடும் கூட்டங்களையும், சபை அங்கத்தவர்களின் கூட்டங்களையும் (Members business meetings) குறிப்பிடலாம். இத்தோடு ஆண்களும், பெண்களுமாக மூப்பர்களின் தலைமையில் கூடிவரக்கூடிய சபையின் ஏனைய விசேட கூட்டங்களையும் குறிப்பிடலாம். இவற்றையே நாம் சபைக்கூட்டங்கள் என்று கூறுகிறோம்.

ஒரு சபையை சேர்ந்த சில அங்கத்தவர்கள் அதே சபையின் ஏனைய சிலரோடு சேர்ந்து ஐக்கியத்திற்காக கூடிவரும் கூடுதல் அச்சபையின் அதிகாரபூர்வமான கூட்டமல்ல. அது மூப்பர்களால் சபையோடு கலந்தாலோசித்து தீர்மானிக்கப்பட்ட, எல்லோருடைய ஆத்மீக நலனுக்காகவும் கூட்டப்படும் கூட்டம் அல்ல. அந்தக்கூட்டத்தில் சபையின் மூப்பர்களோ அல்லது சபையின் எல்லா அங்கத்தவர்களுமோ கலந்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவதுமில்லை. ஆகவே, அத்தகைய கூட்டங்கள் சபைக்கூட்டங்களல்ல. அவை தனிப்பட்டவிதத்தில் ஆத்துமாக்கள் தங்களுடைய தனிப்பட்ட சொந்தக் காரணங்களுக்காக இருந்திருந்து கூடிவரும் கூட்டங்கள். இவற்றில் சபையார் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டுமென்று கட்டளையுமில்லை; கலந்து கொள்ளாதவர்களை மூப்பர்கள் சந்தித்து புத்திசொல்லி ஆத்மவிருத்திக்கான ஆலோசனைகள் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால், சபைக்கூட்டங்கள் சபையாரின் நலனுக்காக சபையால் தீர்மானிக்கப்பட்ட கூட்டங்கள் (ஆராதனை மற்றும் சபை ஜெபக்கூட்டங்கள்). அந்தக்கூட்டங்களில் சபையின் எல்லா அங்கத்தவர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்று சபைப்போதகர்கள் எதிர்பார்ப்பார்கள். அவற்றில் தொடர்ந்து கலந்துகொள்ளாமல் இருப்பவர்கள் கலந்து கொள்ளாததற்கான காரணத்தை அறிந்து அவர்களுக்கு புத்தி சொல்லி திருத்த வேண்டிய கடமையும் போதகர்களுக்கு உண்டு. அவர்கள் திருந்தாவிட்டால் அவர்கள் மீது தேவையான ஒழுங்கு நடவடிக்கையைக் கொண்டுவர வேண்டிய கடமையும் போதகர்களுக்கு உண்டு. இதிலிருந்து சபைக்கூடிவரும் கூட்டங்களுக்கும், ஏனைய சாதாரண கூட்டங்களுக்குமுள்ள வேறுபாட்டை விளங்கிக் கொள்ள வேண்டும்.

சபைக்கூட்டங்கள் பற்றி நாம் இதுவரை விளக்கிய வேறுபாடுகள் சிலருக்கு புரியாத புதிராக இருப்பதற்கு ஒரு முக்கியமான காரணமிருக்கிறது. நம் மக்கள் மத்தியில் இன்று திருச்சபை பற்றிய சரியான அறிவு இல்லாததே அதற்குக் காரணம். இன்று திருச்சபைகள் என்ற பெயரில் திருச்சபை பற்றிய எந்தவித வேத ஞானமும் இல்லாதவர்கள் காளான்கள் போல் தங்களைத் தாங்களே சபைப்போதகர்களாக நியமித்துக்கொண்டு ஒரு சபையை ஆரம்பித்து விடுகிறார்கள். இவர்கள் ஒரு வருடத்துக்கு முன்புதான் கிறிஸ்துவையே விசுவாசித்திருப்பார்கள். அப்போது கிறிஸ்து என்னை ஊழியத்துக்கு அழைத்திருக்கிறார் என்று சொல்லி தான் குடியிருக்கும் வீட்டிலேயே ஒரு சபையை ஆரம்பித்துவிடுகிறார்கள். இவர்கள் இதற்கு முன் திருச்சபையைப் பார்த்ததும் கிடையாது; அதில் வாழ்ந்த அனுபவமும் கிடையாது; அனுபவமுள்ள ஒரு சபைப்போதகரின் கீழ் இருந்து வளர்ந்ததும் கிடையாது. இவர்கள் தாங்களே

*தங்களை சபைத்தலைவர்களாக நியமித்துக் கொண்டிருப்பதோடு தங்களுடைய புத்திக்குத் தெரிந்த விதத்தில் சபை நடத்துவார்கள். அதில் முறையான சபை அமைப்பிருக்காது. சபை அங்கத்துவம் இருக்காது. ஒழுங்குக் கட்டுப்பாடு இருக்காது. அங்கு கூடி வரும் ஆத்துமாக்களுக்கு எதை விசுவாசிக்கிறோம் என்றும் தெரியாது. இந்த மாதிரியான கூட்டங்களே திருச்சபைகள் என்ற பெயரில் இன்று நம் மக்கள் மத்தியில் இருக்கின்றன. இவர்களை யாரும் எதுவும் கேட்டுவிட்டால் புதிய ஏற்பாட்டில் இப்படித்தான் இருந்தது என்று எதிர்வாதம் செய்யப் பார்ப்பார்கள். வேறு சிலர் விசுவாசியாக வந்த உடனேயே ஏதாவதொரு இறையியல் (உண்மையில் இறை நிந்தனை செய்யும்) கல்லூரியில் போய்ச்சேர்ந்து ஒரு டிகிரியை வாங்கிக்கொண்டு அதுதான் சபை அமைப்பதற்கான தகுதி என்று எண்ணி ஒரு சபையை அமைக்கப் பார்ப்பார்கள். இது தமிழ் ஆத்துமாக்களைப் பிடித்த ஒரு வியாதியாக மட்டும் இல்லாமல் உலக நாடுகள் பலவற்றிலும் இந்த நிலையே காணப்படுகின்றது.*

*புதிய ஏற்பாட்டில் இவர்கள் செய்வதுபோல் தான்தோன்றித்தனமாக சபை ஒருபோதும் செயல்படவில்லை. கிறிஸ்து ஏற்கனவே திருச்சபை பற்றி தன்னுடைய அப்போஸ்தலர்களுக்கு போதித்து, அவர்களுக்கு தகுந்த பயிற்சி அளித்து அதன்பின் அவர்களைக் கொண்டு சபை அமைக்கும்படிச் செய்தார். அப்போஸ்தல நடபடிகளையும், புதிய ஏற்பாட்டையும் கவனத்தோடு வாசித்துப் பார்ப்பவர்களுக்கு இது புரியும். அப்போஸ்தலருடைய ஆதி சபையில் அமைப்பிருந்தது, கட்டுப்பாடிருந்தது, விசுவாச அறிக்கை இருந்தது. அங்கத்துவம் இருந்தது, போதகர்கள் கவனத்துடன் சோதித்துப் பார்த்து நியமிக்கப்பட்டார்கள்.*

*நாம் மேலே பார்த்த காரணங்களால்தான் இன்று பலருக்கு திருச்சபை பற்றிய சரியான ஞானம் இல்லை. அதுவும் சகோதரத்துவ சபைகள்* (Brethren Churches) *திருச்சபை அங்கத்துவம், அமைப்பு என்பதே இல்லாமல் இயங்கி சபை என்ற பெயரில் குழப்பத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. இவர்களில் இன்று சீர்திருத்தப் போதனைகளை அறிந்து அவற்றை ஆர்வத்தோடு கற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு சபையை ஒழுங்காக நடத்த வேண்டும் என்ற ஆர்வம் இருக்கின்றது.*

*கடந்த இதழ்களில் நாம்* ***11-14*** *வரையும் உள்ள அதிகாரங்களில் படித்தவற்றை ஒரு முறை சிந்தித்துப் பாருங்கள். பவுல் எத்தனை தடவை அப்பகுதிகளில் ஒழுங்கு, ஒழுங்கு என்று கொரிந்தியரைப் பார்த்து படித்துப் படித்து சொல்லியிருக்கிறார். ஒழுங்கில்லாதது சபையில்லை என்பது பவுலின் முடிவு. அதனால்தான் சபையில் எல்லோரும் அந்நிய பாஷை பேசக்கூடாது, எல்லோரும் தீர்க்கதரிசனம் சொல்லத் துடிக்கக்கூடாது என்றும், சபை கூடிவரும்போது எல்லோரும் தாம் நினைத்தபடி எதையும் செய்யாமல் ஒழுங்கோடு சபைத்தலைவர்களின் வழிநடத்தலின்படி நடந்து கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்றும் சொன்னார். இனிவரும்* ***34, 35*** *வசனங்களைப் படித்துப் பார்க்கும்போது இப்படியாக சபையில் வார்த்தைகளை எடுத்துச் சொல்பவர்கள் ஆண்களாக மட்டும்தான் இருக்க வேண்டும் என்று பவுல் சொல்வதைப் பார்க்கிறோம். ஆகவே, திருச்சபை என்பது ஏனோதானோ வென்று ஆத்துமாக்கள் தாம் நினைத்தபடி நடந்து கொள்ளும் ஒரு கூட்டமல்ல. கர்த்தருடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து அவர் வழிப்படி கட்டுப்பாட்டோடு நடப்பது கிறிஸ்துவின் சபை என்பதைப் புரிந்து கொள்ள*

*வேண்டும்..*

**பெண்கள் சபையில் நடந்து கொள்ள வேண்டியவிதம்**

*"சபைகூடிவரும்போது பெண்கள் சபையில் பேசாமலிருக்கக்கடவர்கள்" என்று பவுல் சொல்கிறார் **(34)**. முதலில் பேசாமலிருத்தல் என்ற வார்த்தையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பேசாமலிருத்தல் என்றால் புதிய ஏற்பாட்டில் இந்தப்பகுதிப்படி ஆண்களும், பெண்களும் கூடிவரும் சைபைக்கூட்டங்களில் வாயைத் திறந்து அதிகாரபூர்வமாக வேதத்தைப் போதிப்பதோ, கூட்டங்களை நடத்துவதோ, எல்லோருக்கும் முன்பாக ஜெபிப்பதோ, கூட்டத்தில் தனிப்பாடல் பாடுவதோ, ஆண்களுக்கு முன்பாக குரலை உயர்த்தி வாதாடுவதோ ஆகாது என்பது பொருள். பேச்சு என்ற இந்த வார்த்தை பாடுவது, ஜெபிப்பது, போதிப்பது எல்லாவற்றையும் குறிக்கும் வார்த்தை. இந்த வார்த்தையே இந்தப் பகுதி முழுவதும் அந்நிய பாஷையைக் குறித்தும், தீர்க்கதரிசனத்தைக்குறித்தும், ஜெபத்தைக்குறித்தும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, ஜெபிப்பதும் பேசுவதும் ஒன்றாகாது, பிரசங்கம் செய்வதும், பாடுவதும் இதில் அடங்காது என்ன வீண்வாதம் கூடாது. அவையெல்லாவற்றையும் உள்ளடக்கித்தான் பவுல் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.*

*பதினோராம் அதிகாரத்தில் **(11:13)** பெண்கள் ஜெபம் செய்வதை பவுல் அனுமதிக்கிறார். அதற்குக் காரணம் நாம் முன்பு விளக்கியபடி அது சபைகூடிவராத ஏனைய இடங்களில் செய்யப்படும் ஜெபம். **11:17** இல் இருந்து சபைகூடிவரும்போது நடக்க வேண்டிய காரியங்கள் பற்றி பவுல் விளக்குகிறார். **11:1-16** வரையிலான வசனங்கள் சபைகூடிவரும்போது நடக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றியதல்ல என்பதை இதற்கு முன்பே விளக்கியிருக்கிறோம். (இந்தப்பகுதி சபை ஆராதனையைப் பற்றி விளக்காமல் சமூகத்தில் ஆண்களுக்கு கட்டுப்பட்டே பெண்கள் எப்போதும் நடந்து கொள்ள வேண்டும் என்று கர்த்தரால் படைப்பில் ஏற்படுத்தப்பட்ட நியதியை விளக்குகிறது.)*

*ஏன் பெண்கள் சபையில் பேசக்கூடாது என்று பவுல் கூறுகிறார்? (1). இதற்கான முதலாவது காரணம் **33** ம் வசனத்தில் இருக்கிறது. அதாவது, கர்த்தர் சமாதானத்தின் தேவனாக இருக்கிறார். அவர் கலகத்தின் தேவனல்ல. கர்த்தர் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வித்தியாசமான கடமைகளைத் தன் சபையில் ஏற்படுத்தியிருக்கிறார். சபையை (ஆண்கள் பெண்கள் அடங்கிய) அதிகாரபூர்வமாக வழி நடத்தி ஜெபிப்பதும், பிரசங்கிப்பதும், போதிப்பதும் ஆண்களுடைய கடமை என்பதை இப்பகுதியில் மட்டுமல்லாமல் வேதத்தின் பலபகுதிகள் விளக்குகின்றன. பெண்கள் பிரசங்கிப்பதும், இறையில் கல்லூரிகளில் போதிப்பதும், ஆண்களுக்கு போதனை செய்வதும் சத்திய வேதத்திற்கு எதிரான செயல்கள். இன்று நம் சமுதாயத்தில் சூட்டோடு இயங்கிக் கொண்டிருக்கும் பெண்ணியல்சார்பியக்கம்* (Feminism) *கர்த்தரின் சிந்தையில் இருந்து எழுந்த ஒரு இயக்கமல்ல அது சாத்தானின் ஒரு வெளிப்பாடு.*

*ஆத்மீக அறிவிலும், வளர்ச்சியிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையில் எந்த வேறுபாடும் இல்லை. கலாத்தியர் **3:23** சொல்வதுபோல் ஆணும், பெண்ணும் கர்த்தருக்கு முன் சமமே. ஆனால், சபைப்பணிகளும், சபைக்காரியங்களும் சம்பந்தமான விடயங்களில் ஆண்களையே பொறுப்பானவர்களாக கர்த்தர் நியமித்துள்ளார். பெண்கள் இவ்விடயங்களில் அமர்ந்திருக்க வேண்டும்* (Submissive) *என்று பவுல் **34** ம் வசனத்திலும், **2** தீமோத்தேயு*

***2:11-12*** லும் தெளிவாக விளக்குகிறார். அதாவது, ஆண்களுக்கு மரியாதை தந்து அவர்களுக்கு அடங்கி (கட்டுப்பட்டு) இருக்க வேண்டும் என்பது இதன் விளக்கம். இதனால் பெண்கள் ஒன்றுமே செய்யக்கூடாதா? என்று கேட்கக்கூடாது. அதிகாரம் செலுத்தாமல், சபையில் பதவிகளில் இருக்காமல் பெண்கள் நன்மையான அநேக காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்பதை வேதம் விளக்குகிறது (ரோமர் ***16:1-3, 6;1*** கொரிந்தியர் ***9:5***). ஆனால், ஆண் வீட்டுத்தலைவனாக இருக்க வேண்டுமென்றும் (எபேசியர் ***5:22***), ஆண்களே சபைத் தலைவர்களாக போதகர்களாகவும், உதவிக்காரர்களாகவும் இருக்க வேண்டுமென்றும் (***1*** தீமோத்தேயு ***3:1-7;*** தீத்து ***1:6***) கர்த்தரே விளக்கியுள்ளார். சபையில் ஆண்கள் செய்யும்படிக் கர்த்தர் கட்டளையிட்டுள்ள எதையும் பெண்கள் செய்ய முயற்சி செய்யக்கூடாது. இன்று அநேக சபைகளில் இதற்கு மதிப்புக் கொடுப்பதில்லை. ஆணும், பெண்ணும் சமம் என்ற பெயரில் கர்த்தரின் சபையில் அந்நிய அக்கினியை அனுமதிக்கிறார்கள். எக்காலத்திலும், எல்லா சபைகளிலும் தேவனுடைய வார்த்தைபடி காரியங்கள் நடக்க வேண்டும் என்று 34ம் வசனத்தில் பவுல் கூறுவதை சிந்தித்துப் பாருங்கள்.

(2) இரண்டாவது காரணமாக ***34***ம் வசனத்தில், 'வேதமும் அப்படியே சொல்கிறது' என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார். இது பவுலுடைய சொந்தக் கருத்து அல்ல. இது வேதம் தெளிவாகப் போதிக்கும் உண்மை. வேதம் என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை கிரேக்க மூலத்தின்படி நியாயப்பிரமாணத்தைக் (Law) குறிக்கிறது. குறிப்பாக கர்த்தருடைய எந்த நியாயப்பிரமாணத்தையும் சுட்டிக்காட்டாமல் பவுல், முழு வேதமும், அதாவது கர்த்தருடைய கட்டளைகள் அனைத்தும் இதைத்தான் போதிக்கிறது என்பதை சுட்டிக்காட்ட இவ்வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

பவுல் மேலும், ***35***ம் வசனத்தில் தான் இதுவரை சொன்னதை மேலும் வலியுறுத்திச் சொல்வதற்காக 'பெண்கள் சபைகளில் பேசுவது அயோக்கியமாயிருக்கும்' (Shameful) என்கிறார். அதாவது, அது வெட்கக்கேடான செயல் என்பது பொருள். பவுல் இங்கு சூடான ஒரு வார்த்தையைப் பயன்படுத்துகிறார். வெட்கக்கேடான செயல் என்றால் என்ன என்பது நமக்குப் புரியும். பெண்கள் சபைகளில் பேசுவதை வெட்கக்கேடான செயலாக கர்த்தர் கருதுகிறார். போதகர்களின் மனைவிகள் சபைகளில் வெட்கக்கேடான முறையில் பாடவோ, பேசவோ, எல்லோருக்கும் முன்னால் தலைமை தாங்கி நடக்கும் வேலைகளையெல்லாம் செய்யப்போகக்கூடாது. ஏவாள் இந்த மாதிரி நடந்ததாலேயே பாவம் உலகத்திற்கு வந்தது. கர்த்தருடைய அமைப்பை நாம் மாற்றி அமைக்கப் பார்க்கக்கூடாது. அத்தோடு, பெண்கள் ஏதாவது விளக்கங்களை அறிந்து கொள்ள வேண்டுமானால் தங்களுடைய சொந்தக் கணவன்களுக்கு அடங்கி வீட்டில் அவர்களிடம் இருந்து அவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்கிறார் பவுல். இதிலிருந்து பெண்கள் சபையில் பேசுவதும், ஜெபிப்பதும், போதிப்பதும் தங்களுடைய சொந்தக் கணவர்களுக்குக்கூட மதிப்புத் தராத செயல் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஜெபிப்பது தனிப்பட்ட ஆத்மீக காரியம்தானே, அது எப்படி சபையையும், ஆண்களையும் அவமதிப்பதாக இருக்கும்? என்று நீங்கள் கேட்கலாம். சபை ஜெபம் என்பது சொந்த ஜெபம் அல்ல. எல்லோருக்கும் முன்பாக எல்லோருக்காகவும் கர்த்தரிடம் மன்றாடுவது சபை ஜெபம். அந்த வகையில் எல்லோருக்காகவும் கர்த்தரிடம் சபையில் மன்றாடும் பணியைச் செய்ய சபைத் தலைவர்களான ஆண்களையே கர்த்தர் நியமித்துள்ளார். அவர்கள் வழிநடத்தலின்படி சபைக்கூட்டங்களில் ஆண்களே

ஜெபிக்க வேண்டும்.

*அப்படியானால் பெண்கள் எதைத்தான் செய்ய முடியும்? என்று நீங்கள் கேட்கலாம். பெண்கள் தனியாக கூடிவந்து ஜெபிக்கலாம். பெண்கள் பெண்களோடு சேர்ந்து சபைத் தலைவர்களின் கீழ் சபையின் அநேக ஊழியங்களுக்கு உதவலாம். இதையெல்லாம் பெண்கள் தங்களுடைய சொந்தக் கணவர்களின் அனுமதியுடன் அவர்களுக்கு மரியாதை தந்து சபையில் செய்ய வேண்டும். கெரிஸ்மெட்டிக் கூட்டமும் ஏன், சுவிசேஷக் கிறிஸ்தவர்களும் கூட இன்று பெண்களைக் கர்த்தருடைய வார்த்தைக்கு எதிராக சபைகளில் செயல்படும்படித் தூண்டிக் கொண்டிருக்கிறார்கள்.*

**முடிவுரை**

*பவுல் கொரிந்தியர்களைப் பார்த்து தேவ வசனம் உங்களிடம் இருந்தா வந்தது? என்றும் உங்களுக்கு மட்டுமா சொந்தமானது? என்றும் **36** ம் வசனத்தில் கேலியாகக் கேட்கிறார். கொரிந்தியர்கள் திமிராக நடந்து கொள்ளக்கூடாது என்று **37, 38** ம் வசனங்களில் ஆலோசனை சொல்கிறார். இதுவரை தான் சொன்னதெல்லாம் தன்னுடைய சொந்தக் கருத்துக்கள் அல்ல; கர்த்தரின் கட்டளைகள் என்பதை வலியுறுத்துகிறார். அதாவது கர்த்தரின் அதிகாரத்துடன் கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தியதையே எழுதுவதாக சொல்கிறார். வாசிக்கும் நீங்களும் இதைக் கர்த்தரின் வார்த்தை என்பதை உணர்ந்து செய்யும் தவறுகளை நிறுத்திக் கொண்டு கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்கப் பார்க்க வேண்டும். சபையில் எல்லாவற்றையும் ஒழுங்கோடு தான் இதுவரை போதித்தவற்றின் அடிப்படையில் சபையில் செய்யப்பட வேண்டும் என்பதை **40** ம் வசனத்தில் வலியுறுத்துகிறார். ஒழுங்கும், கட்டுப்பாடும் இல்லாதது சபையாக இருக்காது என்பதை தெளிவாக புரிய வைக்கிறார். **(இத்துடன் நிறைவு பெறுகிறது)***


# ஸ்ரீ லங்காவில் எமது வெளியீடுகள்

**ஸ்ரீ லங்காவில் உள்ள வாசகர்கள் 1689 விசுவாச அறிக்கையையும், சிறுவர்களுக்கான வேத உபதேசத்தையும் கீழ்வரும் முகவரியில் உள்ளவர்களோடு தொடர்பு கொண்டுபெற்றுக் கொள்ளலாம். சவரின் கிறேஸ் வெளியீடுகளின் ஏனைய வெளியீடுகளையும் இவர்களிடமிருந்தே இனிப்பெற்றுக் கொள்ளலாம். விலைகளுக்கும், விபரங்களுக்கும் இம்முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள். தமிழ் கிறிஸ்தவ வாசகர்களை ஊக்குவிக்க குறைந்த விலையில் தமிழ் மற்றும் ஆங்கில நூல்களையும் இவர்கள் விற்கிறார்கள்.**

| | |
|---|---|
| 1689 விசுவாச அறிக்கை | ரூபா 70.00 |
| சிறுவர்களுக்கான வேத உபதேசம் | ரூபா 40.00 |

**4போதகர்களுக்கும், சபைகளுக்கும் குறைந்த (Discount) விலையில் தரப்படும்.**



*Diakrisis Book Service,*
*The Grace Evangelical Church,*
*19 Rajasinghe Road, Colombo 6, Sri Lanka*
*(Phone & Fax: 503519)*

# நூல் அறிமுகம் - 'தேவனுடைய இராஜ்யம், ஆயிரம் வருட அரசாட்சி'

தமிழகத்தில் வாழும் ம. பிரேம்குமார் என்பவர் இந்நூலை எழுதியுள்ளார். கடைசிக்காலம் பற்றிய விளக்கங்களுடன் இந்நூல் வெளிவந்திருக்கின்றது. இந்நூல் -பியூச்சரிச டின்பென்சேஷனல் கோட்பாட்டை- நிராகரித்து எழுதப்பட்டிருக்கிறது; அதாவது வெளிப்படுத்தல் விசேஷத்தின் மூன்றாம் அதிகாரத்திற்குப் பிறகு வரும் அதிகாரங்கள் இனித்தான் நடக்கப் போகின்றன என்ற விளக்கத்தை அடியோடு ஆசிரியர் நிராகரிக்கிறார். அக்கோட்பாட்டின் ஒன்றுக்கு மேற்பட்ட கிறிஸ்துவின் வருகை, அவரது இரகசிய வருகை, இரண்டுக்கு மேற்பட்ட உயிர்த்தெழுதல்கள், இவ்வுலகில் அமையப் போவதாக அவர்கள் கருதும் இஸ்ரவேலை மையமாகக்கொண்ட கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சி, கர்த்தர் இரண்டுவிதமான மக்களைக் கொண்டிருக்கிறார், கர்த்தரின் திட்டத்தில் திருச்சபை ஒரு தற்காலிக இடைச்செருகல் ஆகிய போதனைகளனைத்தையும் வேத விளக்கங்களுடன் இந்நூல் நிராகரிக்கிறது. அதுவரையில் இதன் விளக்கங்கள் நல்ல பயனுள்ள முயற்சி.

தேவ இராஜ்யத்தைப்பற்றிய விளக்கத்துடன் ஆரம்பிக்கும் இந்நூல் திருச்சபையே தேவ இராஜ்யம் என்ற விளக்கத்தைத் தருகிறது. திருச்சபை என்ற பெயரைப் பயன்படுத்தி கர்த்தரின் 'தெரிவு செய்து கொள்ளப்பட்ட மக்களையே' தேவ இராஜ்யமாக நூலாசிரியர் அடையாளம் காண்கிறார். அப்படி ஒரு விளக்கம் திருச்சபைக்கு இருப்பது உண்மைதான். ஆனால், திருச்சபை என்ற பெயரை நூலாசிரியர் 'கர்த்தரின் மக்களைக்குறிப்பதாக மட்டும்' பயன்படுத்தியிருப்பதால் அவர் உலகில் கண்ணால் காணக்கூடியதான கிறிஸ்து எழுப்பியிருக்கும் திருச்சபையை அலட்சியப்படுத்துபோல் இருக்கிறது. தேவ இராஜ்யமும் திருச்சபையும் ஒரே பொருளைக்குறிக்கும் இரு வார்த்தைகள் என்ற ஆசிரியரின் முடிவு பொருந்தாது. திருச்சபை (Ekklesia -Called out and assembeld together) என்ற வார்த்தை உலகில் நாம் கண்களால் பார்க்கக்கூடியதாக இருக்கும் திருச்சபையைக் குறித்தே வேதத்தில் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 115 க்கு மேற்பட்டவற்றில் 99% உள்ளூர் சபைகளைக் குறித்தே பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, தேவ இராஜ்யத்திற்கும் இந்தத் திருச்சபைக்கும் இடையில் overlap இருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது உலகில் காணப்படும் திருச்சபைகள் அனைத்தும் விசுவாசிகளை மட்டுமே கொண்டிருக்க பாடுபட வேண்டியிருந்தபோதும் அவற்றின் அங்கத்தவர்கள் எல்லோரும் நிச்சயமாக பரலோகம் போவார்கள் என்று நாம் உறுதியாக சொல்ல முடியாது. ஏனெனில், ஆத்துமாக்களின் இருதயத்தைக் கர்த்தரே அறிந்திருக்கிறார். இருந்தாலும், உலகில் காணப்படும் மெய்த்திருச்சபைகள் கிறிஸ்து நேசிக்கும் திருச்சபைகள். வெளிப்படுத்தல் விசேஷத்தில், ஏழு திருச்சபைகளின் மத்தியிலும் நான் நடக்கிறேன் என்று கிறிஸ்து சொல்லியிருப்பதைக் கவனியுங்கள். ஆகவே, தேவ இராஜ்யம் என்பது தேவனுடைய மக்களின் இருதயத்தில் நடக்கும் கர்த்தரின் ஆட்சி என்ற விளக்கமே சரியானது, பொருத்தமானது.

ஆயிரம் வருட ஆட்சி பற்றி எழுதும் ஆசிரியர் அதை எழுத்துபூர்வமாக விளக்காமல் நீண்டதொரு காலத்தைக்குறிக்கும் அடையாளம் என்கிறார். அப் 'பொற்காலம்' இப்போது நடந்து கொண்டிருக்கும் சபையின் காலம் என்று விளக்குகிறார். வேதம் போதிக்கும் கர்த்தரின் முன்குறித்தலை ஆசிரியர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிகின்றது (பக்கம் 44). ரோமன் கத்தோலிக்க மதத்தை கிறிஸ்தவத்தின் ஒருபகுதியாக குறிப்பிட்டிருப்பது தவறு (58). பரிசுத்த ஆவியை பல அளவுகளில் விசுவாசிகள் பெற்றுக்கொண்டார்கள் என்று கூறியிருப்பது தவறாக விளங்கிக்கொள்ள இடமளிக்கிறது. பல முறைகளில் கொடுக்கப்பட்டார் என்று எழுதியிருக்கலாம். மேலே நாம் பார்த்த குறைபாடுகளைத் தவிர ஏனைய பகுதிகள் மூலம் ஆசிரியர் விளக்கும் பல உண்மைகள் பயனளிப்பதாக இருக்கின்றன. கவனத்துடன் ஆராய்ந்து வாசிக்க வேண்டிய நூல். **81** பக்கங்கள். விலை ரூபாய் **30/-. ELS** ல் பெறலாம்.

**இப்போது முதன் முறையாக தமிழில் வெளிவந்திருக்கின்றன.**

# 1689 விசுவாச அறிக்கை

**(இந்திய ரூபாய் 24.00)**

# சிறுவர்களுக்கான வேத உபதேசம்

**(இந்திய ரூபாய் 14.00)**

தபால் செலவு தனி. 25 க்கு மேற்பட்ட தொகை ஆடர்களுக்கு குறைந்த விலையில் (Discount) விற்கப்படும். இந்தியாவில் இருப்பவர்கள் மட்டும் இவ்விரு நூல்களையும் கீழே தரப்பட்டுள்ள இந்திய முகவரிக்கு காசோலையோ அல்லது மணியார்டரோ அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

*Reformed Baptist Publications*
*22 T. P. K Main Road*
*Pykara, Madurai 625004*
*Tamil Nadu. S. India*
*Phone: (452) 371659*

வெளிநாடுகளில் இருப்பவர்கள் எமது நியூசிலாந்து முகவரிக்கு பேங்க் டிராப்ட் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

1689 விசுவாச அறிக்கை - NZ$8.00
சிறுவர்களுக்கான வேத உபதேசம் - NZ$5.00

பேங்க் டிராப்டை "Sovereign Grace Church Trust" என்ற பெயரில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

*Sovereign Grace Publications*
*P O Box 62 159, Sylvia Park, Auckland, New Zealand*
*Phone: 64 09 272 8061/Fax: 64 09 272 8032*

மலர் 8 ஜூலை - செப்டெம்பர் 2002 இதழ் 3


1. ஆயிரம் வருட அரசாட்சி

2. 1689 விசுவாச அறிக்கை

3. நூல் அறிமுகம் – I

4. பரலோகம் போனவன் திரும்ப முடியுமா?

5. கிறிஸ்தவ கோட்பாடுகள்

6. சபைப் பிதாக்கள் – II

7. வெளிப்படுத்தல் – ஒரு விளக்கம்

8. இயேசு நரகத்திற்குப் போனாரா?

9. ‘பேர்கட்டரி’ (Purgatory) உண்டா?

10. 1 கொரிந்தியர் 12–14

11. நூல் அறிமுகம் – II


Te Rau Herald Print